கல்கி

KALKI 27-1-80 90 காசு





தாணுவின் கார்ட்டூனில் கிரிக்கெட் வீரர்கள்


மன்னவன் வந்தானே!
மயங்கியே நின்றனே!!
மாலையிடும் மன்னவன்
வந்தானே.
மகிழ்ச்சியோடு
சாரதா'ஸின் பட்டுப்
புடவையில் உன்
எழிலைக் கண்டானே.
மயங்கியே நின்றனே.
மனம் கவர் மன்னன்
மனம் மயங்க வைப்பது
சாரதா'ஸின்
முகூர்த்த
பட்டுப் புடவைகள்
சாரதா'ஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் ; 27077
SARATHA'S
MADRAS & TRICHY
சாரதா'ஸ் சென்னையிலும் திருச்சியிலும் மட்டுமே.
வேறு எங்கும் கிளைகள் கிடையாது.

Kalki Shopping Page

Kalki Shopping Page

கிரிக்கெட் மைதானத்தில் தாணு-

சிதம்பரம் ஸ்டேடியம் பொங்கலன்று இரிக்கெட் ரஸிகவெள்ளம் ஸ்டேடியத்தில் முண்டியடித்துப் பாய்ந்து சென்று இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது!

''பால் பொங்கிச்சா?'' என்று வீட்டைப் பிடித்த ஒருவர் கேட்டார்!

''ஓ! கபில் பந்து நன்னு பொங்கிப் பிரவஹிச்சுண்டிருக்கு! நாலு விக்கெட் அவருக்கு! நாலு காட்ச் கிர்மானிக்கு!''

• • •

''நம்ம மெட்ராஸ் Crowd ரொம்ப Noisy Crowd தான்!

''ஆமா! ஒவ்வொருவர் கரத்திலும் ஒரு டிரான்ஸிஸ்டர் அலறிண்டிருக்கு!'' என்று பட்டென்று பதில் வந்தது!

• • •

கார்ட்டூனிஸ்ட் தாணுவைக் 'கல்கி'க்காகச் சிதம்பரம் ஸ்டேடியத்துக்கு அழைத்துச் சென்றோம்.

காப்டன் கவாஸ்கர் 92 ரன்களை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தார்! கிரிக்கெட் பிரஸிடெண்ட் அறையில் டி. வி. யில் கவாஸ்கர் செஞ்சுரி எட்டுவதை கிரிக்கெட் சங்கத் தலைவர் திரு எம். ஏ. சிதம்பரம், கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு தலைவர் திரு சின்னசாமி, பரோடா மகாராஜா ஆகியோர் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். முதல் நாள் ஆட்டம் முடியவே கவாஸ்கர் 92 ரன்களோடு மைதானத்தை விட்டு விலகினார். ஆனால் கார்ட்டூனிஸ்ட் தாணுவோ டி வி பார்த்துக் கொண்டிருந்த மூவரையும் தம் 'பென் ஸ்கெட்ச்' புத்தகத்தில் வரைந்து தள்ளி விட்டார்!

• • •


ஸ்டேடிய நாற்காலி ஒன்றில் அமர்ந்து சுவாரசியமாகப் பாகிஸ்தான் உதவி காப்டன் மஜீத்கான் ஆங்கில நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் நாவலைப் படித்துக் கொண்டிருக்கும்வேளையில் அவரை 'ஸ்கெட்ச்' செய்து கொண்டு விட்டார் கார்டூனிஸ்ட்!

• • •

இந்தியக் கோஷ்டியின் பெவிலியன் அறையில் இந்தியக் கோஷ்டி காப்டன் கவாஸ்கர், விசுவநாத், கபில்தேவ் ஆகியோருக்கு 'மஸாஜ்' பணி நடந்து கொண்டிருந்தது. மஸாஜ் செய்யும் அறையிலிருந்து துண்டைக் கட்டிக் கொண்டு வெளி வந்த காப்டன் கவாஸ்கரைப் பேட்டி காண வேண்டும் என்

---

1. இம்ரான்கான் ரன் அவுட்





நதும், ''பத்து நிமிஷம் இருங்க! நான் டிரஸ் செய்து கொண்டு வந்து விடுகிறேன்!'' என்று ஓடினார்.

காப்டன் கவாஸ்கரிடம் கேள்விக் கணைகள் தொடுத்த வேளையில் தாணு கர்மமே கண்ணாக 'ஸ்கெட்ச் புக்'கில் வரைந்து தள்ளிக் கொண்டிருந்தார்!

''சுனில்! உங்களுக்கு பம்பாய் டெஸ்டில் வெற்றி கிட்டியதற்குப் பாராட்டு!'' என்று அவரது கையைக் குலுக்கினேன்.

'நன்றி' என்ற கவாஸ்கரிடம் ''நீங்கள் டெலிவிஷனைப் பார்த்துக்கொண்டிருங்கள். அதற்குள் ஸ்கெட்ச் பண்ணி விடுகிறேன்!'' என்றார் தாணு.

''படமில்லாத வெறும் டி. வி.யையா பார்த்துக்கொண்டிருக்கச் சொல்கிறீர்!'' என்றார் கவாஸ்கர் சிரித்துக் கொண்டே!

காப்டனை அசையாமல் இருக்கும்படி 'டிரில்' வாங்கினார் கார்ட்டூனிஸ்ட்!

''தங்கள் மனைவி, சகோதரியோடு வந்திருக்கிறீர்களா?''

''என் பெற்றோர்கள் வந்திருக்கிறார்கள். சகோதரி கவிதாவும் (விசுவநாத்தின் மனைவி) வந்திருக்கிறாள். மனைவி மார்ஷனில் பம்பாயில் வீட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்!''

''தங்கள் மகன் படத்தை முன்பு கல்கியில் வெளியிட்டிருந்தோம். அவன் எப்படி இருக்கிறான்?''

''ரோஹன் பள்ளிக்கூடம் போய் வருகிறான். அவன் அப்பாவுக்கு ஐந்து கஜம் தூரத்திலிருந்து வேகமாகப் பந்து வீசித் திணற அடிக்கிறான். அவன் 22 கஜ தூரத்திலிருந்து வீசினால் நான் வெளுத்து வாங்கலாம்!'' என்கிறார் கவாஸ்கர் நகைத்தபடியே!

'' சென்னையிலே 'Good opener' இல்லேன்னு நீங்க முன்பு சிலேடையாகக் கூறிக் குறைப்பட்டீர்கள், இப்போ உங்க குறை நீங்கியிருக்கும்னு நம்பறேன்!''


''நாளைக்கு செஞ்சுரி போட்டப்புறம் பாராட்டுங்கள்!'' என்றபடியே படத்தில் தம் கையெழுத்தை இட்டுத் தருகிறார்.

● ● ●

பாகிஸ்தான் கிரிக்கெட் குழுவின் மானேஜர் நீதிபதி சாத் சாவுத் ஜன் இந்திய விருந்துபசாரத்தைப் பாராட்டித் தள்ளுகிறார்!

''எங்க நாட்டுக்கு இந்தியக் கோஷ்டி வந்தப்போ செய்த விருந்துபசாரத்தை உங்

2. மஜீத்கானின் பவுண்டரி ஷாட்



களது இந்திய விருந்துபசாரம் 'பிட்' பண்ணி விட்டது!'' என்கிறார் நீதிபதி சாந் சாஹுத் ஜன்.

● ● ●

காலை வேளையில் பாகிஸ்தான் குழு பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. 'பிட்ச்' groundsmen அவரிப்பிடம் வந்து, ''எங்களோடு வந்து நின்று படம் எடுத்துக்கொள்கிறீர்களா?'' என்று கேட்டதும் மனமுவந்து அவர் அவர்களோடு நின்று படம் பிடித்துக் கொண்டார். அவர் எளிமை பலரது மனத்தைக் கவர்ந்தது.

● ● ●

'பிட்ச்' எப்படி இருக்கும் என்பதைப் பற்றி பிட்ச் தயாரிப்புக் கமிட்டியாளரிடம் வினவியபோது, ''மூன்று நாட்களுக்கு பிட்ச் Batsmen's Paradise. வெள்ளிக் கிழமை உணவு வேளைக்குப் பிறகு பிட்சில் பந்து 'டர்ன்' ஆகும். நாலாம் நாள் லஞ்ச் வேளை வரை பனி விழுவதினால் பாட்ஸ்மனுக்கு உதவும். நாலாம் நாள் மதியமும் ஐந்தாம் நாளும் சுழன் பந்து வீச்சாளருக்கு உதவும்'' என்றார் அவர்.

● ● ●

முதல் தடவையாகத் தமிழ் பத்திரிகை 'குங்குமம்' சார்பில் குங்குமமிட்ட பெண்மணி இந்துமதி பிரஸ் பாக்ஸை அலங்கரித்தாள்!

''இதுவரை ரசிகர்களோடு அமர்ந்துதான் நான் மாட்ச் பார்த்திருக்கேன். இப்பொழுது தான் முதல் தடவை பிரஸ் பாக்ஸுக்கு வருகிறேன்!'' என்றார் இந்துமதி.

பிரஸ் பாக்ஸில் டிக்கி ரத்னாகர் வேடிக்கைத் துப்பாக்கியில் பேப்பரைச் சுருட்டிப் போட்டுச் சிலரைச் 'சுட்டு'த் தள்ளிக் கொண்டிருந்தார், வேடிக்கையாக! இவர் இதுவரை 104 டெஸ்ட்களை விமரிசித்திருக்கிறார்.

இவரைக் கவர்ந்த 'திரில்லிங்' டெஸ்ட்கள் 1948-49ல் இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுக்கும் இடையில் இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட்கள், 1976 டிரினிடாட் டெஸ்ட், 1976ல் மேற்கிந்தியத் தீவில் நடந்த மூன்றாவது டெஸ்ட் ஆகியவை.

● ● ●


சிதம்பரம் ஸ்டேடியத்தில் முதல் டெஸ்ட் அறிமுகம் சந்திப் பட்டேல். இவர் இந்தியாவின் 149வது ஆட்டக்காரர். 1966ம் வருஷத்துக்குப் பிறகு இந்தியக் கிரிக்கெட் குழு ஒரே ஒரு விசேஷ சுழல் பந்து வீச்சாளரோடு ஆடுவது இதுவே முதல் தடவை.

இதுவரை கபில்தேவ் 89 டெஸ்ட் விக்கெட்களைச் சரித்திருக்கிறார்! ஐந்தாவது டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் கபில்தேவுக்குக் கிடைத்த விக்கெட்கள் நாலு!

இதே முதல் இன்னிங்ஸில் கிர்மாணி நாலு காட்ச்களை அபாரமாகப் பிடித்து 'சபாஷ்' பெற்றார். இவர்டெஸ்டில்விக்கெட்கீப்பிங்கில் இன்ஜினியர் ரிகார்டை முறியடித்திருக்கிறார்!

● ● ●

பாகிஸ்தான் கிரிக்கெட் குழுவில் அழகு மன்னன் இம்ரான் கான் சிதம்பரம் ஸ்டேடி





யத்தில் Back Pain காரணமாக ஆடுவாரா மாட்டாரா என்ற கேள்விக் குறி நிலவியது. நல்லவேளையாக அவர் உடல் சீராகி ஆடி அனைவரையும் மகிழ்வித்தார். எல்லா இளம் பெண்களின் பார்வையும் அவர் பக்கம் திரும்பியிருந்தது!.

• • •


ஒவ்வொருவருக்கு ஒரு விநோதப் பழக்கம் இருக்கும். சிக்கந்தர் பக்த் ஸ்வெட்டரை அணிந்து கொண்டே முதல் பந்தை வீசி வருகிறார்! பிறகு இரண்டாவது பந்தில் தான் தம் ஸ்வெட்டரைக் கழற்றி அம்பயரிடம் கொண்டு போய்க்கொடுக்கிறார்! இந்த விநோதப் பழக்கம் விடாமல் தொடர்ந்தது அதிசயம்!

• • •


இந்தியக் காப்டன் முதன் முறையாக சென்னை சிதம்பரம் ஸ்டேடியத்தில் சதம் கண்டிருக்கிறார். இது இவரது 23வது செஞ்சுரி. பட்டாசுகள் வெடித்தன. ரஸிக மக்கள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்தார்கள். அதுவும் முதல் விக்ஸர் காப்டன் கவாஸ்கரிடமிருந்தே கிடைத்தது! -குண்டுமணி


(அடுத்த இதழில் முடியும். தாணு கார்டூன்களும் ஆக்ஷன் ஃபோட்டோக்களும் வரும்.)

⌘ 166 ரன்கள் எடுத்த காப்டன் காவஸ்கரின் ஆக்ஷன்



⌘ முதாஸர் நஸரைக் கிர்மானி 'காட்ச்' பிடித்து 'அவுட்' ஆக்குகிறார். போட்டோ: பாலாஜி


ஆளும் கட்சி
ஆதரவுக் கட்சி
(இ) காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகள்
நான் என்னத்துக்கு இவங்களைக் கவிழ்க்கப் போறேன்?
கொர.. கொர.. கொர..
கொர.. கொர
சரண்சிங் தவறுகள்
ஜனதா பொருளாதாரம் பற்றிய பொய்ப் பிரசாரம்


ஓம் இந்திராய நமஹ!
ஓம் இந்திராய நமஹ!
ஓம் இந்திராய நமஹ!
ஓம் இந்திராய நமஹ!

1980 ஜனவரி 27
சித்தார்த்தி தை 13
மலர்: 38 இதழ்: 26



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

முதல் நான்கு நாட்கள்

“நானே நானா? யாரோ தானா? மெல்ல மெல்ல மாறினேனா?'' என்று பிரதமர் பாடிக்கொண்டிருந்தால் அது பொருத்தமாகத்தான் இருக்கும்! போகி பண்டிகையன்று அவரது வானொலி பிரசங்கம் மதுரமாக இருந்தது. ''ரணங்கள் ஆற்றப்பட வேண்டும்'' என்றார். அவர் பேச்சே நெருக்கடி கால ரணங்களைக் கூட ஆற்றும் வல்லமை உடையதாக இருந்தது!

பிரதமர் அமைத்துள்ள அமைச்சரவையும் நம்பிக்கை அளிப்பதாகவே உள்ளது. அதில் சஞ்சய் அண்டு கம்பெனியைக் காணோம்! பன்ஸிலால், சுக்லா யாருமேயில்லை! அந்த அளவில் ஒரு நிம்மதிப் பெருமூச்சும், ஆர். வி. நிதி அமைச்சர் ஆனதில் மகிழ்ச்சிப் பூரிப்பும் ஏற்படுகிறது. வாழ்த்துகிறோம்!

அரசியல் ரீதியான கருத்து வேற்றுமைகள் ஒரு புறமிருப்பினும் ஆர்.வி.யின் ஆற்றலை யாரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. தமிழகத்தைத் தொழில் துறையில் இரண்டாம் இடம் பெறச் செய்தவருக்கு இன்று அனைத்து இந்தியாவின் பொருளாதாரத்தையே உயர்த்துகிற வாய்ப்பு கிட்டியுள்ளது. தொழில் துறையில்தான் அவருக்கு நாட்டம் அதிகம் எனினும் நிதி அமைச்சராக இருந்து கொண்டு ஒருங்கே தொழில் துறைக்கும் தேசப் பொருளாதாரத்துக்கும் அவர் அதிகமாகப் பணியாற்ற முடியும் என்ற பிரதமரின் கணிப்பு சரியானது. தாற்காலிகமாகத் தொழில் துறையையும் ஆர். வியிடமே விட்டு வைத்திருப்பதிலிருந்து நிதி அமைச்சரின் கருத்துக் கிசைவான தொழில் அமைச்சர் அமைய வேண்டும் என்பதில் பிரதமர் குறியாக இருக்கிறார் என அனுமானிக்கலாம்.

ஆப்கானிஸ்தான் பிரச்னையில் இடறி விழுந்திருக்கிறார் பிரதமர். அயல் நாட்டுப் படையெடுப்பை ஆதரிக்க முடியாது என்று கூறிய கையோடு 'கார்மால் அழைத்ததன் பேரில்தானே ருஷ்யா படையெடுத்திருக்கிறது?' என்றும் அவர் கேட்பதில் முரண்பாடு இருக்கிறது. ஆபத்தும் உள்ளது. நாளைக்கு இந்த நாட்டில் உள்ள சிலபல மாஸ்கோ பக்தர்கள் இங்கு புரட்சி விதை தூவுகிறார்கள், பிரஷ்னேவை உதவிக்கு அழைக்கிறார்கள். ருஷ்யப் படையும் வந்து விடுகிறது என்றால் 'இவர்கள் அழைத்துத்தானே அவர்கள் வந்தார்கள்' என்று கூறிக்கொண்டிருக்க முடியும்? எழுச்சியோ புரட்சியோ அந்தந்த நாட்டு மக்களின் உள் விவகாரங்களை அவர்களே தீர்த்துக் கொள்ள விடுவதுதான் நல்லது. ருஷ்யா செய்துள்ளது வடிகட்டின ஆக்கிரமிப்பு அன்றி வேறில்லை.

ஜனதா ஆட்சியில் பொருளாதாரம் அடியோடு சீரழிந்து போயிற்று என்ற பிரதமரின் 'நோபாலை' ராமகிருஷ்ண ஹெக்டே 'ஸிக்ஸர்' அடித்து விளாசியிருக்கிறார். 79 ஜூலை வரை பொருளாதாரம் எப்படி அபிவிருத்தி அடைந்தே வந்தது என்பதற்குப் புள்ளி விவரங்கள் காட்டி, அதன்பின் ஏற்பட்ட சீர்குலைவுக்கு இந்திரா காந்தி உள்பட ஜனதாவின் வீழ்ச்சிக்கு சதி செய்த அனைவருமே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். நேர்மையான அரசியல் கிரிக்கெட் ஆடுமாறு பிரதமரைக் கோருகிறோம்.

இவை ஒரு புறமிருப்பினும் ஹைதராபாத்தில் பத்திரிகையாளரிடம் பேசுகையில் 'நெருக்கடி நிலை பிரகடனம் பண்ணும்படி எனக்கு யாரும் கண்ணி வைத்து விடமுடியாது; அந்த வலையில் நான் விழமாட்டேன்' என்று பிரதமர் கூறியிருப்பதை வரவேற்கிறோம். திருவனந்தபுரத்தில் மது விலக்கு பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், 'பணக்காரர்கள் குடித்துச்சாவேன் என்றால் அது அவர்கள் பாடு; ஆனால் ஏழைகளைக் காப்பது அரசின் கடமை' என்றது பொன்னான வார்த்தைகள்.

எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கும்போது, 'பகலின் தோவா, பகலேதானா? மெல்ல மெல்ல மாறுவாரா?' என்று தான் நமக்கும் பாடத் தோன்றுகிறது!

பெண்கள் பேசுவதற்கு பட்டுப் புடவையை விட சிறந்த 'டாபிக்' வேறு இருக்க முடியுமா? அதிலும், ராதா சில்க் மானேஜிங் டைரக்டர் திரு ஆர். கே. ராமன் அவர்கள் "எங்கள் ஷோ ரூமுக்கு வந்து சுற்றிப் பாருங்கள். நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளை யெல்லாம் தாராளமாகக் கேளுங்கள்" என்று அனுமதி தந்து பாகஸ்தர்களில் ஒருவரான திரு. பாவா அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தாலும் வைத்தார். சென்னையில் பிரபல வங்கி ஒன்றில் பணிபுரியும் குமாரி பாரதியும், மயிலாப்பூரில் வசிக்கும் திருமதி. விஜயலட்சுமியும் திரு. பாவாவை கேள்வி வெள்ளத்தில் மூழ்கடித்தே விட்டனர்.

விஜயலட்சுமி: ஆரணி, தர்மாவரம், காஞ்சிபுரம் என்று பல பெயர்களில் சேலைகள் விற்கப்படுகின்றனவே உண்மையில் இவைகளுக்குள் உள்ள வித்தியாசம் தான் என்ன? அகல நீளத்திலா, தரத்திலா... பின் எதில்?

பாவா: முக்கிய வித்தியாசம் தரத்தில் தான். எடை கூடுதல் குறைச்சல் இருக்கும். சரிஜை, ஓரிஜை என்பதிலும் வித்தியாசம் உண்டு. உதாரணமாக தர்மாவரம் சேலைகளில் சரிகை கொஞ்சம் மட்டமாக இருக்கும். ஆரணி, காஞ்சிபுரம் சேலைகள் நல்ல சரிகை.

பாரதி: பட்டு வகையில் வித்தியாசம் இருக்குமா?

பாவா: ஒரே பட்டுத்தான். எடை வேண்டுமானால் கொஞ்சம் கூடும் குறையும்.

விஜயலட்சுமி: காஞ்சிபுரம் சேலைகளில் முக்கிய குறையே அவற்றின் கனம்தான். கனம் குறைவாகப் பட்டுச் சேலைகளைத் தயார் செய்ய முடியாதா?

பாவா: முடியாதம்மா. ஏனென்றால் காஞ்சிபுரம் சேலைகள் சரிஜையால் ஆனவை. நல்ல சரிகை. கூலியும் மிக அதிகம். கனமாகத்தான் இருக்கும்.

பாரதி: புது டிசைன்களை அறிமுகப்படுத்துகிறீர்களே, அவற்றை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்?

பாவா: தினசரி பல நூறு கஸ்டமர்களிடம் பழகுகிறோம். பேசுகிறோம். அவர்களின் ரசனையைத் தெரிந்து கொள்கிறோம். இதே போல் பல ஊர்களிலும் சர்வே செய்கிறோம். எங்களுக்கென்று பிரத்யேக இன்ஸ்பெக்டர்கள், டிஸைனர்கள் இருக்கிறார்கள். அடிக்கடி கூடி அவர்களுடன் விவாதிக்கிறோம். முடிவு செய்கிறோம்.

பாரதி: ஒரு டிசைன் நன்றாகப் போகும் என்ற எதிர்பார்ப்பில் மார்க்கெட்டுக்குக் கொண்டுவருகிறீர்கள். துரதிர்ஷ்டவசமாக உங்கள் எதிர்பார்ப்பு பொய்யாகிப்போகிறது என்று வைத்துக் கொள்வோம். விற்காமல் தங்கிப் போகும் புடவைகளை என்ன செய்வீர்கள்?



⌘ திரு பாவாவிடம் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றனர்

பாவா: புது டிசைன் என்றதும் அப்படியே கொண்டுவந்து கடையில் நிரப்பிவிடுவோம் என்று நினைக்கிறீர்கள்? இல்லை. எந்த டிஸைனைக் கொண்டுவர இருக்கிறோமோ அதில் ஒன்றிரண்டு சேலைகளை மட்டுமே தயாரித்து அதைப் புடவையோடு புடவையாக வைத்து விடுவோம். வெளியில் சொல்ல மாட்டோம். கஸ்டமர்கள் பார்க்கும்போது இந்த டிசைன் பிடித்திருக்கிறது என்று தெரிந்தால், அதே போல் வேண்டும் என்று டிமாண்ட் இருந்தால் உடனே அந்த டிஸைன் புடவைகளை நிறைய எண்ணிக்கையில் தயாரித்துக் கொண்டு வருவோம். எனவே, விற்காமல் தங்கிப் போகும் வாய்ப்பு மிகவும் குறைவு.

விஜயலட்சுமி: இப்போது வெள்ளி விலை ஏறிவிட்டதால் சரிகை விலையும் ஏறி அது புடவை விலையில் பிரதிபலிக்கிறது. அதனால் புடவை வாங்கும் சக்தியில் ஏதும் மக்களிடையே மாற்றமிருக்கிறதா?

"ராசி!"யான ராதா!





✖ புடவை ஆராய்ச்சியில்
குமாரி பாரதி,
திருமதி விஜயலக்ஷ்மி

பாவா: பட்டுப் புடவை விலை ஏறியிருப்பது உண்மை. அதே சமயம் இங்குதான் மூன்று மாதத்துக்கு ஒரு முறை டிஸைன்கள் மாறிக் கொண்டிருக்கின்றனவே. மக்கள் தொகை கூடுவதுதான் நமக்குத் தெரியுமே. பின் என்ன? விற்பனையில் குறை வில்லை.

பாரதி: என்னைப் போல 'வொர்க்கிங் கேர்ள்ஸ்' பட்டுப் புடவைகளை விட நைலக்ஸ் போன்றவற்றையே அதிகம் நாடுகிறார்கள். உங்களிடமிருந்து ஒரு புடவை வாங்கும் பணத்தில் நாலு நைலக்ஸ் ஸாரி வாங்கிவிடலாம். மேலும் கல்யாணம் போன்ற விழாக்களில்தான் பட்டுப் புடவை முக்கியத்துவம் அடைகிறது. அதுகூட இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. டிரஸ்ஸுக்குப் பணம் செலவழிப்பதை எதிர்க்கும் மனப் பக்குவம் இன்றைய இளைய சமுதாயத்தில் வளர்ந்து வருகிறது. இதே நிலை நீடித்தால் உங்கள் தொழிலின் எதிர் காலம் எப்படி இருக்கும்?

பாவா: ஒவ்வொன்றாகச் சொல்கிறேன். முதலில் ஒரு பட்டுப் புடவை விலையில் நான்கு நைலக்ஸ் வாங்கலாம் என்றீர்கள். ஏன், இப்பொழுதுதான் 120 ரூபாயிலிருந்து பட்டிலேயே பிரிண்டட் புடவைகள் மிகவும் பாபுலராகி வருகின்றதே. இந்தியாவில் தயாராகும் இத்தகைய புடவைகள் போல உலகிலேயே வேறெங்குமில்லை. அடுத்து மனப் பக்குவ மாற்றத்தால் எதிர் காலம் எப்படி இருக்கும் என்பது கேள்வி. என் அனுபவத்தில் சொல்கிறேன். நமது கலாசாரத்தோடு ஒன்றாக இணைந்துவிட்ட பல அம்சங்களில் பட்டுப் புடவையும் ஒன்று. எந்த மாடர்ன் எண்ணங்களும், அவற்றின் பாதிப்பும், பெண்களின் பட்டுப் புடவை ஆசையை ஒன்றும் செய்ய முடியாது. எவ்வளவு தான் விலை அதிகமானாலும், சாப்பாடு என்றதும் அரிசிதான் நமக்குத் தெரிகிறதே தவிர, அதைத்தான் நாம் உபயோகப் படுத்துகிறோமே தவிர வேறில்லை. அதே போல்தான் பட்டுப் புடவையும். எதிர் காலம் எங்களைப் பொறுத்தவரை பிரகாசமாகவே தெரிகிறது.

விஜயலட்சுமி: நிறைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறீர்களே, அவர்களை மிகவும் கவர்வது எது? நமக்கும் அவர்களுக்கும் புடவையைத் தேர்ந்தெடுக்கும் ரசனையில் என்ன வித்தியாசம்?

பாவா: பிரிண்டட் புடவைகள், ஸ்கார்ஃப்புகள், டிரஸ் மெட்டீரியல்கள் இவை

பலசரக்கு

அவன்: "E. N. T. ஸ்பெஷலிஸ்டான உன் அப்பா ஏதோ இலவச வைத்தியத் திட்டம் அறிவிச்சிருக்காராமே..?"

இவன்: "ஆமாம்! காது மூக்கு இரண்டுக்கும் அவரிடம் வைத்தியம் செய்து கொள்பவர்களுக்குத் தொண்டை வைத்தியம் இலவசம்!"

—உ. ராஜாஜி

ஜப்பான் நாட்டில் புதிய ஆண்டான 1980-ம் ஆண்டை "குரங்கு" ஆண்டாகக் கொண்டாடு கிறார்கள். முந்திய ஆண்டை "ஆடு" ஆண்டாகக் கொண்டாடினார்கள். அடுத்து வரும் ஆண்டை "சேவல்" ஆண்டாகக் கொண்டாட இருக்கிறார்கள். ஜப்பானில் அப்படி என்ன விலங்குகளுக்கு அவ்வளவு முக்யத்துவம்?

புத்தபிரான் உயிர் நீத்த பொழுது 12 பிராணிகள் அவர் அருகே வந்து கண்ணீர் விட்டு அழுதனவாம். முதலில் எலியும், பிறகு நரியும் அதன் பின்பு அடுத்தடுத்து புலி, முயல், டிராகன் (தீ கக்கும் பறக்கும் பாம்பு) நல்லபாம்பு, குதிரை ஆடு, குரங்கு, சேவல், நாய், காட்டுப்பன்றி ஆகிய விலங்குகள்தான் அவையாகும். அந்த விலங்குகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் ஜப்பானியர்கள் ஒவ்வொரு ஆண்டிற்கும் வரிசையாக அந்த 12 விலங்குகளின் பெயர்களை மாற்றி, மாற்றி வைத்து வருகிறார்கள்.

—கமுதி திராவிடமணி

"உங்க படத்திலே அடிக்கடி டிராபிக் கான்ஸ்டேபிளைக் காட்டறீங்களே, ஏன்?"

"படத்திலே எக்கச்சக்கமான திடீர்த் திருப்பங்கள் இருக்கு பாருங்க...!"

—விளாத்துக்கடவு ரவி



அங்கே ரொம்பவும் பாபுலர். விதவிதமாக பூப்போட்ட துணிகளில் டிரஸ் செய்து கொள்வதையும், ஃபர்னிஷிங் செய்து கொள்வதையும் அவர்கள் மிகவும் விரும்புகிறார்கள். நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் முக்கியமாகத் தேர்ந்தெடுக்கும் கலரில் இருக்கிறது. அமெரிக்கா, ஸ்விட்ஜர்லாந்து போன்ற நாடுகளில் டார்க் கலர்களை நேசிக்கிறார்கள்.

பாரதி: கோத்து வாங்கின பார்டர் சாயம் போகிறது. பாதுகாப்பது கஷ்டமான விவகாரமாக இருக்கிறது.

விஜயலட்சுமி: அதிலும் பச்சைக் கலர், அஜந்தா புளூ நிச்சயம் சாயம் போகிறது.

பாவா: அது ஒரு காலம். இப்போ சாயம் போவதில்லே, அதற்கான புதிய கெமிகல்ஸ் உபயோகிக்கப்பட்டு வருவதால்.

விஜயலட்சுமி: பட்டுப் புடவைகளுக்கு 'மாட்சிங் பிளவுஸ்' கிடைப்பது அரிதாக இருக்கிறது. எவ்வளவு முயன்றாலும் சரியான கலர் கிடைப்பதில்லே. என்ன செய்வது? பொருத்தமான ரவிக்கைத் துண்டுகளை நீங்களே ஏன் செய்து தரக் கூடாது?

பாவா: எங்களது தொழில் பூராவும் கைத்தறி. புடவைத் தறியை மாற்றி ரவிக்கைக்காகத் தனியாகத் தறி போடுவது கஷ்டமான காரியம். இரண்டு மூன்று நாள் இதற்காக மெனக்கெடும். கூலியும் அதிகம்.

விஜயலட்சுமி: பட்டுப் புடவையைப பாதுகாக்க சில உபயோகமான டிப்ஸ் கொடுங்களேன்.

பாவா: துவைக்கும்போது பிழியக் கூடாது. சோப்புப் போட்டு நீண்ட நேரம் ஊற வைக்கக் கூடாது. வெயிலில் புடவையை உலர்த்தக் கூடாது. காயவைக்கும்போது கரையை ஒரு பக்கமாக வைக்காமல் நீட்டி உலர்த்த வேண்டும். டிரை க்ளீனிங் போட்டால் பட்டுப் புடவையின் ஆயுள் குறையும்.

பாரதி: புடவை ஏற்றுமதி செய்ய ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் போன்ற அரசாங்க அமைப்பு ஏதேனும் செயல் படுகிறதா?

பாவா: தனித் தனியாகத்தான் செய்கிறோம். ஆனால் எஸ். டி. ஸி. மூலம் வரும் ஆர்டர்களை அவர்களின் விருப்பத்தின் பேரில் நாங்களும் நெய்து தருகிறோம்.

ராசி புடவைகளைப் பற்றி திரு பாவா தெரிவித்த சில விவரங்கள்:

கும்பகோணத்திலிருந்து ஒன்பது மைல் தொலைவில் உள்ள இஞ்சிக்கொல்லை என்னுமிடத்தில் ராசி புடவைகள் உருவாகின்றன.

400 தறிகள் இங்கே வேலை செய்கின்றன. ஏற்றுமதி சேலைகள் நெய்வதற்கென்றே பிரத்யேகமாகக் கட்டப்பட்ட 150 தறிகள் இருக்கின்றன.

குடிசைத் தொழிலாகவும் இவர்களின் புடவைகளைத் தயாரிக்கிறார்கள்.

ஒரு புடவை தயாரிக்கப் பத்து, பன்னிரண்டு நாட்கள் ஆகும்.

மாதத்துக்கு மூன்று புடவைகள் நெய்தால் அவன் ஒரு எக்ஸ்பர்ட்.

உரையாடல் ஏற்பாடு, கட்டுரை

விஜய் நிர்மல்

புகைப்படங்கள்: **எல். எஸ். மணியன்**

பிரிட்டனைச் சுற்றி கடலில் 2,50,000 கப்பல்கள் மூழ்கிக் கிடப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.
—தி பீவர் புக் ஆஃப் தி ஸீஸைட்

4

THE TREASURE HUNTING CRAZE

The British Government has paid out in one year more than £ 100,000 to treasure hunters whose finds of gold and silver have been kept by museums. Most of these discoveries made with the aid of electronic metal detectors are pouring in at the rate of 30,000 a year. Special magazines and treasure hunting clubs cater for the enthusiast's needs.

(நன்றி ஹிந்து 13-1-80)

மூவரும் புறப்பட்டார்கள். கார்ட்டூன் படம் போல விடுவிடுத்தார்கள். சோலைக்குள் ஓடினார்கள். கோவிலுக்குள் புகுந்தார்கள். இங்கே, அங்கே பார்த்தார்கள். கடைசியில் பாதுகாப்பு இடத்திற்கு விரைந்தார்கள். — இதோ!

பள்ளத்தில் ஆள் தோண்டிக் கொண்டிருக்கிறான். மல்லிக்!



—ஏய், நிறுத்து! (டிஷ்யூம்)

மல்லிக் நிமிர, மூவரும் ஒரு வெஸ்டர்ன் மூவியில் வரும் மூணு வக்கிரர்கள் போல நின்றார்கள்.

—ஏறு மேலே!

இப்போதான் போனார்கள், எப்படித் திரும்பி வந்தார்கள்? மேலே ஏறினான்.

மூன்று பேரும் ஏக மனதாக அவனை நோக்கித் திரும்பினார்கள்.

—யார் நீ?

-சொன்னேனே!

—பெயரைச் சொல்லு!

—மல்லிக்!

—இந்திக்காரனா?

—இல்லே. தமிழ்தான். மல்லிகேசுவரன்.

—அப்பா மல்லிகேசுவரா! உனக்கு இந்த வேலை எதுக்கப்பா?

—ஆராய்ச்சியாளன் சொன்னேன்லே?

—யாரு அனுமதி கொடுத்தது?

பெல்பாட்டம் பேசினார்.

அவன் பேசவில்லை.

—படிச்சவன் மாதிரி இருக்கியே, பெர்மிஷன் வாங்க வேணும்?

சந்தனக் கீற்று அதிகமாகச் சாடுகிறார். குறிப்பு எடுத்துக் கொண்டான்.

—அதுக்கு நேரமில்லே!

—அப்போ பொய்தான் சொல்றே!

—எதைத் தேட வந்தே? தங்கமா, புதையலா?

—எலும்புக் கூடு கிடைத்த மயான பூமியிலே புதையல் கிடைக்குமாய்யா?

—கிடைக்கும்னு நினைச்சிருப்பே!

—ஒருமையிலே பேசறீங்களே! மரியாதை வைக்க மாட்டீங்க போல இருக்கே!

-திருடனுக்கு என்னய்யா மரியாதை வேண்டிக்கிடக்கு?

பெல் பாட்டம் உடனே புகுந்து. —நான் மரியாதையோட கேட்கிறேன். ஐயா, பெரியவரே! தாங்கள் இங்கே தோண்டுவதன் காரணம் என்ன?

இளப்பப்பட்டவன் போல் மல்லிக் பார்த்தான். —ஆராய்ச்சின்னு எத்தனை தடவை சொல்றது?

—என்ன ஆராய்ச்சி?

—குடும்பக் கிளை ஆராய்ச்சி!

—என்னது?

—Family tree! genealogy!.... Roots படிச்சிருக்கீங்களா?

பெல் பாட்டத்தின் கண் சிறிது சுருங்கியது. அதில் அக்கறை அரும்பியிருந்தது. அவர் ரூட்ஸ் படித்தவர்.

—ரூட்ஸ்? என்றார் சந்தேகத்தில்.

—ஆமாம்; ரூட்ஸ்! அலெக்ஸ் ஹேலி எழுதியது.

—அதுக்கும் இந்த எலும்புக் கூட்டுக்கும் என்ன சம்பந்தம்?

—இருக்கு! புகழ் பெற்ற பிரிட்டிஷ் குடும்பம் பால்மர்ஸன் குடும்பம். இங்கிலாந்திலே அவங்களோட வம்சாவளி கண்டு பிடிச்சாச்சு. இந்தியாவிலே தொடரச் சொல்லி அவரோட வாரிசுக்காரங்க என்கிட்டே கேட்டிருக்காங்க. எட்டாவது பால்மர்ஸன் இந்தியாவுக்கு 1841ல் கப்பல் ஏறிப் புறப்பட்டதாகக்

கடைசிச் செய்தி. அப்புறம் எதுவும் தெரியாது. அவரைத் தேடித்தான்...

—குழியிலே பால்மர்ஸன் கிடைப்பாரா?

சந்தனக் கீறல் கிண்டலாகக் கேட்டார்.

—நிச்சயமாகக் கிடைப்பார்! அந்த பாட்ஜ் இருக்கே, எச். எம். எஸ். ஜே....

-அது என்ன சொல்லுது?

கீற்றுக்காரரின் இடது பேசினர்.

—ஹிஸ் மெஜஸ்டீஸ் ஷிப்னு சொல்லலாமில்லே!

ஒரு கணம் தயக்கம்!

எனினும் சந்தனக் கீற்று ஒநாய்-ஆடு நியாயத்தில்தான் இருந்தார். —உங்க ஆராய்ச்சி யெல்லாம் உங்க வீட்லே வச்சுக்குங்க! இது சர்க்கார் பூமி! இதிலே எதுவும் செய்யக் கூடாது. முதல்லே இடத்தைக் காலி பண்ணுங்க! ஆமாம்!

அவரது இடது இங்கே புகுந்தார்.

-அப்படி ஆராய்ச்சி செய்யணும்னு சீஃப் செக்ரடரிக்கு எழுதுங்க. பெர்மிஷன் கொடுப்பாரு.

கொடுப்பாரு என்பதைக் கொடுக்கமாட்டார் என்ற தொனியில் சொன்னார்.

பேச்சு, ஒரு கோடைத் தூறலைப் போல் படக்கென்று நின்று விட்டது.

மல்லிக் தோல்வி உணர்ச்சியுடன் ப்ரீஃப் கேஸை எடுத்து நடக்க,

மூவரும் பேச்சில்லாமல் நின்றார்கள். ரொம்ப தூரம் போன பிறகு 'ரூட்ஸ்னு என்ன?' என்று இரண்டு பேர், பெல் பாட்டத்தைக் கேட்டார்கள்.

1841 அக்டோபர் 11. சூரியன் இல்லாத வானம் ஒருகூடுபோல் மூடியிருக்க, இமேஜ் எமரல்ட் அலைகள் ஆடிய, பரந்த கடல் வெளியில் அந்தப் பாய்மரக் கப்பல் நொண்டிக் கொண்டிருந்தது.

அந்தக் கப்பல் முக்காலும் ஒரு நோயாளி! காற்று, மழை, புயல், எல்லாம் போகக்கி எடுத்ததில் சீக்கிரத்தில் ஒரு வயோதிகம் அடைந்திருந்தது.

அதன் பாய்மரங்கள் அழுக்கேறி கிழிந்திருந்தன. நூலேணிகள் இற்றுப் போய் பலமில்லாமல் தொங்கின. அதன் உடல் முழுதும் கடல்பாசியும், செடிகளும் ஒட்டி பூஞ்சாளம் பூத்திருந்தன.

பாசி மூடிய ஒரு பிரம்மாண்ட அண்டா தண்ணீரில் மிதப்பது போல், அந்தக் கப்பல் நோயாளித்தனமாகத் தள்ளாடி மிதந்தது.

அதனது மாலுமிகளில் 88 பேர் ஸ்கர்வியால் பீடிக்கப்பட்டு கீழ் தளங்களில் கஷ்டித்துக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்தவ முறையில் ஒரு பூமிப்புதைப்பை விரும்பிய 14 பேர்களின் சடலங்கள் நல்ல கித்தான் துணியில் தைக்கப்பட்டு, கீழ்த் தளத்தில் ஓரமாக முடங்கிக் கிடந்தன.

துவஜங்களும், விட்டங்களும் உடைந்து போனதில் துணைப் பாய்மரங்களை இழுத்துக் கட்டுவதற்கு வசதியில்லாமல் ஒரு கனத்திற்காக நான்கு சடலங்களை கித்தானோடு பாய்மர நுனிகளில் தொங்க விட்டிருந்தார்கள்.

மரணத்திற்கும் நோய்க்கும் போக எஞ்சிய எழுபது பேர்களும் கிட்டத்தட்ட நடைப்பிணங்களாக இருந்தார்கள். பாதி பேரிடம் ஸ்கர்வியின் ஆரம்ப அறிகுறிகள். மீதிப்பேர் கப்பலின் எண்ணற்ற மனித




பலத்தைப் பெரிதும் எதிர்பார்க்கும் பணிகளில் ஈடுபட்டு தொய்ந்து போயிருந்தார்கள்.

கப்பல் முழுதும் நாற்றம் அடித்துக் கொண்டிருந்தது.

துவஜத்தின் மேலே காவல் பிளாட்பாரத்தில் இருந்த ஃப்ரட்ரிக் டோரி — தெற்குத் தென்கிழக்கே வானம் இருள்கிறது. புயல் புயல்! என்று கத்த,

அதை மேல்தளத்திலுள்ள யாரும் செவி கொடுத்துக் கேட்பாரில்லை. ஏனெனில் ஏற்கனவே ஒரு சீரான கோபக் காற்று அவன் வார்த்தைகளைப் பிடுங்கி ஓடிக்கொண்டிருந்தது. கடல் அலைகள் ஆத்திரமாகக் கப்பலை உருட்ட, அடிக்கடி கடல்நீர் தலைக் கொம்பை மூழ்கடித்து மேல் தளம் முழுவதையும் வெள்ளமாக்கிக் கொண்டிருந்தது.

ஸ்திர மற்ற கை, கால்களுடன், ஃப்ரட்ரிக் டோரி கயிறு வலையில் இறங்கி வர, திடீரென்று அவயவங்கள் இற்றுப் போய் பிடிப்பு இழந்து இருநூறு அடிகளுக்குக் கீழே விழுந்தான்.

-ஸார்! டோரி இறந்து விட்டான், என்று காப்டன் பால்மர்ஸனை எழுப்பி ஒரு மாலுமி அறிவித்த போது, கப்பல் வங்காள விரிகுடாவில் உழுது கொண்டிருந்தது.

மேஸ்திரிகளும் உதவியாளர் சிலரும் ஒரு கொத்தாக நிற்க, சந்தனக் கீற்று சரபேந்திரன் பிலிம்ஃபேரின் முகப்பு பொம்மை தெரியாமல் பாதியாக மடித்து, அன்றைய உபதேசங்களை வழங்கிக்கொண்டிருந்தார்.

அம்பது வயது மேஸ்திரியின் முகத்தை விட அவரது தலைப்பா ஜோராக ஆடியது.



அவரை ஒட்டி வந்திருந்த இதரத் தலைப்பாக்கள் அவரைப் போலவே அதே டிகிரியில் தலையாட்டினார்கள். அசப்பில் பார்த்தால் ஒரே உடம்பில் எல்லாரும் ஒட்டி யிருக்கிறார்களோ என்ற தோற்றம்.

அவர்கள் கலைந்து போனதும் ஆர்க்கியாலஜிகல் கிருஷ்ணன் சாவிக் கொத்தைச் சுழற்றிக் கொண்டு வர,

சம்பகா இடதுசாரி நிழல் வழியாகக் காப்பி எடுத்து வந்து கொண்டிருந்தாள்.

—பிரமாதம் என்று மூன்று பேரும் சொல்ல

—அந்த ஆள் என்ன ஆனார்? என்று கேட்டாள் சம்பகா.

—யாரைச் சொல்றே? என்றார் கிருஷ்ணன்.

—புது ஆசாமி வந்தாரே! அவர்!

—விரட்டியாச்சு!

சரபேந்திரன் துந்துபி முழங்கச் சொன்னார்.

—ராவே ஓடிட்டான். எத்துவாளி! கோவில் சாமி பத்திரமாக இருக்காரா பார்த்தாயா?

—அவரைத் தூக்க லாரியும் கிரேனும் வேணும்! இந்தூர் மணல்லே லாரி வராது.

—சொல்லாதே ஹெலிகாப்டர்லே வந்து எடுத்துட்டுப் போயிடுவான். களவாணிங்க. இப்படித்தான் திருநாபுரத்திலே! சுத்திச் சூழ வயலு....

சம்பகா டம்ளர்களையும் சொம்பையும் ஒரு கொத்தாக விரல் விட்டுக் கோத்துக் கொண்டாள்.

வீட்டை நோக்கிப் போகும்போது மனத்தில் ஒரு படம் வந்தது. அந்தப் புதிய ஆசாமி கையில் ப்ரீஃப் கேஸ் தூக்கிக் கொண்டு, தலையைத் தொங்கவிட்டவாறு போவது போல.

நான் ஏன் சொல்லிக் கொடுத்தேன்? என்னாலேதானே அவரை விரட்டினாங்க!

ஒருவேளை எத்துவாளியா இருப்பாரோ? முகம் அப்படியா இருந்தது?

—கோபி, நான் சொல்றதை முழுக்கக் கேட்டுக்கடா! அப்புறம் கிராஸ் கேள்வி கேளு சொல்றேன்...

ஏற்கெனவே நொடிக்கு ஒரு நோணாவட்டம் சொல்றவன். இதற்கு விடுவானா? கையைத் தூக்கிக் கட்கத்தைச் சொறிந்து கொண்டே, கேள்விகளால் துழாவினான்.— சொல்லுடா! ப்ராக்டிக்கலாச் சொல்லு!

—முதல்லே இந்த ரிப்போர்ட்டைப் பாரு. ஹிந்துவிலே வந்திருக்கு.

— The treasure hunting craze!

—ஆமா! இங்கிலாந்திலே நிறையப் பேர் இதிலே ஈடுபட்டிருக்கா. கிளப்கள் கூட வச்சிருக்கா! அதனாலே நான் என்ன சொல்றேன்னா...

-உன்னைப் பைத்தியம்னு சொல்லக்கூடாது.

—ஆமா, நம்ப நாட்டிலே இந்த மாதிரி ஹன்டிங் பரவ ஆரம்பிக்கலே! அதனாலே நான் சொல்லப் போறது புதுசா இருக்கும்.

—சரி, சொல்லு!

—இங்கிலாந்திலே புறப்பட்ட கப்பல் ஹிஸ் மெஜஸ்டீஸ் ஷிப் ஜூலி காலண்ட் கனிநாகலாபுரத்துப் பக்கத்திலே கடல்லே மூழ்கி யிருக்கணும்.

—எப்படிச் சொல்றே?

—ஒரு ஊகம்!

—ஆதாரம்?

—இருக்கே அந்த எலும்புக் கூடு! அதோட பாட்ஜ்! இப்ப நாகலாபுரம் போனேனே! அந்தப் பித்தளைக் குழாய் வயது 100க்கு மேலே இருக்கும்னு சொன்னாங்க! அது எனக்குப் பெரிய க்ளூ!

—அந்த பாட்ஜுக்கும் கப்பலுக்கும் என்ன சம்பந்தம்?

—அதிலே எச். எம். எஸ். ஜே.னு போட்டிருக்கே!

—வெறும் ஜே தானே இருக்கு. ஜுலி காலண்ட் இல்லியே!

—அதுதான் எனக்குக் கொஞ்சம் உதைப்பு.

—இதுவே பொருந்தல்லியேடா!

—அதைத்தான் ஆராயணும்னு என் விருப்பம். அந்த பாட்ஜ் என் கையிலே கிடைச்சா..

நிருத்த, கோபியின் அந்த கேலித் தொனியும், அந்த மூக்குக் கோணலும் மல்லிக்கை தாராசமாகக் குடைந்தன. பேசாமல் இருந்தான்.

கோபி திரும்ப ஆரம்பித்தான்.

—சரி! அந்த பாட்ஜ் ஜுலி காலண்ட்டைச் சேர்ந்ததுன்னு வச்சுக்க! அதுக்கு மேலே உனக்கு என்ன தெரியப் போறது?

—வழி இருக்கு கோபி! அந்த பாட்ஜ் மட்டுமில்லே! ஒரு டெலஸ்கோப் குழல் கூட அங்கே கிடைச்சிருக்கு. இந்த இரண்டும் வச்சிருந்தவர் அந்தக் கப்பலுடைய காப்டனாகத்தான் இருக்கணும்.

—அப்படியே வச்சுக்க! ஜுலி காலண்ட் காப்டன் எதுக்கு கனிநாகலாபுரம் வரான்?

—அஞ்சு காரணம் இருக்கு!

—சொல்லு!

—ஒன்று, புயல், ரெண்டு கலகம், மூணு நோய், நாலு கொள்ளை, அஞ்சு, எதிரியின் தாக்கு.

கோபி கொஞ்சம் நிமிர்ந்தான். அவன் முகத்தில் எப்போதும் நையாண்டியின் சாயலாக ஒரு தசை வாயையும், மூக்கையும் சேர்த்து இழுத்துக் கொண்டிருக்கும். இப்போது திடீரென்று அது வேலை செய்யவில்லை. மல்லிக் சொல்வதில் சிறிது விஷயம் இருக்கும் என்று தோன்றியது. எதுவும் இல்லாவிட்டாலும் அவன் ஆராய்ச்சிக்காவது மதிப்புக் கொடுக்க வேண்டும்.

—நீ சொல்றதை ஒத்துக்கறேன். ஆனா ஒரு சின்ன விஷயம் (கோபி)

—சொல்லு!

—பிரிட்டிஷ் தளபதிங்க கப்பலைப் பெண்டாட்டி மாதிரி நினைக்கிறவங்க! ஆபத்து வந்தாலும் கடைசிவரை அதோடதான் இருப்பாங்க.

மல்லிக் நிமிர்ந்தான். —நான்தான் கப்பல் மூழ்கடித்து என்கிறேனே. அஞ்சு காரணத்திலே ஏதோ ஒண்ணு கப்பலை மூழ்கடிச்சுடுத்து. படகிலே தப்பி இருக்காங்க! அல்லது நீச்சல் அடிச்சிருக்காங்க! கரையிலே வந்து செத்திருக்காங்க!

கோபியின் உள் புலன் அதை ஆமோதித்தது.

அவன் மசிந்து விட்டான் என்பது மல்லிக்கிற்குத் தெரிந்ததும்,

—அது மட்டுமில்லேப்பா! இன்னும் விஷயம் இருக்கு!

என்று சொல்லித் தரையில் ஒரு பெரிய காகிதத்தை விரிக்க ஆரம்பித்தான்.

கோபியின் கண்கள் பெரிதாக விரிந்தன.

(தொடரும்



ஔவையாரின் ஒரே ஆலயம்!

வி.ஜானகி

உங்களுக்குத் தெரியுமா? ஔவையாருக்குத் தமிழ் நாட்டில் ஒரு ஆலயம் இருக்கிறது!

ஊர் ஊராகச் சென்று ஊரிலுள்ளோர் கொடுத்த கூழை விரும்பி உண்டு, அந்த இடத்திலேயே கவி பாடி, ''கூழுக்குப் பாடி'' என்ற சிறப்புப் பெயரும் பெற்றவர் அந்த மூதாட்டி.

தம் தமிழ்ப் பணி முடித்து, ஆய்ந்து ஓய்ந்து தெய்வமாக அமர்ந்துவிட்ட அந்த ஔவைப் பாட்டிக்கு ''ஔவையார் அம்மன் கோயில்'' என்ற பெயரில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோயிலுக்கு 10 கிலோ மீட்டர் தொலைவில், சுமார் 2100 ஆண்டுகளுக்கு முன் அமைந்தது ஓர் ஆலயம்!

சுற்றிலும் நெல் கொழிக்கும் வயல்கள், வாழை, தென்னை, பாக்கு மரங்கள், இப்படி பச்சைப் பசேலென்ற மிகவும் ரம்மியமான சூழலில், தோவாளை ஆற்றங்கரையில் தாடக மலையின் அடிவாரத்தில், எவ்வித ஆரவாரமுமின்றி அச்சிறிய கோயில் காட்சி தருகிறது.

ஔவையாருக்கெனத் தமிழ்நாட்டிலுள்ள ஒரே கோயில் இதுதான்!

முருகன் மாட்டுக்காரச் சிறுவனாக நாவல் மரத்தின் மேலமர்ந்து, ஔவைப் பாட்டியைப் பார்த்து, ''சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா'' என்று கேட்டு, பின்னர் வள்ளி, தெய்வானை சமேதராக மயில்மேல் காட்சி தந்த ஸ்தலமும் இதுதான். கோயிலின் முன் இன்றும் அந்த நாவல் மரம் பிரம்மாண்டமான வடிவில் கிளைகள் பரப்பி, கனிந்த நாவல் பழங்களை உதிர்த்தவாறு நிற்பதைக் காணும்போது நம் உடல் புல்லரிக்கிறது.

சுற்றிலும் வீடுகளே இல்லாத நிலையில், பல நூறு ஆண்டுகளாக எவ்வித விளம்பரமுமின்றித் தனித்து நிற்கும் இச்சிறிய ஆலயம் இன்றுசில தனியார் மேற்பார்வையிலுள்ளது. மின் விளக்குகள்கூடப் போடப்படாத நிலையில், சிறிது சிறிதாகச் சிதிலம் அடைந்து வரும் இக்கோயிலின் கர்ப்பக்கிரகத்தில், கையில் ஒரு பிரம்புடன் சிலை வடிவில் காட்சி தருகிறார் ஔவையார் அம்மன். அவருக்கு வலதுபுறம் குழந்தை வடிவில் காட்சி தருகிறார் முருகன். இந்த ஆலயத்தில் விநாயகர், அகத்தியர், சுடலைமாடன் ஆகிய கடவுளரின் சிலைகளும் உள்ளன.

ஆடி, தை, மாசி மாதங்களில் செவ்வாய் கிழமைகளில் மட்டும் இந்த ஆலயம் விழாக் கோலம் கொள்கிறது. திருவனந்தபுரம், கன்னியாகுமரி, நாகர்கோயில், இரணியல், தக்கலை போன்ற சுற்றுவட்டார நாஞ்சில் நாட்டு மகளிர் கூட்டம் அந்நாட்களில் இக்கோயிலை முற்றுகையிடுகிறது. காரணம், இங்கு வந்து ஔவையார் அம்மனை வழிபட்டு நேர்ந்துகொண்டால் கணவன் மனைவி தகராறுகள் தீர்ந்து பிரிந்த தம்பதி ஒன்று சேர்கின்றனர். மக்கட் பேறு இல்லாத பெண்களுக்குக் குழந்தைகள் பிறக்கின்றன!'

கூழுக்குப் பாடிய ஔவைப் பாட்டிக்குப் பெண்கள் இன்றும் கூழையே நிவேதனமாகப் படைக்கின்றனர்! அரிசி மாவு, சர்க்கரை, தேங்காய் ஆகியவை கலந்த கூழைக் காய்ச்சி அதனையே இக்கோயிலில் படைக்கின்றனர்.

நாகர்கோயிலிலிருந்து தாழக்குடி செல்லும் பஸ்ஸில் சென்றால், தாழக்குடியிலிருந்து ஒரு மைல் தூரம் நடந்து இக்கோயிலை அடையலாம்.

வருடத்தில் மேற்கூறிய மூன்று மாத செவ்வாய்க் கிழமைகளில் மட்டும் இக்கோயிலுக்குக் கிடைக்கும் வருமானம் சுமார் 300 ரூபாய். மற்ற நாட்களில் வருமானத்துக்கு எவ்வித வழியும் இல்லை. ''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்று பாடிய ஔவையாரின் ஆலயமும் இன்று வறுமையிலேயே வாடுகிறது!

※ பிரும்மாண்டமான நாவல் மரம்



ஒற்றன் 4X-1

சித்திரக்கதை: புஜ்ஜாய்

4



"குளுகுளு" சட்டை

"ஏர்கண்டிஷண்ட்" - அதாவது "குளுகுளு" வசதி செய்யப்பட்ட அதிசய சட்டையை சோவியத் நிபுணர்கள் தயாரித்து இருக்கிறார்கள்.

பூமிக்கு அடியில் ஆழமான சுரங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள், வெப்பத்தின் காரணமாக வியர்த்துப் போகிறார்கள். அதைத் தவிர்க்கும் வகையில் அதிசயமான சட்டை (உள் அங்கி) ஒன்றை உக்ரைன் குடியரசில் உள்ள நிபுணர்கள் உருவாக்கியுள்ளனர். இந்தச் சட்டைத் துணிக்குள் நுண்ணிய பிளாஸ்டிக் குழாய்கள் இழையோடுகின்றன. இவற்றின் வழியாகக் குளிர்ந்த காற்று ஓடுகிறது. இந்த சட்டையை அணிந்து கொண்டால் தொழிலாளர்களுக்கு 'ஜில்' என்று இருக்கும். வேலை செய்வதற்கு "குளுகுளு" சட்டை இடைஞ்சலாக இருக்காது. இடுப்பில் அதிர்வு ஏற்படாத வகையில் விசேஷ அமைப்பும் இருக்கிறது. விண்வெளி விஞ்ஞானத்தின் ஒரு நற்பயனாக விளைந்தது இது. கால் நெருப்பு, பாய்லர்கள், என்ஜின்கள் போன்ற இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இந்தக் 'குளுகுளு' சட்டை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். —(பிரஸ்-இந்தியா)



தொடரும்.

●

உங்கள் நடை அழகாக அமைந்து மற்றவர்களைக் கவர வேண்டுமா? அதற்கு சுலபமான ஒரு வழி உண்டு.

நீங்கள் அடியெடுத்து வைக்குமுன் உங்கள் முன்னால் ஒரு நேர்க் கோட்டைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். முதலில் வீட்டுக்குள் ஒரு கோட்டைப் போட்டுக் கொண்டு அதன் மேல் நடந்து பயிற்சி செய்து கொண்டால் பிற்பாடு தானே கோடில்லாமல் நடக்க வந்துவிடும்.

மூன்றாம் மனிதர் யாரையாவது இம்மாதிரி நேர்க் கோட்டின் மீது நடக்கச் சொல்லித் தூரத்திலிருந்து பாருங்கள். சாதாரணமாக அவரது நடையில் இல்லாத அழகு இப்போது தெரிவதைப் பார்க்கலாம்.

உங்கள் நடையும் நேர்த்தியாக அவ்வாறே நேர் கோட்டில் இருக்குமானால் கட்டாயம் அழகோடு விளங்கும்.

ஆதாரம்: நியூஸ்வீக்
தகவல்: சத்தி எச். ஜப்பார்

●

ஜப்பானில் புதுவகை பூண்டு பயிரிட்டு வெற்றி கண்டிருக்கிறார்கள். அது இப்போது பழக்கத்தில் உள்ள பூண்டைப்போலவே வாசனையுடன் இருக்கும். இதைப் போலவே பலனும் அளிக்கும், ருசியும் இதுபோலதான் இருக்கும். ஆனால் இதைச் சாப்பிட்டவர்கள் வாயிலிருந்து பூண்டு நாற்றம் வீசாது!

-டிட்பிட்ஸ் -ராமசாமி

●



ஒரு வெள்ளாடு வேங்கையாகிறது

குடியின் கேட்டை வலியுறுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள படம். ஆனால் கதையைக் கோட்டை விட்டு விட்டார்கள். குறிக்கோளுமே குதறப்பட்டிருக்கிறது. பாத்திரங்களெல்லாம் பாட்டிலும் கையுமாகவே காட்சியளிக்கிறார்கள். குடியினால் நாசமான குடும்பத்தின் பெண்ணாகக் குடியை வெறுத்துக் கதாநாயகனோடு மோதிச் சவால் விடும் பாத்திரமாக வருகிறார் சரிதா. அவரது உழைப்பு விழலுக்கு இறைத்த நீர்.

சோடா புட்டியில் கள்ளச் சாராயம் அடைத்து விற்கும் கம்பெனியை சிவகுமாருக்காகப் பினாமியாக ஆரம்பித்துக் கொடுக்கின்றனர் விஜயகுமார் கோஷ்டியினர். அது பத்திரத்தில் கையெழுத்து வாங்கிப் பிறகு போலீசாரால் அதன் முதலாளியான சிவகுமார் கைதாவதற்காகத்தான். தன் சோடா பாக்டரியில் என்ன நடக்கிறதென்பது அவருக்குத் தெரியவே தெரியாதா?

பாத்ரூமில் படுக்கை அறை. முதலிரவு அறையில் பலாத்காரம், டெலிவிஷன் காட்சியில் நாட்டிய நாடகம் என்று எப்படியெல்லாமோ போகிறது கதை.

சிலம்பக் கோல் பிடித்து சிக் உடை அணிந்து கௌரவ நடிகையாக நாட்டியமாடி வரும் வீராங்கனை வேடத்தில் வருகிறார் ஸ்ரீப்ரியா. கொடுமையைக் கண்டு குமுறும் பெண் கூட்டத்துக்குப் பயிற்சி தரும் அவரும் சிஷ்யைகளும் மூன்று சிப்பாய்கள், ஓர் ஏழையை அடியோ அடி என்று அடித்துக் கொல்லுவதைப் பார்த்துக் கொண்டே நிற்கிறார்களே ஏன்? சிலம்பச் சுழற்றமெல்லாம் நாட்டியமாடத்தானா?

சிவகுமார் லாகவமாக நடித்திருக்கிறார். பெண்களிடம் பேசக் கூச்சப்படும் சுபாவத்தை —காதலியிடம் தன் எண்ணத்தைத் தெரிவிக்க அவர் தவிக்கும் கட்டங்கள் அந்த நாணல் கோணல்களெல்லாம் இயல்பாக இருக்கிறது.

விஜயகுமாரை 'அங்கிள் அங்கிள்' என்று அழைத்துக் கொண்டு வரும் கட்டிப் பெண்ணின்.... வனிதாவா அவர்? 'வெடுக்' பேச்சும் ஃப்ரீயான நடிப்பும் படத்துக்குக் கலகலப்பூட்டுகிறது. அடுத்த படத்திலேயே கதாநாயகி ஸ்தானத்துக்கு உயரலாம்.

பாம்பு நடனம் ஆடும் பெண், பிரமிக்கும்படியான அங்க நெளிவுகளுடன் ஆடுகிறார். ஆனால் க்ளைமாக்ஸ் சீனில் அதை ரசிக்க முடியாத இடத்தில் புகுத்தி... எரிச்சல்!

வல்லான் வகுத்தால்தான் அது வாய்க்காலாக முடியும். எல்லாராலும் வாய்க்கால் வெட்ட முடியுமா? அது வெட்டுக் காயமாக விகாரமாகத்தானிருக்கும். கட்டிய தாலியைக் கழற்றிக் கணவனிடமே வீசுவது பாரதப் பண்பாடாகாது. அதைக் கண்ணில் ஒத்திக் கொள்வதினாலேயோ, கேள்விக் குறியுடன் முடித்திருப்பதினாலேயோ அதன் புனிதத்தைக் கௌரவித்ததாகிவிடாது.

கதாநாயகி தன் சபதத்தில் தோற்றுத் தான் போகிறாள். வெள்ளாடு வேங்கையாகவில்லை.. விட்டில் பூச்சியாகிக் கருகித்தான் போகிறது.

நதியைத் தேடி வந்த கடல்

மகரிஷியின் மூலக் கதையை மாற்றிய திருல் திரைப்படம் பாழாகவில்லை. திருப்தியாகவே இருக்கிறது.

ஆரம்பத்திலிருந்து முடிவு வரை நல்ல டெம்போவுடன் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணைக் கொடுமைப் படுத்துவதில் உள்ள மர்மத்தை அலுப்புத் தட்டாமல் காட்டி யிருக்கிறார்கள். பஞ்சு அருணாசலத்தின் வசனம் பொருத்தமான இடங்களில் பொருத்தமான உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கச்சிதமாக இருக்கிறது.

புரொபஸராக வரும் சரத் பாபுவுக்குப் பாத்திரப் பொருத்தம் கன கச்சிதம்.

நதியாக உருவகப்படுத்தப்பட்டுள்ள கல்யாணி பாத்திரமாக — கொடுமைக்குள்ளாகும் மனைவியாக — வரும் படாபட் இப்படத்தில் பிரமாதமாக நடித்துப் பாராட்டுப் பெறுகிறார்.

பல வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் ரசிகர்களை மகிழ்விக்க வந்திருக்கிறார் ஜெயலலிதா. பழைய நடிப்புத் திறமையோடு இப்போது கூடியிருப்பது வயது. அந்தப் பழைய 'சார்ம்' எதிர்பார்க்க முடியாதது தானே! ஆயினும் அதற்கெல்லாம் ஈடு கொடுப்பது போன்ற அந்தக் கலகலப்பான, ஃபிரீயான பேச்சு — நடிப்பு அவரை விட்டுப் போய்விடவில்லை.

காமிரா மனத்தை நிறைக்கும் இயற்கைக் காட்சிகளை எடுத்துத் தள்ளி யிருக்கிறது. கதையைத் தொய்வில்லாமல் கொண்டு சென்றிருப்பதற்காக இயக்குனர் லெனினைப் பாராட்டுகிறோம். கடலைப் போல ரசிகர்கள் தியேட்டரைத் தேடி வருவார்கள்.



ஆயிரம் வாசல் இதயம்

தாமரை மணாளன் தம்முடைய கதைக்குத் தாமே திரைக் கதையும் அமைத்து வசனமும் எழுதிக் கொடுத்திருக்கிறார்.

இரண்டு பெண்கள் ஓர் ஆணைக் காதலிக்கும் வழக்கமான கதை. ஒருத்தி அல்ட்ரா மாடர்ன். மற்றொருத்தி கர்நாடகம். ராதிகாவுக்கு எந்தப் பாத்திரம் என்பதைச் சொல்லவா வேண்டும்? ஆண் கதாநாயகன் செய்ய வேண்டிய ஆட்ட பாட்டங்களை, சேஷ்டைகளை யெல்லாம் 'இச்சுக் இச்சுத் தாம்பாளம் இய்யாக் இய்யாத் தாம்பாளம்' பாட்டுப் பாடி ராதிகா செய்கிறார். அவரது சேஷ்டைகளுக்கு ஈடுகொடுப்பவர் சுதாகரா கத்தானே இருக்க வேண்டும். இருக்கிறார்!



ரோஜாரமணியின் நடிப்பில் எளிமை, இயல்பு, இனிமை எல்லாம் இருக்கின்றன.

வடிவுக்கரசி சூழ்ச்சிகள் செய்கிறார் மிடுக்கோடு — தான் தவறுதலன் என்பதைக் கடைசிவரையில் ஃபிளாஷ் பேக் முறையில் கூறிச் செந்தாமரையின் சவடாலை அடக்கி மன்னிப்புக் கேட்க வைக்கிறார்.

இளையராஜாவின் இசை இங்கிதமாக இருக்கிறது. காமிராமேன் வேணுவிடம் நன்றாக வேலை வாங்கி யிருக்கிறார்கள். அவர் உழைப்பும் வீண் போகவில்லை.

இரண்டு பெண்டாட்டிக்காரன் — தப்பு தப்பு — இரண்டு காதலிக்காரன் காட்சிகளை சினிமா மசாலாவோடு கலந்து கொடுத்திருக்கிறார்கள். குளிக்கும் காட்சிகள், கனவுக் காதல் பாடல்கள், சண்டைக் காட்சிகள் இத்யாதி உண்டு. இதயத்துக்குத் துடிப்புச் சேர்க்க மசாலா வாசனை சிலருக்குப் பிடிக்கா திருக்கலாம். ஆனால் பலருக்குப் பிடிக்குமே!

—கௌசிகன்

23

கடிதம் தமிழில் எழுதப்பட்டிருந்தது. குண்டு குண்டான கையெழுத்து. தேவ சகாயம் என்பவர் அவன் மாமியார் பஞ்ச ரத்தினத்துக்குத்தான் எழுதி யிருந்தார். மரு மகள் படிக்க அதைக் கேட்கும் நிலையில் கூட அவன் மாமியார் இப்போது இருக்க வில்லை. எனவே அகல்யா அதைப்பிரித்துப் பரபரப்புடன் படித்தாள்.

''பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சமயம் நான் உங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறேன். மறந்திருக்க மாட்டீர்கள். ஏனென்றால் ஒரு முக்கியமான காரியத்தைப் பற்றி உங்கள் கணவரிடம் பேசிப் போகத்தான் அப்போது வந்தேன். அதைப் பற்றிப் பின்னர் உங்க ளிடம் விவரமாக அவர் தெரிவிப்பதாக ஒப் புக்கொண்டிருந்தார். அப்படிச் செய்திருப் பார் என நம்புகிறேன். திருநல்லூர் கிரா மத்தில் மருத்துவத் தாதியாக வேலைபார்த்து, உங்கள் வீட்டுக்கும் வெகு காலம் மருத்துவத் தாதியாக உழைத்துக் காலமாகிவிட்ட அற் புத மேரியை நினைவிருக்கு மென்று எண்ணு கிறேன். நான் அந்த அற்புதத்தின் கூடப் பிறந்த அண்ணன். பம்பாயில் கொலா பாவில் வக்கீல் தொழில் செய்கிறவன். தங்கள் குடும்பத்திலே பல ஆண்டுகளுக்கு

பூக்குழி

லக்ஷ்மி



முன்னர் சமையற்காரியாக இருந்த காசாம் பூவை நீங்கள் மறக்கவே முடியாது. கார ணத்தை அதிகம் விவரிக்கத் தேவையில்லை. காசாம்பூவுக்கும் தங்கள் கணவருக்கும் ஏற்பட்ட தொடர்பைப் பற்றி ஆரம்பத்தில் உங்களுக்குத் தெரிநதிருக்க முடியாது. பின் னர் தெரிந்து கொண்டு விட்டீர்கள் என்பது உண்மை. காசாம்பூவுக்குப் பிறந்த குழந் தைகள் இரட்டையர் என்பது யாருக்குமே நீண்ட காலம் தெரியாதிருந்தது. காசாம் பூ கர்ப்பமாகி யிருக்கிறாள் என்பதை உணர்ந் ததும் குழந்தை இல்லாத கனகசபைக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டது. பிறக்கப் போகும் குழந்தைக்கு அவர்தானே தந்தை? ஆணாக இருந்தால் அதையே எடுத்து வளர்த்துக் கொண்டால்? மருத்துவத் தாதி அற்புத மேரிக்குத் தேவைப்பட்ட பணத்தைக் கொடுத்து இந்தச் சூழ்ச்சியில் தன்னுடன் ஈடுபடுத்திக் கொண்டு விட்டிருந்தார்.

காசாம்பூ கர்ப்பவதி என்று பிறர் தெரிந்து கொள்ளு முன் இடையென்று ஊரை விட்டே மறைந்து போனாள். பக்கத்துக் கிராமத்தில் வேறு பெயரில் தனக்குத் தெரிந்த ஒரு வீட்டில் அவளை அற்புதம் மறைத்து வைத்திருந்தாள். பிர சவ காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் மாலை காசாம்பூவுக்குப் பிரசவ வேதனை தொடங்கியது. சங்கதி கனக சபைக்குத் தெரிவிக்கப்பட்டதும் அவர் தயா ராக நாலு வீடு தள்ளி ஒரு சந்தில் தாமே ஓட்டி வந்த மாட்டு வண்டியுடன் காத் திருந்தார். நடு இரவு வேளை ஒரே பிரச வத்தில் இரண்டு குழந்தைகள். காசாம் பூவுக்குப் பிறந்தனர். அற்புதத்துக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. தாயையும் தந்தை யையும் ஒரே சமயத்தில் திருப்தி செய்து

விட இப்படி ஒரு சங்கதி நிகழ்ந்துவிட்டதே என்று ஆச்சரியம்.

முதலாவது பிறந்த ஆண் குழந்தையைக் கனகசபைக்குக் கொடுத்த வாக்குப்படியே— துணியில் சுற்றிப் பத்திரமாகத் தூக்கி வந்து இருட்டில் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக அவரிடம் கொடுத்து விட்டாள். இரண்டாவது பிறந்தவனை காசாம்பூ வளர்த்துக் கொள்ளட்டும் என்று அவளிடம் விட்டுவிட்டாள். கனகசபைக்கு உண்மை தெரிந்தால் ஆபத்து என்று பயந்து பெற்றவளின் உடல் தேறியதும் பம்பாயிலிருந்த என் வீட்டுக்கு சமையல் வேலை செய்யும் ஆளாக குழந்தையுடன், சிபாரிசுக் கடிதத்துடன் அனுப்பி விட்டாள். அற்புதத்துக்குச் சில ஆண்டுகளுக்குப் பின்பு உடம்புக்கு முடியாமல் போய்விட்டது. அப்போதுதான் எனக்கு இந்த உண்மையை விவரமாக எழுதிவிட்டிருந்தாள். எப்படியாவது நான் கனகசபையைச் சந்தித்துப் பேசி காசாம்பூவின் இளைய மகனுக்கும் சொத்தில் ஒரு பங்கு வாங்கித்தந்து உதவவேண்டும். இல்லாவிடில் குழந்தைகளை ஆளுக்கு ஒரு மூலையாகப் பிரித்து வைத்த பாவம் தன்னை வருத்தும், தன் ஆத்மா சாந்தியடையாது என்று புலம்பியிருந்தாள்.

எனக்கு இதை உடனடியாகக் கவனிக்க இயலவில்லை. கொஞ்ச காலம் கழித்துத் தான் நான் உங்கள் கணவரை நேரில் வந்து இது சம்பந்தமாகச் சந்தித்தேன். நான் ஒரு வக்கீல் என்பதினாலோ அல்லது அவரது மனச்சாட்சி உறுத்தியதாலோ வார்த்தைகள் தடித்த பின்னர் என் நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டார். தனது இளைய மகனது படிப்புக்குக் கணிசமான தொகை கொடுத்து உதவினார். பின்னர் அவன் வளர்ந்து ஆளானதும் தமது சொத்தில் ஒரு பகுதியைக் கொடுத்து அவனை வாழ வைக்கவும் சம்மதம் தந்தார். அவர் இப்போது உயிருடன் இல்லை என்பதைக் குறித்து வருந்துகிறேன். இந்தக் கடிதத்தைக் கொண்டு வருகிறவன் காமேஸ்வரன் என்ற பெயர் கொண்ட அவரது இளைய மகன். இரண்டு குழந்தைகளும் ஒரே கருவில் தோன்றினவர்கள் என்பதினால் கண்ணாடி பிரதிபலிக்கும் பிம்பங்கள் போல ஒரே அச்சாக இருப்பார்கள் — உங்கள் வளர்ப்பு மகனைப் போலவே இவன்... அதே உயரம்... மூக்கு... விழிகள்... என்ற ஒற்றுமையான தோற்றத்தில் இருப்பான். சட்டென்று இவனைப் பார்த்ததும் நீங்கள்தெரிந்துகொள்வீர்கள். உங்கள் கணவர் தமது உயிலில் இவனுக்காக ஏதேனும் சொத்து ஒதுக்கி வைத்திருந்தால் தயவு செய்து அதைக் கொடுத்துக் காமேஸ்வரனை வாழ வையுங்கள். அவர் தமது வாக்கைக் காப்பாற்ற மறந்து விட்டிருந்தால் நீங்களாவது தக்க ஏற்பாடுகள் செய்ய முன் வரவேண்டும். ஒரு பெண்ணை அநியாயமாக அழித்து ஒதுக்கிவிட்ட பாவத்துக்குப் பரிகாரம் தேட வேண்டியது அவசியம் என்று பெண்ணுவ நீங்கள் கட்டாயம் உணர்வீர்கள். தயவு செய்து காமேஸ்வரனுக்கும் கருணை காட்டுங்கள்'. இப்படிக்குத் தங்கள் தேவசகாயம்.



கடிதத்தைப் படித்துவிட்டு அவள் கையில் பிடித்திருந்த அந்தப் பத்திரிகைத் தாளையும் பிரித்துக்கோடிட்டிருந்த செய்தியைப் படித்தாள். என்ன கட்டுப் படுத்தியும் அவளையும் மீறிக் கண்ணீர் பொங்கிக் கன்னங்களை நனைத்தது. கரங்கள் நடுங்கின.

'கடலில் மூழ்கி இறந்து போனதாகப் பத்திரிகையில் சொல்லும் இந்த வாலிபர் என் கணவர் என்று எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?' ஆத்திரத்துடன் கேட்டாள். அவளது நெஞ்சு அந்

தச் சமயமே வெடித்து சுக்கல் சுக்கலாகி விடும்போல் படீர் படீர் என்று அடித்துக் கொண்டது.

இப்படிப்பட்டதொரு பெரும் சோதனையையா அவனுக்கு அவள் ஆத்தா முத்துமாரி கொடுப்பாள்? இல்லே. இல்லே... இது தவறாகத்தான் இருக்க வேண்டும். தாயே என் கணவனைக் காப்பாத்திக் கொடு அம்மா... உன்னாலும் ஆகாத அற்புதம் இல்லையே... மனம் ஓலமிட்டு கூக்குரலிட்டுப் புலம்பியது.

''நீல நிற நீச்சல் உடையில்தான் ராஜ்குமார் கடலில் இறங்கினான்.''

''எத்தனையோ பேர் அந்த மாதிரி உடை அணிந்து கொண்டிருக்கலாமே... முகம் தெரியாது போயிருந்ததாகப் பத்திரிகை சொல்லிறது. நீ நேரே அவர் உடலைப் பார்த்தாயா?'' அவள் தொண்டையைத் துக்கம் அடைத்தது.

''பார்க்கவில்லே. உயிரோடு இருந்தால் இத்தனை நாளைக்கு இங்கே வந்திருக்கலாமே— ராஜ்குமார் இறந்து போனது உண்மை.— அதனால்தான்...அவன் முடிக்கு முன் அகல்யா ஆத்திரத்துடன் இரைந்து கத்தினாள்.

''அதனால்தான் அண்ணனைப் போல வேஷம் போட்டுக் கொண்டு இப்படி ஒரு மோசடி செய்யத் துணிவோடு இந்த வீட்டுக்குள்ளே வந்தியா?'' கோபத்துடன் கொதித்தாள்.

''கனகசபை என்னையும் என் தாயையும் எப்படி மோசம் செய்திருக்கிறார்? அதைப் பற்றி யாராவது யோசித்துப் பார்த்தார்களா? உண்மை தெரிஞ்ச நாளிலிருந்து எனக்கு பஞ்சரத்தினம் அம்மாள், கனகசபை—ராஜ்குமார் — மூணு பேர் பேரிலும் வெறுப்பு. என்னையும் என் தாயையும் வறுமையில் வாடவிட்டு நிம்மதியாக இருந்த கனகசபையின் நெஞ்சைப் பிளந்து உதிரத்தைக் குடிக்கணும்னு ஒரு வெறி. பஞ்சரத்தினம் அம்மாவுக்கு நான் யார் என்பதைக் கணவன் சொல்லி விட்டுத்தான் போயிருந்தாராம். தேவசகாயம் என்னிடம் சொன்னார். அப்படியிருந்தும், தான் வளர்த்த என் அண்ணனுக்கு உண்மையைச் சொல்லாமல் அவங்க மறைச்சு வச்சாங்க. ராஜ்குமாரை நான் பஹ்ரானில் சந்தித்தபோது அவனுக்குத் தன் பிறப்பின் ரகசியம் தெரியாது என்பதைப் புரிஞ்சு கொண்டேன். அவங்க செய்த மோசடியை நினைச்சு அவங்களைப் பழிவாங்கணும்னு மனசிலே ஆத்திரம் மூண்டு எழுந்தது. ஊர் அறிய உண்மையைச் சொல்லி அவங்க பேர்த்திக்கிட்டிருக்கும் குடும்ப கௌரவத்தைக் கிழிச்சுப் போடணும்னு ஆவேசம்.''

''உன் உணர்வுகளை நான் மதிக்கிறேன். என் கணவர் மேல் உனக்கு ஏன் கோபம்?''

''கள்ளத்தனமான உறவில் ஒரு சமையற்காரிக்குப் பிள்ளையாகப் பிறந்தும் கனகசபையின் சொந்த மகனாக அந்தஸ்துடன் சமுதாயத்தின் முன் வாழ வந்துவிட்டானேன்னு அவன் மேல் வயிற்றெரிச்சல்...''

''சரி! இவங்க எல்லோரும் உன்னை வஞ்சித்தாங்க. பழிவாங்கத் திட்டமிட்டுப் புறப்பட்டு வந்தே. ஒத்துக்கிறேன். உன் வஞ்சக விளையாட்டை என்னிடமே ஏன் காட்ட வந்தே? ஏன்? நான் உனக்கு என்னகொடுமை செய்திருக்கேன்? என் பெண்மையை அழிக்க குரூரமாகத் திட்டமிட்டு உள்ளே வந்திருக்கியே... இந்த அக்கிரமத்துக்கு என்ன பதில் சொல்லப் போறே?...''

ஆவேசமாக, ஆத்திரமாக, அனலாகக் கக்கினாள் வார்த்தைகளை.

குற்ற உணர்வுடன் திகைத்தான் காமேஷ் ஒரு கணம். ''நான் செய்தது மாபெரும் தவறுன்னு இப்பத்தான் புரிகிறது. என்னவோ கணக்குப் போட்டுக் கொண்டு வந்தேன். எங்கேயோ போய் அது நிற்கிறது... நான் இது சமயம் ஒன்னே ஒண்ணுதான் செய்ய முடியும்... இன்னிக்கு ராத்திரியே இந்த இடத்தை விட்டு யாருக்கும் தெரியாம மறைஞ்சு போயிடறேன்....''

''உன் அண்ணனைப் போல வேஷம் போட்டு நடிச்சு எல்லோரையும் நம்ப வச்சுட்டு இப்போ அந்த நம்பிக்கையை நழுவ விட முடியுமா? இந்த நாடகம் இன்னும் கொஞ்ச காலம் தொடர வேணுமே...''

''எனக்குப் புரியலையே....?''

''புரியும்படி சொல்றேன் கேட்டுக்கோ. உன் அண்ணன் நாளைக்கு நடக்கப் போகும் தீமிதியில் நடப்பதாக வேண்டுதலை. அந்தப் பிரார்த்தனையை நீ செய்து முடிச்சாகணும். அப்பத்தான் உன் மோசடி அம்பலமாகாது. உன் மனசில் எழுந்த பாப எண்ணங்களுக்கும் ஒரு பரிகாரமாக இருக்கும்.''

''ஐயோ! என்னால முடியாது.... தீக்குழியிலே இறங்கினா வெந்து செத்துப் போயிடுவேன்.... நான் மாட்டேன்....'' காமேஷ் கலவரத்துடன் அரற்றினான்.

''மாட்டேன்னு யார் விடப் போறா... பூசாரி உன் கையைப் பிடிச்சுத் தரதரன்னு இழுத்துக் கொண்டு கூட நடக்கும்படி ஏற்பாடு செய்திடுவேன். உன்னைப் பற்றின விவரமான கடிதாசியை என் கையில் கொடுத்திருக்கே. இதை இப்பவே போலீசில் ஒப்படைச்சு உன் மோசடியை அம்பலப் படுத்தினால்.... நினைச்சுப்பார்...

''அதனால் ஏற்படப் போகும் அவமானம்— பழிச் சொல் எதற்கும் நான் பயந்தவள் இல்லே. உன்னை விட ஒரு பங்கு அதிக




சிவசங்கரி
எழுதும் நவீனம்
கல்கி பெப்ரவரி 17ல்
மகளிர்
சிறப்பிதழில்
ஆரம்பம்

மாகவே எனக்குத் துணிச்சல் உண்டு தெரிஞ்சுக்கோ....''

பேசிக்கொண்டே விர் என்று பின் பக்கத்துக் கதவைத் திறந்தாள். ''சிங்காரம்!'' உரத்துக் குரல் கொடுத்தாள்.

ஆத்திரமும் அழுகையுமாக ஒலித்த அந்தக் குரலில்தான் இப்பொழுது எத்தனை கம்பீரம்? முகத்தை முந்தானையால் அழுத்தித் துடைத்துக்கொண்டாள்.

அவன் பக்கம் மீண்டும் திரும்பினாள்.

''நான் கெட்டவனை ஆத்தாளின் பாதத்தில் வச்சிட்டேன். இனி கொடுப்பதும் எடுப்பதும் அவள் கருணை. ஆனால் நான் வேண்டிக் கொண்டபடி பூக்குழியில் நிச்சயம் இறங்கிடுவேன். உன்னைப் பொறுத்தவரை தாயாகக் கருத வேண்டிய அண்ணன் மனைவி மேலே கொண்ட தீய எண்ணத்தை நெருப்பிலே போட்டுப் பொசுக்க நீ கட்டாயம் பூக்குழியில் இறங்கித்தான்ஆகவேண்டும். மனசிலே மாசு இல்லாட்டா மருட்சி ஏற்படாது. பாவ எண்ணங்களுக்கு நீ மன்னிப்புக் கேட்டாக வேண்டும். நான் ஆத்தாளைத் துதிபாடி முன்னால் இறங்கறேன். நீயும் அவளையே நினைச்சுக்கிட்டு இறங்கு. அவள் உன்னைத் தன் பூப்பாவாடையால் ஏந்திக் கொண்டு மறுபக்கம் சேர்த்திடுவா... உம்...கிளம்பு'' உக்கிரமாக அவனை உறுத்துப் பார்த்தாள்.

''கூப்பிட்டீங்களா அம்மா?'' சிங்காரம் உள்ளே ஓடோடி வந்தான்.

''ஐயாவை அழைச்சுக்கிட்டுக் கோயிலுக்குப் போ. நாளைக்கு நடக்கப் போவதைப் பத்தி விவரமா பூசாரி ஐயா கிட்டே கேட்கட்டும். கொஞ்ச காலமா வெளியூரிலே தங்கிட்டதாலே அவருக்கு எல்லாமே மறந்து போயிட்டுது.''

ராணி போல என்ன மிடுக்கான பார்வை! கலங்கிய உணர்வுடன் அவளை நிமிர்ந்து பார்த்தான் காமேஷ்.

அவளது கண்கள்....! அப்பப்பா...அவன் மனத்தினுள் அச்சம் கிளர்ந்தெழுந்தது. மறுநாள் எரியப் போகும் பூக்குழியின் செந்தழல் அந்த அழகிய கண்களில் கனன்றதோ! அச்சத்தினால் விழி பிதுங்க, மெய் சோர, ஆவி ஒடுங்க நின்றான். (தொடரும்)



நான் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல என்பதைத் தெளிவாக்கினார் கோமல் சுவாமிநாதன் இந்த விமர்சகருடன் டெலிஃபோனில் பேசியபோது. ''ஒரு கோட்பாட்டினை ரசிகர் முன் வைக்கிறேன்; அவ்வளவுதான்'' என்றார்.

பார்ப்பவர்களுடைய சிந்தனையைத் தூண்டிஇருர் என்ற அளவில் கோமல் வெற்றிபெற்ற போதிலும் பிரசார இலக்கியமாகவே நாடகம் விளங்குகிறது என்பதும் கோமலுக்குத் தெளிவாகியிருக்க வேண்டும்.

அதே நேரத்தில் ''ஸ்டேஜ் ஃபிரெண்ட்ஸ்'' அளிக்கும் இந் நாடகத்தில் நாடகச் சிறப்பு பல அம்சங்களில் இருக்கிறது என்பது நமக்குத் தெளிவாகிறது.

ஒரே செட்டை மூன்று பாகங்களாகப் பிரித்து அவ்வப்போது ஒவ்வொரு பாகத்தில் நடிகர்களை உலவவிட்டு ஒளியமைப்புத் திறனால் பல்வேறு செட்டுகள் போட்டிருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியதில் புதுமை இருக்கிறது. பின்னணி இசை அளவாக அழகாக ஒலிக்கிறது. நடிப்பிலே அனைவரிடமும் அருமையாகச் செல்வது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும் அநுபவ ஆற்றலும் கடின உழைப்பும் இருக்கிறது. குறிப்பாக மதுவும் நாயர் ராமனும் எட்டிக்குப் போட்டியாக இரு துருவங்களில் நின்று சிறப்பாகச் செய்கின்றனர். வசனம் எந்த செக்குமாட்டையும் பொலிகாளையாக்கும் ஆற்றலுடன் அனல் பறக்கிறது!

இன்று ஜமீன்தார்களோ, பெரிய மிராசுதார்களோ கிராமப்புறங்களில் கிடையாது. பெரும்பான்மையாக உள்ளவர்கள், குத்தகைதாரரிடம் அல்லது இடை ஆசாமிகளிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கும் சிறிய நிலச் சுவான்தார்களே. விவசாயிகளுக்குக் கூலி அதிகம் தர முடியாதிருப்பதற்கு முக்கிய காரணம் கிராமத்திலிருக்கிறவர்கள் வாங்க வேண்டியிருக்கிற மற்ற மற்ற பொருள்களின் விலை ஏற்றத்துக்கு ஏற்ப நெல் விலை அதிகரிக்காததுதான். விவசாயம் இன்று யாருக்குமே கட்டுப்படியாகவில்லை. வேறு வழியின்றி நிலத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறவர்களே அதிகம். ஆனால் இந்த நாடகத்தில் இதுபோன்ற பிரத்யட்ச நிலையை நாம் காண முடியவில்லை. ஏதோ, மிட்டாதார் - விவசாயிகள் பிரச்னையில் விவசாயிகளின் நியாயமான உரிமைகளை மிட்டாதார் மறுத்து வயிற்றில் அடிப்பது போன்ற நோக்கில் நாடகம் வளர்கிறது. சில பல வருஷங்களுக்கு முன் ஒருவேளை பொருத்தமாக இருந்திருக்கலாம்.

சமுதாயப் பிரச்னைகளுடன் நாடகங்கள் நடப்பது அரிதாக உள்ள இக்காலத்தில் ஒரு கனமான நாடகம் அரங்கேறி, தங்கள் கோட்பாடுகளை வலியுறுத்துகிறதே என்பதால் கம்யூனிஸ்டுகள் மகிழலாம். அந்தக் கருத்துக்கள் பிடிக்காதவர்கள் நாடக உத்திகளை மட்டும் ரசித்து விட்டுப் போகலாம். அதற்கும் நிறைய வாய்ப்பு இருக்கவே செய்கிறது.

ஜாதி மத பேதமற்ற, பிறப்பால் ஏற்றத் தாழ்வுகள் அற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் நாம் அனைவருமே ஈடுபட்டிருக்கும் போது அதற்கு சுயம்பு சாஸ்திரிகள் போன்ற நாடகக் கதாபாத்திரங்கள் சற்று அசாதாரணமாகத் தோன்றினாலும் பெரிதும் துணை நிற்பார்கள். ஆர். கே. ராமன் ஜமாய்க்கிறார்.


ஆனால் ஒன்று, ஏகப்பட்ட பிரச்னைகளை ஒரே நாடகத்தில் அலசாமல் ஒன்றுக்கு மட்டும் முக்கியத்துவம் தந்து அதையும் பிரசாரமாகத் தோன்றாதபடிக்குக் கூடவே ஒட்டிவந்ததுபோல் எடுத்துச் செல்வதன்றோ நாடகாசிரியரின் சிறப்பு? — குப்புகிருஷ்ணன்



நீங்காத நினைவு

கம்பிகம்பிகம்!

மீ.ப.சோமு



சிதம்பர ராமலிங்க பிள்ளை என்றால் ஒரு காலத்தில் திருநெல்வேலி அறிஞர்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனம்! ஆழமான படிப்பு. ஆழமான சிந்தனை. வட மொழியிலும் தமிழிலும் வியக்கத்தக்க புலமை. இசை தெரியும். இனிமையான குரல். கலைகளில் எல்லாம் நல்ல ஞானம். பேசினாலும் எழுதினாலும் அபாரமான தெளிவு! ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் கூர்மையான வாதத்திறமையோடு எதையும் உறுதியாக எடுத்துச் சொல்லும் அழகு! சைவ சித்தாந்தத்தில் அசைக்க முடியாத புலமை! திருநெல்வேலி ஹிந்து கல்லூரியில் தமிழ் ஆசிரியர். ஆங்கிலப் பயிற்சியும் உண்டு. தாழ்வு மனப்பான்மை என்பதே இல்லாத ஒரு தமிழ் ஆசிரியர் அவர். தேவாரம் ஓதுவதுபோலவே வேதத்தையும் மரபு வழுவாமல் அவர் ஓதுகிற முறையைக் கேட்டுவிட்டுப் பல அறிஞர் பெருமக்கள் வியப்பில் ஆழ்ந்ததுண்டு!

இந்த முதுபெரும் புலவரிடம் நெல்லையில் என் ஆரம்ப நாட்களில் மாணவனாக இருந்து பயிலும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. கல்லூரிப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபிறகு திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக நியமனம் பெற்று, அவர் ஆதீனத்துக்கு வந்த பிறகும், நான் அப்போது திருச்சியில் இருந்ததால் மிகவும் நெருங்கிய தொடர்பு நீடித்தது. ரேடியோவில் தேவார விளக்கமும், திருமந்திர விளக்கமும், இன்னும் பல இலக்கியப் பேருரைகளும் பற்பலவாக ஒலி பரப்பினர். சம்ஸ்கிருதம் கற்ற புலவர்களும், தமிழ் அறிஞர்களும், இரு சாராரும் ஒருமித்து அதிசயிக்கும்படி இருந்தன அவருடைய சொற்பொழிவுகள். கடைசியில் சுவாசநோய் ஏற்பட்டுத் திருச்சிக்கு வந்தார். டாக்டர் கானமேகம் எவ்வளவோ முயன்று பார்த்தும் நோய் வாசியாகவில்லை. திருவாவடுதுறைக்கு அந்தக் கடைசி நிலையில் அவரை எடுத்துப் போய் எரியூட்டினோம். ஒரு பெரிய நூல் நிலையத்துக்குத் தீவைப்பது போலிருந்தது, அவருடைய உடலுக்குத் தீமூட்டும் போது! தமது உடம்பு தாமிரவருணி நதியின் புனலில் கலக்க வேண்டும் என்று ஓர் ஆசை இருந்தது அவருக்கு. அதை நிறைவேற்ற இயலாமல் போய்விட்டதே என்று ஒரு தாபம் எனக்கு!

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய படிப்பையும், சிந்தனை ஆற்றலையும் தெளிவையும் எண்ணிப் பார்க்கும்போது அவருக்கு ஈடாக இன்னொரு புலவரைச் சொல்ல முடியவில்லை. காகிதப் பட்டங்களைக்கொண்டு திறமைகளைக் கோருகிற உலகத்தில், எந்தப் பல்கலைக் கழகப் படிப்பும் இல்லாமல் மெய்யான கல்வியினால் மெய்யான மதிப்போடு வாழ்ந்து முடிந்த அந்தப் பண்டித மகா வித்துவான், இலக்கண, இலக்கியங்களைக் கற்பிக்கும் முறையே தனி! எந்த முட்டாளுக்கும் தொல்காப்பியத்தைப் புரியப்பண்ணி விடுவார்! சிவஞான போதத்தை விளக்கிவிடுவார்! அது மட்டுமா? வேடிக்கையான பல நிகழ்ச்சிகளைச் சுவையோடு எடுத்துக் கூறுவார். சான்றாக ஒரு நிகழ்ச்சி:

ஹிந்து கல்லூரியில் ஒரு சமயம் துணைத் தமிழ் ஆசிரியர் பதவிக்குத் தேர்வு வந்தது. இந்தக் காலம் என்றால் பட்டங்களைப் பார்த்தே நியமித்து விடுவார்கள். அப்போது என்ன செய்வார்கள்? அவரவருடைய திறமையை அளவிட்டுப் பார்ப்பார்கள். கல்லூரியின் நிருவாகச் செயலாளராக இருந்த சாது கணபதி பந்துலுஅவர்கள் (சுப்பிரமணிய பாரதியின் நண்பர்) பதவியை நாடி வந்த அறிஞர் ஒருவருக்கு ஒரு சோதனை நடத்தினார்.

''நாளைக் காலைக்குள் ஒரு வெண்பா எழுதிக் கொண்டு வரவேண்டும். கடைசி அடி 'கம்பி கம்பி கம்' என்று முடிய வேண்டும்!'' —இதுவே பரீட்சை! கம்பி கம்பி கம்!

கம்பியை இழுத்து இழுத்துப் பார்த்தார் அந்த அறிஞர். வெண்பா வரவில்லை. ''கம்'' என்ற சொல் ஆங்கிலமாக இருக்குமோ ஒருவேளை? நிச்சயம் அது தமிழ் இல்லை! வேறு எந்த மொழியாக இருக்கும்? பந்துலு காருவின் தாய்மொழியான தெலுங்காக இருக்குமோ?

சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்களிடம் வந்தார் அந்த அறிஞர், கம்பியை எண்ணிக்கொண்டே. சந்தேகம் என்ன? விடுதலை கிடைத்துவிட்டது! பதவியும் கிடைத்துவிட்டது!

எங்கள் ஆசிரியர் சொன்னார்:

''ஐயா, இது ஒரு வடமொழிப் பாடலின் கருத்தைக் கூறுகிற வரியாகும்! ''காகஹ க்ருஷ்ணஹ: பிகஹ க்ருஷ்ணஹ'' என்று தொடங்கும் பாட்டு அது. அதன் கருத்து என்னவென்றால், காகமும் கறுப்பு. பிகமும் (பிகம் — குயில்) கறுப்பு. பார்த்தால் வித்தியாசம் இல்லை. ஆனால் வசந்த காலம் வந்துவிட்டால், காகம் காகம்தான். பிகம் பிகம்தான்! காகங்காகம் பிகம் பிகம்! காகங்கா கம்பிகம்பிகம்! இதுவே வெண்பாவின் கடைசி அடி!''

இப்படி விளக்கினார் சிதம்பர ராமலிங்க பிள்ளை. கடைசி அடியைக் கம்பி நீட்டியாகி விட்டது! இதன் பிறகு வெண்பாவை எழுதி முடிப்பதில் என்ன இன்னல் உண்டு!

''ராமலிங்கம் பிள்ளைவாள், தங்களுக்கு எப்படி நன்றி சொல்லுவேன்!'' என்றார் அந்தப் புலவர்.

''இலக்கணப் பிழை இல்லாமல் பேசுங்கள். அதுவே நன்றி! ராமலிங்கம் பிள்ளை என்றால் ராமலிங்கத்தின் பிள்ளை என்று பொருள். ராமலிங்கபிள்ளை என்றால் ராமலிங்கமாகிய பிள்ளை என்று அர்த்தம். புரிகிறதா?''

இவ்வாறு அவருக்கு அறிவுறுத்தினார் மகா வித்துவான் சிதம்பர ராமலிங்க பிள்ளை அவர்கள்.

filmotsav'80 விமர்சனங்கள்

இயக்குனரும், ஒளிப்பதிவாளருமான பாலு மகேந்திரா:

REMBRANDT FECIT 1669- மறக்க முடியாத படம். ரெம்பிராண்டு ஓவியங்களிலேயே ஒரு தனி விதமான ஒளிச் சேர்க்கை உண்டு. அதைத் திரைப் படத்திலும் மிக மிக நேர்த்தியாகக் கிடைப்பிடித்துள்ளார்கள். ஒளிப்பதிவு அபாரம். மொத்தத்தில் திரைக் கதை, நடிப்பு, மற்றும் பல அம்சங்களிலும் நல்ல சிறந்த படம்.

எஸ். பி. முத்துராமன் கூறுகிறார்:

THE DUELLISTS-U. S. A. இந்தப் படத்தில் ஒளிப் பதிவு அபாரம். ஒவ்வொரு காட்சியும் மிக அழகாக முன்பே முடிவு செய்து படம் எடுத்துள்ளார்கள். மரத்தின் நிழலில் காட்சி என்றால் உண்மையிலேயே நிழல்விழும் வரை பொறுத்திருந்து காட்சியைப் படமாக்கியுள்ளார்கள். கதை நெப்போலியன் காலத்தியது. ஒரு ராணுவ அதிகாரிக்கும் மற்றொரு ராணுவ அதிகாரிக்கும் இடையே சந்தர்ப்ப வசத்தால் உருவான சண்டை எவ்வளவு தூரம் வாழ்க்கையில் அவர்களை இழுத்துச் செல்கிறது என்பதுதான் கதை.

SERIE NOIRE-FRANCE பாட்ரிக் டிவேர் இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். பல காட்சிகளில் கைதட்டல் வாங்கி விடுகிறார். மனைவி தனியாகச் சென்று விடுவதால் ஒரு விலைமாதிடம் மனம் பறிகொடுக்கிறான் கணவன். அவளை அந்த இடத்திலிருந்து வெளியே கொண்டு வர அவன் மூன்று கொலைகளைச் செய்ய வேண்டி நேர்கிறது. காதலித்தவள் கிடைக்கிறாள். ஆனால் அதற்காக அவன் வாழ்வில் அனைத்தையுமே இழக்க நேர்கிறது.

இதே நடிகர் நடித்த மற்றொரு பிரெஞ்சுப் படம் **COUP-D-TETE** இந்தப் படத்தைப் பார்த்த பிறகு எல்லோரும் அந்த நடிகரின் விசிறி ஆகிவிட்டார்கள். சிறந்த கால் பந்தாட்ட வீரர் செய்யாத குற்றத்துக்காகச் சிறை செல்கிறார். இவர் எப்படி பழிக்குப் பழி வாங்குகிறார் என்பதுதான் கதை. நல்ல நயமான நகைச் சுவை.

THE CHINA SYNDROME - U.S.A. ஜாக் லெமன் ஒரு சிறந்த நகைச்சுவை நடிகர். அவர் ஒரு சீரியஸ்படத்தில் நடித்துச் சோபிக்கவும் செய்திருக்கிறார். நமது கமர்ஷியல் படம் போல் உள்ளது. ஒரு டி. வி. ஒளிப் பதிவாளரும், செய்தியாளரும் யாருக்கும் தெரியாமல் ஒரு பெரிய விபத்தைப் படம் எடுத்து விடுகிறார்கள். அதன் விளைவுகள் என்ன என்பதை மிகவும் சிறப்பாகக் காட்டியுள்ளனர். சாதாரண சீனுக்குக்கூட ஒளிப்பதிவாளர் ஹெலிகாப்டரிலிருந்து எடுத்திருக்கிறார்! அமெரிக்கர்கள் என்னதான் செய்ய மாட்டார்கள்!

THE SILENT MAJORITY - NORWAY சோம்பேறியின் மனம் சைத்தானின் பட்டறை என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு.

⌘ 'ஸ்பார்க்கஸ்' படத்தில் ஒரு காட்சி
⌘ 'தி டூவலிஸ்ட்ஸ்' யு. எஸ். ஏ. படம்
'குகன்ஸ்பட' படத்தில் ஒரு சம்பவம்







அதை இப்படம் மிக அழகாக நிரூபிக்கிறது. சாப்பாடு, தூக்கம், அலுவலகம், சாப்பாடு, தூக்கம் என்று வேறு சிந்தனையே இல்லாமல் தனிமையில் இருக்கும் இளைஞனின் நிலை எப்படி என்பதை நம் கண் முன் காட்டுகிறது இப்படம்.

QUINTET - U.S.A. மனித உயிர்களுக்கு மதிப்பே இல்லாது போகும் எதிர்காலத்தில் நிகழும் கதை. ஒரு விசித்திர விளையாட்டில் ஈடுபடும் ஆறு பேர்களைப் பற்றியது. ஒருவரை ஒருவர் கொல்ல முயல வேண்டும். முடிவில் யார் உயிருடன் இருக்கிறாரோ அவரே வென்றவர். இப்படிப் புதுமையாக ராபர்ட் • ஆல்ட்மன் எடுத்திருக்கிறார். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது ரீ—ரிகார்டிங்தான். அற்புதம்.

LITTLE ESCAPES - SWISS/FRANCE ஒரு வயதானவர் மொப்பட் மோட்டார் சைக்கிள் வாங்கிவிடுகிறார். உற்சாகம் பிய்த்துக் கொண்டு போகிறது அவருக்கு. நமக்கும் தான். மிகச் சிறப்பாக ''மைகேல் ராபின்'' நடித்துள்ளார். இந்த மாதிரி வேடம் ஒன்றை ஏற்கத் தமிழ்நாட்டில் சிவாஜி ஒருவரால் தான் முடியும். மன நிறைவு தந்த படம்.

THE MARRIAGE OF MARIA BRAUN (மேற்கு ஜெர்மனி) என்னதான் தவறுகள் நேர்ந்தாலும் கணவன் மீது மனைவிக்கு உள்ள தீராத காதலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம். கதை கொண்டு செல்லப்பட்ட விதமும் நடிப்பும் சிறப்பு.

CLOSED CIRCUIT - ITALY ஒரு படம் முடிந்தவுடன் எல்லோரும் சிகரெட் பிடிக்கவோ, டிபன் காப்பி சாப்பிடவோதான் போவார்கள். ஆனால் இந்தப் படத்தைப் பார்த்து முடித்ததும் இதன் முடிவைப் பற்றி விவாதிப்பதிலேயே கழித்தார்கள். திரைக் கதை சினிமாத் தியேட்டரில்தான் நடக்கிறது. சினிமாவில் ஒரு துப்பாக்கி சுடும்போது உண்மையிலேயே ரசிகர்களில் ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு விழுந்து விடுகிறார். யார் கொலைகாரன்? இப்படியே இரண்டாவது மூன்றாவது கொலைகளும் மிகவும் விசித்திரமான சூழ்நிலைகளில் நடக்கின்றன. படம் சிறப்பாக உள்ளது. ரசிகர்களை வெளியே வந்ததும் பேச வைத்து விட்டதே போதாதா?

மொத்தத்தில் பிலிம் பெஸ்டிவல் என்பது எங்களைப் போன்ற திரைப் படத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு கலாசாலையைப் போல. ஆனால் இந்த பிலிமோத்சவ்-80ல் 75 சதவீதம் படங்கள் நமது தரத்துக்குக் கூட இல்லை. எல்லோருக்குமே நேரம் பொன்னானது. உயர்ந்த படங்களை மட்டும் வரவழைத்து எல்லோருக்கும் நன்மை செய்யலாம். இதைச் சம்பந்தப்பட்டவர்கள் வரும் உலகத் திரைப்பட விழாக்களில் கவனிப்பார்கள் என்று நம்புவோம்.

— சலன்

✖ 'ரெம்பிரான்ட் ஃபெலிட்' - நெதர்லாந்த் படம்
✖ 'ஸைலென்ட் மெஜாரிட்டி' - நார்வே படம்
✖ 'லிட்டில் எஸ்கேப்ஸ்' - ஸ்விட்ஸர்லாந்து - ஃபிரெஞ்சு படம்



பேட்டி: உலகப்புகழ் இயக்குனர் இருவர்

இன்று உலகப் புகழ் பெற்ற இயக்குன ராகத் திகழும் ரோமன் போலன்ஸ்கி கல்கி வாசகர்களுக்காகச் சிறப்புப் பேட்டி ஒன்றை எனக்கு அளித்தார். இவர் 1933ம் ஆண்டு போலந்து நாட்டில் பிறந்தவர். மூன் றாவது வயது முதலே போலன்ஸ்கியின் வாழ்க்கையில் சினிமா பாணியிலான பலநிகழ்ச் சிகள் நிஜமாகவே நடந்து விட்டன. வியப்பு, பயங்கரம், துயரம் முதலிய உணர்ச்சிகளை ஏற்படுத்திய நிகழ்ச்சிகள். ஐந்தாவது வயதில் இவரது பெற்றோரை நாஜி களின் கைதிகள் முகாமுக்கு இழுத்துச் சென்றார்கள். அங்கிருந்து இவரது தாயார் திரும்பி வரவேயில்லை. பல வருடங்கள் பல்வேறு கத்தோலிக்கக் குடும்பங்களுடன் இருந்தார். கடைசியில் 1945ம் ஆண்டுதான் இவரை இவரது தந்தை கண்டுபிடித்தார்.

தமது 14வது வயதில் கார்கோவில் ஒரு நாடகக் கம்பெனியில் நடிக்க ஆரம் பித்தார் போலன்ஸ்கி. பிறகு ''லாட்ஸ்'' வில் ஒரு திரைப்படக் கல்லூரியில் சேர்ந் தார்.

பல வருடங்களுக்குப் பிறகு இவரது காலிபோர்னியா வீட்டில் திடீரென்று சில கொலைகாரர்கள் புகுந்து இவரது கர்ப்பிணி மனைவி ஷாரான் டேட் மற்றும் மூன்று நெருங்கிய நண்பர்களைக் கொடூர மாகக் கொன்று போட்டுவிட்டு மறைந்தனர்.



ரோமன் போலன்ஸ்கி

1962ம் ஆண்டு தமது முதல் படத்தை எடுத்தார் போலன்ஸ்கி. பெயர் - நைஃப் இன் தி வாட்டர். அன்றே உலகம் ஒரு பிறவி மேதையைக் கண்டு கொண்டு விட்டது. அடுத்தடுத்துப் பல படங்கள் இவருக்குப் பெரும் புகழ் ஈட்டித் தந்தன.

பரபரப்புக்குப் பேர் போனவர் போலன்ஸ்கி. இவர் ஒரு சிறு பெண்ணைப் பலாத்காரம் செய்து விட்டதாகக் குற்றம் சாட்டி நாட்டை விட்டே துரத்தினார்கள்.

கேள்வி: ஏன் போலந்தில் இப்பொழுது நீங்கள் படம் எடுப்பதில்லை?

பதில்: போலந்து நாட்டில் சினிமா அரசாங் கத்தைச் சேர்ந்தது. நான் என்னுடைய விருப்பப்படி எடுப்பேன். அரசாங்கம் பணம் தருமா என்பது சந்தேகம்தான். இருப்பினும் முயன்று பார்க்கப் போகி றேன்.

கே: உங்கள் படங்களில் எல்லாம் செக்ஸ் முக்கிய பங்கு வகிக்கிறதே ஏன்?

ப: என்னுடைய இரண்டு படங்களைத் தவிர மற்ற படங்களில் செக்ஸ் என்ற பேச் சுக்கே இடமில்லை. ஒரு முறை டெனண்ட் என்ற படத்தை ரிலீஸ் செய்வதற்கு முன்பு சிலருக்குப் போட்டுக் காட்டினோம். அதில் ஒரு காட்சியில் ஓரிரு நொடிகள் ரத்தம் காண்பிக்கப்படுகிறது. பார்த்தவர்கள் எல்லோரும் ''ஏன் இவ்வளவு ரத்தம்?'' என்று பல தடவை கேட்டு விட்டார்கள். ஏன் அப்படிக் கேட்டார்கள் என்றால், அவர்கள் பாத்திரத்துடன் ஒன்றி விடு கிறார்கள். அதன் விளைவுதான்!

கே: மனோதத்துவ முறையில் சில பல கதாபாத்திரங்கள் உங்கள் படங்களில் வருகின்றனர். அவர்கள் செய்கின்ற காரி யங்கள் எல்லாமே சரியா?

ப: மனோதத்துவ டாக்டர்களே பார்த்துப் பாராட்டி விட்டனர். அந்த வழியில் என்னை நீங்கள் மடக்க முடியாது.

கே: மனோ தத்துவம், செக்ஸ், பயங்கரம் இவைகளையே எடுத்து வந்த நீங்கள் திடீர் என்று காதல் படமான டெஸ் எடுத்தது எப்படி?

ப: நீங்கள் ஓட்டலுக்குச் சென்று தோசை கேட்கிறீர்களே ஏன்? வாழ்க்கை அனு பவங்களை வைத்து அடுத்து நாம் செய்யப் போவதை முடிவு செய்கிறோம். சர்க் கரையோ அல்லது உப்போ போட்டு மோரைக் குடிக்க வேண்டும். நான் சர்க்

[ஒருத்தி தன் பெண்ணை மனோதத்துவ டாக் டரிடம் அழைத்துச் சென்றாள்.]

ஒருத்தி : என் பெண் எப்பொழுதும் தான் ஒரு 'கோழி' என்று நினைத்துக்கொண்டு பல காரியங்களைச் செய்கிறாள்.

டாக்டர்: ''இந்த வியாதி எவ்வளவு காலமாக இருக்கிறது?

ஒருத்தி : சுமார் இரண்டு ஆண்டுகள்!

டாக்டர் : ஏன் இவ்வளவு தாமதமாக அழைத்துக் கொண்டு வருகிறாய்?

ஒருத்தி : எங்களுக்கு 'முட்டை' ரொம்ப தேவையாக இருந்தது! —ஆர். முரளிகுமார்



கலைரயைத் தேர்ந்தெடுத்தேன். ஆறு வாரம் ஆயிற்று நான் ரிலீஸ் செய்து. படம் நன்றாகப் போகிறது.

கே: உங்களது சில படங்களில் நீங்களே ஏன் நடித்துள்ளீர்கள்?

ப: ஆரம்பத்தில் நான் நடிகன்தானே? எனக்குச் சரியான பாத்திரம் கிடைக்கும் போது நான் நடிக்க மிகவும் விரும்புவது உண்டு.

கே: கலைப் படம், பொழுதுபோக்கு அம்சம் நிரம்பிய, வசூலில் வெற்றிப் படம் இவற்றின் வேறுபாடுகள் என்ன?

ப: எனக்கு இதில் எல்லாம் வேறுபாடுகள் கிடையாது. பொழுதுபோக்கு அம்சம் நிரம்பிய படம் தோல்வி யுற்றால் அது கலைப்படமாகிவிடுமா? இல்லை கலைப் படம் வர்த்தக ரீதியில் வெற்றி பெற்றால் அது பொழுது போக்குப் படமாகிவிடுமா? சினிமாவே கலைதானே? அதில் ஏன் பாகுபாடு?

கே: நீங்கள் அரசியலை வைத்துப் படம் எடுப்பீர்களா?

ப: மாட்டேன். நான் இன்று சொல்வது நாளை மாறியிருக்கும்.

கே: உங்களுக்குப் பிடித்த மற்ற இயக்கு னர்கள்? படங்கள்?

ப: சிடிசன் கேன் (Citizen cane) படம் தான் எனக்கு முதலில் வழிகாட்டியது என்று கூறலாம். எனக்குப் பிடித்த இயக்கு னர்கள் பலர். குறிப்பாக ஃபெலினி.

கே: உங்களுக்குப் பிடித்தது வெளிப்புறப் படப் பிடிப்பா? இல்லை ஸ்டுடியோ தளங் களா?

ப: அது கதையையும் நடக்கும் சம்பவங் களையும் பொறுத்துள்ளது. ஆனால் எனக்கு ஸ்டுடியோ தளங்கள் அதிகம் பிடிக்கும். காரணம் நமக்கு வேண்டியவை எல்லாம் நினைத்த மாத்திரத்தில் கிடைக்கும் இல்லையா?

கே: உங்கள் சுயசரிதையைப் படம் எடுக்கும் எண்ணம் உள்ளதா?

ப: இல்லை. ஆனால் நான் சுயசரிதை எழுது வேன் என்று நினைக்கிறேன்.

கே: நீங்கள் எடுத்தவற்றுள் உங்களுக்குப் பிடித்த படம்?

ப: சமீபத்தில் எடுத்த படம்தான். ''தெல்''. பதினெட்டு மாதங்களில் படப் பிடிப்பை முடித்தேன். எனது வாம்பயர் கில்லர்ஸ் மிகவும் எளிதானது. நான் ஒரு சாதனை என்று கருதும் படம் கல்-டி-சாக்.

● ● ●

''அரசியல் வாதிகளை எனக்குப் பிடிக் காது'' — இப்படி ஆரம்பித்துச் சில கேள்வி களுக்குப் பதிலளித்தார் சத்யஜித் ரே.

கேள்வி: குழந்தைகள் படம் எப்படி இருக்க வேண்டும்?

ப: நல்லதொரு குழந்தைப் படம் பெரியவர் களையும் கவர வேண்டும்.

கே: விஞ்ஞானக் கதையைப் படமாக்கப் போவதாக முன்பு கூறினீர்களே?

ப: ஆமாம். ஆனால் அப்பொழுது எடுக்க முடியவில்லை. அதுவும் நல்லதுக்குத்தான்.



மேலட்டையில் சபிதா அவ்வளவு கவலை யோடு விரலைக் கடித்துக் கொண்டிருக்கக் காரணம் என்ன? ஒரு வேளை சென்னை டெஸ்ட்டில் கவாஸ்கர் செஞ்சுரி போடுவதற் குச் சற்று நேரம் முன்பாக நரேஷ் இந்த வண்ணப்படத்தை எடுத்திருப்பாரோ?

ஸ்பெஷல் எஃபெக்ட் நிறையத் தேவைப் படும். இப்பொழுது நாம் முன்னேறி இருக்கிறோம் அல்லவா? பதின்மூன்று வரு டங்களுக்கு முன்பு அப்படி இல்லையே! நான் இப்பொழுது இந்தவகைப் படமொன்றை எடுக்க ஆவலாக இருக்கிறேன்.

கே: உங்கள் படம் இந்தியாவை விட வெளி நாடுகளில் புகழப்படுவதற்குக் காரணம்?

ப: படத்தில் எழுதப்படும் சப் டைட்டில்கள். இந்தியாவில் காட்டப்படுபவைகளுக்கு சப் டைட்டில்கள் கிடையாது. இது முக்கிய காரணம். ஆனால் பதர் பாஞ்சாலி கல் கத்தாவிலே மிகச் சிறப்பாக ஓடியதே.

கே: வறுமையைத்தான் அதிகம் காட்டு கிறீர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில்?

ப: எனது இரண்டு படங்களைத் தவிர வறுமையை நான் காட்டிய படங்களை நீங்கள் குறிப்பிடுங்களேன் பார்க்கலாம்.

கே: பிடித்த படம்?

ப: ''சாருலதா'' ஏனென்றால் என்னைப் பொறுத்தவரை அதில்தான் நான் குறைவாகத் தவறுகள் செய்திருக்கிறேன்.

கே: நீங்களே இசை அமைக்கிறீர்கள்? ஒலிப் பதிவு செய்கிறீர்கள்?...

கே: நான் இசை அமைக்க ஆரம்பித்த விதம் அலாதியானது. எனக்கு இசையில் அதிக விருப்பம். பல்வேறு இசை மேதைகள் ரவி சங்கர், அலி அக்பர்கான் முதலியோர் எனக்கு நண்பர்கள். முத லிரண்டு படங்களை ரவி ஆகியோர்களை வைத்து முடித்துக் கொண்டேன். ஆனால் பிறகு அவர்கள் மிகவும் ''பிஸி'' ஆகி விட்டதால் நானே இசையமைக்கக் கற் றுக்கொண்டேன். முதலில் கஷ்டமாகத் தான் இருந்தது. போகப் போகச் சரியாகி விட்டது.

கே: மறக்க முடியாத நாள்?

ப: வெனிஸ் உலகத் திரைப்பட விழாவில் எனது படம் 'அபராஜிதா' தங்கச் சிங்கம் பரிசினைப் பெற்றது என்று கேள்விப்பட்ட நாள்தான்.

—சலன்


வேண்டும்போது மட்டும் குழந்தை பெறவேண்டும் பிறப்பது பிறக்கட்டும் என்றிருத்தல் பேதமை

எதிர்பாராத வகையில் மனைவி தாய்மையுற்றால் நீங்கள் போட்டத் திட்டங்கள் யாவும் நடக்காது போகலாம். பிறர் விஷயங்களில் இப்படி நடந்திருக்கிறது. இதே தவறை நீங்களும் செய்ய வேண்டாம்!

நினைவிருக்கட்டும்! வெள்ளம் வரும் முன்னே அணைபோட வேண்டும். நடப்பது நடக்கட்டும் என்றிருக்கக் கூடாது.

நிரோத் உபயோகிக்கவும்

ஆண்களுக்கானது; மிகவும் எளிதானது; சுலபமாகப் பயன்படுத்தலாம். மருந்துக் கடைகளிலும் குடும்ப நல நிலையங்களிலும் கிடைக்கின்றன.



நிரோத்

எல்லா வகையிலும் சிறந்தது

இன்பமான இல்லற வாழ்வை விரும்பும் தம்பதிகளுக்கு உதவும் நம்பகமான சாதனம்

davp-79/107



கடல் ராணி

சாண்டில்யன்

அத்தியாயம் 26

வெள்ளிக் கிரீடம்

வடக்கே நானூற்று முப்பத்தாறு மைல் தூரம் கிழக்கிலிருந்து மேற்கே ஓடி காம்பே வளைகுடாவில் கடலுக்குள் கலக்கும் தப்தி நதியின் முகத்வாரத்திலிருந்து தெற்கே கார்வார் துறைமுகம்வரை நெடுக உள்ள ஒவ்வொரு துறைமுகத்தையும் தெளிவாகக் காட்டி, அவற்றின் பலம், எதிர்ப்புச் சக்தி, அணுகும் விதம் அத்தனைக்கும் குறிகளைப் போட்டிருந்த அந்த அரபிக் கடலோரப் படத்தை ஆராய்ந்த காப்டன் டெய்லர், இங்க்லண்ட், ஸில்வர் எல்லோருடைய முகத்திலும் ஓரளவு திருப்தி நிலவினாலும் உள்ளூர சந்தேகமிருந்ததால், அதைப் போக்க துலாஜி சிந்து தர்க்கத்தை எடுகாட்டிய பின்பும், சிறிது ஐயத்துடனேயே அவர்கள் மறுபடியும் அப்படத்தை ஆராய்ந்தார்கள். அந்த ஐயத்தைப் போக்கவும், மேற்கொண்டு திட்டத்தைத் தெளிவாக்கவும் சீரிய குரலில் பேசலானான் துலாஜி.

''ஜெண்டில்மென்! யூ ஆர் லுக்கிங் அட் ய மாப் விச் டுக் டூ இயர்ஸ் ஃபார் மி டு ப்ரிபேர் (கனவான்களே! நீங்கள் பார்க்கும் படத்தைத் தயாரிக்க எனக்கு இரண்டு வருடங்களாயின)'' என்று துவங்கினான் துலாஜி.

''இதில் காட்டியுள்ள ஒவ்வொரு துறைமுகத்தையும் நான் நேரே சென்று பார்த்தேன். சில சமயங்களில் சுய ரூபத்துடனும் சில சமயங்களில் மாறு வேடத்துடனும் சென்றேன். சில துறைமுகங்களில் வேலைக்குச் சேர்ந்து அவற்றின் மர்மங்களை அறிந்தேன். அது மிகவும் கஷ்டமான பணி என்பதைப் படத்தைப் பார்க்கும் உங்களுக்கே தெரியும்'' என்றும் கூறினான்.

அவன் சொன்னது முற்றிலும் உண்மை என்பது அந்த வெள்ளைக் கொள்ளைக்காரர்களுக்கு நன்றாகப் புரிந்திருந்தது. ஏதாவது ஓரிடத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமென்றால் அதற்குப் பிடிக்கும் நாட்களே அதிகமென்பதையும், இந்தியாவின் மேற்குக் கரையோரம் முழுவதையும் படமாகத் தீட்டவேண்டுமென்றால் துறைமுக நுணுக்கங்களைக் குறிப்பிட வேண்டுமென்றால், அதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய அவகாசமும், கஷ்டமும் மிகவும் அதிகமென்பதையும் வெள்ளையர் மூவரும் சந்தேகமற உணர்ந்தனர். இருப்பினும் கேட்டான் இங்க்லண்ட்: ''இந்தப் படத்தில் கண்ட நுணுக்கங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கும்போது, உங்கள் தந்தையிடம் பெரிய மரக் கலங்கள் இருக்கும்போது, நீங்களே ஏன் மாக்ரேயின் பலத்தை உடைக்கக் கூடாது? எங்களை இதில் ஏன் சம்பந்தப்படுத்த வேண்டும்?'' என்று.

''என் தந்தை இப்பொழுது பிரிட்டிஷாரிடம் விரோதம் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஏன், அபிஸீனிய ஸித்திகள் விரோதத்தைக்கூட விரும்பவில்லை. அவர் தற்சமயம் விரும்புவது அமைதி'' என்றான் துலாஜி.

''கடற் கொள்ளைக்காரர்களுக்கு அமைதி ஏது? எ பைரேட் ஜஸ்ட் லிவ்ஸ் பார் த டே? (கொள்ளைக்காரன் அன்றாட சுகத்துக்கே வாழ்கிறான்.)'' என்ற உண்மையை எடுத்துச் சொன்னான் டெய்லர்.

''மை பாதர் இஸ் ஆப் எ டிப்பரண்ட் கைண்ட் (என் தந்தை வேறு விதம்)'' என்ற துலாஜி ''டெய்லர்! இங்கு நாம் வந்திருப்பது ஒழுக்க நியதிகளை விவாதிப்பதற்கு அல்ல. உங்கள் மேஜை முன் தெளிவான திட்டம் இருக்கிறது. அது லாபகரமான திட்டம். ஏராளமான பணத்துடன் மாக்ரே வருவான் வெகு சீக்கிரம் பம்பாயிலிருந்து. அவனை மடக்கி, அவன் கப்பல்களைச் சூரையாடினால் கிடைக்கும் பணம் மிக அதிகம். ஆனால் அதை மாக்ரேயிடமிருந்து பறிப்பதற்கு இந்த காஸண்ட்ராவைப் போன்ற சிறந்த கப்பல் அவசியம். அதனால்தான் உங்கள் உதவியை நாடுகிறோம்'' என்றான் துலாஜி.

அதுவரை சும்மா இருந்த சங்கர்பந்த் சொன்னார்: ''கேவலம் சில பிரிட்டிஷ் கப்பல்களைப் பிடிக்க சிந்துதுர்க்கத்தை இவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமா?'' என்று.

அனந்த் தனது மௌனத்தை உடைத்தான் ''சங்கர்பந்த்! சிந்து துர்க்கத்தை நாம் கொடுத்துவிடவில்லை இவர்களிடம். தாற்காலிகமாக இவர்கள் வசம் ஒப்படைக்கிறோம் அவர்களுக்கு நம்மீது நம்பிக்கை வர. டெய்லரும் இங்க்லண்டும் தங்களை நான் பிடிக்க வருவதாகக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ராணியை பிரிட்டிஷ் காப்டன் ஸ்டாண்டனும் லெப்டினண்ட் ஸ்மித்தும் ஏன் பிடித்துப் போக வந்தார்களென்பதை இவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. இவர்கள் நம்மை நம்பவில்லை. நம்பவைக்க முயலுகிறோம். கொள்ளைக்காரர்களுக்குள் அவநம்பிக்கை ஏற்பட்டால் பெரிய காரியங்களை நாம் சாதிக்க முடியாது'' என்றான் அனந்த்.

''சரி. உங்கள் இட்டத்தைக் கேட்போம்.'' என்று வில்வர் அந்த விவாதத்துக்கு முடிவு கட்டினான்.

''இட் ஈஸ் ப்ளெய்ன் ஆன் த மாப் (அது படத்தில் தெளிவாயிருக்கிறது)'' என்றான் டெய்லர்.

''அவர்களே சொல்லட்டும்'' என்றான் வில்வர்.

துலாஜி சற்று நெருங்கி வந்தான் மேஜையை நோக்கி. ''இந்த இடத்தில் இப்பொழுது காப்டன் மாக்ரே இருக்கிறான். அவனிடம் நீங்கள் கொடுத்த பான்ஸி என்ற கப்பல் இப்பொழுது நன்றாகச் செப்பனிட்டு சுமார் ஐம்பது பீரங்கிகளுடனும் வேண்டிய வெடி மருந்துகளுடனும் புறப்படத் தயாராயிருக்கிறது. அதைத் தவிர நான்கு போர்க் கப்பல்களும் சித்தமாயிருக்கின்றன புறப்பட. மாலுமிகளையும் முன் போலில்லாமல் இம்முறை பார்த்துப் பொறுக்கியிருக்கிறான் மாக்ரே'' என்று துலாஜி படத்தில் கையை வைத்து மாக்ரே வரக்கூடிய கடல் மார்க்கத்தைக் காட்டினான்.

வில்வர், டெய்லர், இங்க்லண்ட் மூவரும் அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தனர். துலாஜி மேலும் சொன்னான்: ''டெய்லர்! இங்க்லண்ட்! இப்பொழுது உங்களை நோக்கி வருவது தனிக் கப்பலல்ல. பலவீனமான இதயமுடைய ஓடும் காப்டன்களைக் கொண்ட கப்பல்களுமல்ல. ஆர்மடா (போர் கப்பல் கூட்டம்) வருகிறது திறமையுடன். அதை நீங்கள் சமாளிக்கும்படி இருக்கும்'' என்று.

ஆர்மடா என்ற சொல் டெய்லர், இங்க்லண்ட், வில்வர் மூவரிடமும் உற்சாகத்தைக்



ளைப்பி விட்டதால் மூவரும் மகிழ்ச்சியுடன் நகைத்தார்கள். ''யூ ஸீம் டு நோ பிரிட்டிஷ் நேவல். ஹிஸ்டரி (உனக்கு பிரிட்டிஷ் கடற்படை வரலாறு தெரியும் போலிருக்கிறதே)'' என்றான் டெய்லர்.

''நோ. ஹீ டஸ் (எனக்குத் தெரியாது. அவனுக்குத் தெரியும்)'' என்று அனந்தைக் காட்டினான் துலாஜி.

அனந்த் அந்தப் பாராட்டுதலைத் தனது தலையசைப்பினால் ஏற்றுக் கொண்டான். ''ஓரளவு தெரியும்'' என்று வாயாலும் சொன்ன அனந்த் ''யூ மஸ்ட் மச் திஸ் ஆர்மடா த ஸேம் லெஸன் ஆஸ் த பிரிட்டிஷ் டிட் டு த ஸ்பானிஷ் ஆர்மடா (இந்த ஆர்மடாவுக்கும் பிரிட்டிஷ் ஸ்பெயின் நாட்டுக் கப்பல் கூட்டத்துக்கு அளித்த படிப்பினையை நீங்கள் அளிக்க வேண்டும்)'' என்று அவர்கள் வெறியைக் கிளறிவிட்டான்.

எந்த பிரிட்டிஷ் மாலுமிக்கும் ஸ்பெயின் மீது பிரிட்டிஷ் அடைந்த அந்தப் பெரு வெற்றி அளவிட முடியாத பெருமையையும் உணர்ச்சியையும் அளிக்கவல்லது. அந்த ஆர்மடாவை அழிப்பதில் சம்பந்தப்பட்டவர்களும் ஸீ டாக்ஸ் ஆப் எலிஸபேத் (எலிஸபெத் மகாராணியின் கடல் நாய்கள்) என்று பிரசித்தி பெற்ற வால்டர் ராலே போன்ற



கொள்ளைக்காரர்கள். ஆகவே அந்த நிகழ்ச்சியைச் சம்பந்தப்படுத்திக் காட்டியதும் குரூரமனமுள்ள டெய்லர் கூட மகிழ்ச்சியடைந்தான். எதற்கும் மசியாத ஸில்வரும் மகிழ்ந்தான். இங்லண்ட் கொள்ளைக்காரனாயிருந்தாலும், கண்ணியமுள்ளவன், நாட்டுப் பற்றுள்ளவன். ஆகவே அவனைப் பற்றி என் சொல்ல? இங்லண்டே முடிவில் மற்ற இருவருக்காகவும் பேசினான். ''இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொள்கிறோம். மாக்ரே எவ்வளவு பணம் கொண்டு வருகிறான்? எதற்காகக் கொண்டு வருகிறான்? எங்கு போகிறான்?'' என்று வினவினான்.

அனந்தின் இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. ''இங்லண்ட்! எ பைரேட் ஈஸ் எ பைரேட். ஹி நீட்ஸ் மணி (இங்லண்ட்! கொள்ளைக்காரன் கொள்ளைக்காரன் தான். அவனுக்குப் பணத்தில்தான் குறி)'' என்று கூறி நகைத்துவிட்டு மேலும் சொன்னான்: ''நான் முதலில் சொன்னதில் பொய்யில்லை. இரண்டு லட்சம் பவுன்களுக்கு மேல் கொண்டு வருகிறான். கார்வாரிலுள்ள பிரிட்டிஷ் தொழிற்சாலை அபிவிருத்திக்கும், அங்கு தொழிலாளருக்குச் சம்பளம் கொடுக்கவும் வேறு சாமான்களைத் தொழிற்சாலைக்கு உள்நாட்டிலிருந்து வாங்கவும் அந்தப் பணம் வருகிறது.''

பணத்தைக் கேட்டதும் டெய்லர் நாக்கை ஒரு முறை வெளியே நீட்டி உதடுகளை அதில் தடவிக் கொண்டான். ஸில்வரின் கண்கள் பளபளத்தன. இங்லண்டின் விழிகளில் கூட பண வெறி துளிர்த்தது. அனந்தும் துலாஜியும் அவர்கள் மனத்தில் ஏற்பட்ட பண வெறியைக் கவனிக்கவே செய்தார்கள். ஆகையால் எட்ட இருந்த துலாஜி அவர்களை மேலும் வலையில் இழுக்க ''மாக்ரேயின் பணத்தில் எங்கள் பங்கு என்ன என்று வினவினான்.

''ஹௌ மச் டு யூ வாண்ட் ஸன்னி (மகனே! உனக்கு எவ்வளவு வேண்டும்?)'' என்று குழைந்தான் டெய்லர்.

''வீ ஆர் கிவிங் ஆல் த ஹெல்ப் (நாங்கள் தான் சகல உதவிகளையும் தருகிறோம்)'' என்றான் இங்லண்ட்.

''ஷ்யூர்லி யூ டோண்ட் வாண்ட் மச் மணி. யூ ஆர் எ பேட்ரியட். யூ வாண்ட் டு ப்ரேக் மாக்ரே. அண்ட் வி ஹெல்ப் யூ (உங்களுக்கு அதிகப் பணம் வேண்டாம். நீங்கள் தேச பக்தர்கள். மாக்ரேயை முறியடிப்பது உங்கள் லட்சியம். அதற்கு நாங்கள் உதவுகிறோம்)'' என்று நரிப் பார்வை பார்த்துக் கபடமாகப் பேசினான் ஸில்வர்.

பணம் அவர்களைப் பிசாசுகளாக அடித்துவிட்டதை உணர்ந்தான் அனந்த். அதனால் உள்ளூரப் பெரு மகிழ்ச்சியும் கொண்டான். இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் ''நாங்கள் தேச பக்தர்களாயிருக்கலாம். இருப்பினும் கொள்ளைக்காரர்கள். தேச பக்தர்கள் கொள்ளைக்காரர்களாக இருப்பதில் தவறில்லை. போயும் போயும் எதிரியைத் தானே கொள்ளையடிக்கிறோம்'' என்று சொன்னான். ''ஆகவே டெய்லர், ஸில்வர், இங்லண்ட்! எங்களுக்குச் சரி பாதி வேண்டும்'' என்றான்.

இங்லண்ட், டெய்லர், இருவரும் சட்டென்று எழுந்தார்கள். ஸில்வர் விறைத்து நின்றான். ''ஒரு லக்ஷமா! இது கொள்ளை'' என்று கூவினான் டெய்லர் கடுங் கோபத்துடன்.

அதற்குப் பிறகு அந்த அறையில் அருவருக்கத்தக்க கூச்சல்தான் இருந்தது. கொள்ளை



என்ன பொருத்தம்!

சென்ற 1977-ஆம் ஆண்டுத் தேர்தலின் போது, எம். ஜி. ஆர். தமது படம் ஒன்றுக்குப் பெயர் வைத்தார்: '**நாளை நமதே**'! படம் வெளிவந்தது. தேர்தலில் அ. இ. அ. தி. மு. க. வெற்றி பெற்று, மந்திரி சபை அமைத்தது.

டில்லி பாராளுமன்றத்திலும் 19 இடங்கள் (எம். பி.க்கள்) அ. இ. அ. தி. மு. க. பெற்றது. தி. மு. க. இரண்டு இடம் பெற்றது.

1980-ஆம் ஆண்டுத் தேர்தல் வருவதற்கு முன்பே கலைஞர் கருணாநிதி '**காலம் பதில் சொல்லும்**' படத்திற்குக் கதை வசனம் எழுதினார். படமும் தேர்தல் முடிந்து வந்திருக்கிறது.

இன்று பாராளுமன்றத்தில் தி. மு. க. 16—ம், அ. இ. அ. தி. மு. க. 2ம் பெற்றன!

-பாலகுமார்

யடிக்கும் பணத்தைப் பங்கிடும் முறை பற்றி விவாதம் பலமாக நடந்தது. துலாஜி அனந்த் இருவரும் சரி பாதிக்குக் குறைய மறுத்தார்கள். பேருக்குத் தளபதியாகவும் உண்மையில் கொள்ளைக்காரராயுமிருந்த சங்கர்பந்த் நாக்கில்கூட ஜலம் சொட்டியது. "அனந்த் சொல்வதில் தவறில்லை" என்று அவரும் கலந்து கொண்டார் பேரத்தில்:

"என்ன தவறில்லை?" சீறினான் டெய்லர்.

"எங்களிடம் மாலுமிகள் அதிகம். காஸண்ட்ரா வலுவுள்ளது. நாங்கள்தான் போரிடப் போகிறோம்" என்றான் இங்க்லண்ட்.

இந்தச் சமயத்தில் ராணியும் பேசினாள். "யாரும் புக முடியாத சிந்து துர்க்கத்தில் உங்களை அனுமதிக்கிறேன். அரபிக் கடலில் ஜன்ஜீராவை விடப் பலமான கடல் கோட்டை சிந்து துர்க்கம். அத்தகைய தளத்தைத் தருகிறேன். அதற்கே ஒரு லக்ஷம் கொடுக்கலாம்" என்றாள் ராணி.

"எ ஃபோர்ட் காண்ட் ஃபைட் (கோட்டை சண்டை போடாது)" என்று கூவினான் இங்க்லண்ட்.



"ஓ எஸ். இட் கான் (சண்டை போடும்)" என்றான் அனந்த்.

"இட் ஹாஸ் ஃபிப்டி டூ டவர்ஸ் (அதில் 52 ஸ்தூபிகள் இருக்கின்றன)" என்றான் துலாஜி.

"அவற்றில் 52 பீரங்கிகளும் இருக்கின்றன" என்றாள் ராணி.

"காஸண்ட்ரா ஹாஸ் த்ரீ ஹண்ட்ரட் அண்ட் எய்ட்டி (காஸண்ட்ராவில் 380 பீரங்கிகள் இருக்கின்றன.)" என்றான் இங்க்லண்ட்.

"ஆனால் காஸண்ட்ரா கோட்டையல்ல" என்று சுட்டிக் காட்டினான் துலாஜி. அடுத்து காஸண்ட்ரா பெருமையும் சிந்து துர்க்கப் பெருமையும் விவாதிக்கப்பட்டன. முடிவில் அனந்த் விட்டுக் கொடுத்தான் டெய்லருக்கு. "ஆல்ரைட் டெய்லர்! வீ வில் டேக் ஒன் தேர்ட். பட் மாக்ரே வில் பி மை பிரிஸனர் (சரி டெய்லர். மூன்றில் ஒரு பாகம் வாங்கிக் கொள்கிறேன். ஆனால் மாக்ரே என் கைதி)" என்றான்.

"ஐ வாண்ட் டு ஹாங் மாக்ரே (நான் மாக்ரேயைத் தூக்கிலிட வேண்டும்)" என்று மிகுந்த ஆவேசத்துடன் கூவினான் டெய்லர்.

அப்பொழுது ஸில்வர் குறுக்கே புகுந்து "டெய்லர்! நீ எப்பொழுதும் கொலை வெறியன். அனந்த் பணத்தை விட்டுக் கொடுத்திருக்கிறான். அவனுக்கு நீ விட்டுக்கொடுப்பது நல்லது" என்று அறிவித்தான். அவன் குரலில் அளவுக்கு மீறிய கண்டிப்பிருந்தது.

என்ன காரணத்தாலோ ஸில்வருக்குப் பணிந்தான் டெய்லர். அன்று மாலை ராணி முன்னதாக ஒரு படகில் சிந்து துர்க்கம் சென்றாள். மறு நாள் காலை காஸண்ட்ரா நங்கூரம் எடுக்கப்பட்டு சிந்து துர்க்கத்தை நோக்கி நகர்ந்தது. வட மேற்கிலிருந்த மலை பிளந்த வழியில் கடல் அலைகள் கொந்தளித்துச் சீறிய நிலையில் காஸண்ட்ரா சிந்து துர்க்கக் கோட்டைக்குள் நுழைந்து நங்கூரம் பாய்ச்சியது. அங்கு அவர்களுக்கு ராணி சகல வசதிகளையும் செய்திருந்தாள்.

கொள்ளைக்கார மாலுமிகள் சிந்து துர்கத்தின் அமைப்பைப் பார்த்துப் பிரமித்தார்கள். இம்முறை டெய்லரும் இங்க்லண்டும் அந்தக் கடற் கோட்டையைச் சுற்றிப் பார்த்தார்கள். திடீரென்று ஓரிடத்தில் இங்க்லண்ட் நின்றான். "அது யார்?" என்று ஓர் உருவத்தைக் காட்டிக் கேட்டான்.

"தெரியாது" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் டெய்லர்.

"அது விநோதமாயிருக்கிறது" என்று கூறி அந்தச் சிலையின் தலையில் இருந்த வெள்ளிக் கிரீடத்தைத் தொட்டு அசக்கினான் இங்க்லண்ட்.

மெல்ல அசைந்தது அந்தக் கிரீடம். அந்தச் சமயத்தில் எச்சரிக்கைக் குரலொன்று இங்க்லண்டின் முயற்சியைத் தேக்கியது. "அதைத் தொடாதே" என்று ராணியின் அதிகாரக் குரலைக் கேட்டு டெய்லர் இங்க்லண்ட இருவருமே திரும்பினார்கள். ராணியின் விழிகள் நெருப்பைக் கக்கின.

(தொடரும்)

அம்மாவுக்குள்ளே இப்படியொரு அரக்கியா? ச்சே!... எவ்வளவு கேவலம்!


ஒரு 'லோ கிளாஸ்' அம்மா மாதிரியில்லே அவ என்னைச் சின்னா பின்னப் படுத்திட்டா!

அடிக்கிறதை யெல்லாம் அடிச்சிட்டு, ''பாவி மகளே! இப்படிப் பாழாய்ப் போயிட்டியேடி''ன்னு அவ அழுதப்போ எனக்கு ரொம்பவும் பரிதாபமாப் போயிட்டுது...

சொல்லப் போனால் இந்த வினையெல்லாம் அந்தப் பாழாய்ப்போன காஞ்சனாவினாலே வந்ததுதான். அவள் ஏன்தான் எனக்கு க்ளோஸ் ஃப்ரண்டானாளோ?...

• • •

காஞ்சனா - அவளைப் பத்தி நினைக்கிறச்சே எனக்கு இப்போ கூட ஒரே பிரமிப்பா இருக்கு. எங்க காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் எல்லோருக்குமே அவளைப் பத்தி நல்லாத் தெரியும். எதையும் பட்டவர்த்தனமாத் தலை



லாவண்யா

— பெமினா —

யிலே அடிச்ச மாதிரி 'ஓபனு' பேசுவாள். 'தேவைன்னு ஏற்பட்டுட்டா அதை நிறை வேத்திக்கிறதிலே எந்தத் தப்புமில்லே' ன்னு சொல்லுவா. அவளோட ஆர்குமெண் டைக் கேட்டா நமக்கு நாமே விதிச்சுக்கிட் டிருக்கிற சில கட்டுப்பாடுகள் எல்லாமே வெறும் நம்பக்குன்னு தோணும். அது மட்டுமில்லே. எப்படி இதையெல்லாம் இவளாலே லேட்டா எடுத்துக்க முடியுதுன்னு ஒரே பிரமிப்பா இருக்கும். அதே 'பிர மிப்பு'தான் எனக்கும் அவளுக்குமிடையே இருந்த இடைவெளியைக் குறைச்ச, அவளை என்னோட 'க்ளோஸ் பிரண்ட்டா'க்கிடுச்சோ என்னவோ?

இல்லேன்னு என்னோட தனிமையை—தூக்க மில்லாமல் தவிக்கிற தவிப்பை — ஒரு மயக்க நிலைக்காக இந்த உடம்பு கிடந்து ஏங்குகிற ஏக்கத்தை இப்படி வெளிப்படையா அவ கிட்டே சொல்லி விருப்பேனு...

அந்தக் குறும்புக்காரி விஷமத்தனமாச் சிரிச்சுக்கிட்டே கேட்டாளே: ''அப்போ, உனக்குக் கூட உணர்ச்சி இருக்குன்னு சொல்லு! போகட்டும்! ஏண்டி உனக்கு நான் எந்த வகையிலே உதவட்டும்? யாராவது பாய் ஃப்ரண்ட் வேணும்னு...''

''நீ சொல்ற மாதிரி. ஒரு பாய் ஃப்ரண் டோட சுத்தற அளவுக்கு எனக்கு இன்னமும் தைரியம் வரலேடீ...''

''பின்னே...: உன்னை நெனைச்சா எனக்கு ரொம்பவும் பரிதாபமா இருக்குடீ....ஒண்ணு செய்யேன்! உங்க வீட்டிலே உன் ஃபாதருக்கு ஊர்க்கா டைப்ரைட்டிங் மெஷினோடு போரா டிக்கொண்டிருக்கானே ஒரு எஸ். எஸ். எல். சி. பையன்; அவனை இழுத்துக்கோயேன்!'' அவள் கொஞ்சமும் கூச்சமில்லாமல் சொன் னாள்.

எனக்குத் 'திக்'கென்றது!

''அடிப் பாவி! இந்த மாதிரியெல்லாம் விஷமத்தனமா அட்வைஸ் பண்ணுதேடி... என் அந்தஸ்தென்ன? அவன் அந்தஸ் தென்ன? என் கால் தூசுக்குச் சமமானவனு அவன்? டீ என்னோட கற்பனைகள் ரொம்ப வும் பெரிசுடீ.... என் அத்தை பையன் ரமேஷ் ஸ்டேட்ஸுக்கு மேல் படிப்புக்காகப் போயிருக்கான். அவனைக் கல்யாணம் பண் ணிக்கிட்டு 'ஹனிமூனு'க்கு சுவிட்சர்லாண்ட் போகணும்னு பிளான் பண்ணி யிருக் கேன்டி...: அப்படியிருக்கச்சே, இந்த வயத் துக்கில்லாத ஆஃப்ட்ரால் ஒரு எஸ். எஸ். எல். சி. பையனைப் பண்ணிக்கிட்டு... நோ, நோ! யூ ஆர் ராங்க்...'' நான் கோபத் தோடு சொன்னேன்.

''நீ சொல்றதும் வாஸ்தவம்தான். ஆனா, நான் அவனைக் கல்யாணம் பண்ணிக்கவா சொன்னேன்? சும்மா ஒரு 'அட்ஜெஸ்ட்மென் டு'க்குத்தானே....''

''அது...என் ரமேஷுக்கு நான் செய்யற துரோகமில்லையாடீ....''

''ஆமாண்டி, இவ்வளவு பழைமையைக் கட்டிக்கிட்டு மாரடிக்கிறவ இதைப் பத்தி யெல்லாம் நினைக்கவே கூடாது. உன் டார் லிங் ரமேஷ் அங்கே 'ஃபாரின்லே' உன்னையே நினைச்சுக்கிட்டு ஏங்கிட்டு இருக்கிறதா நம் பிக்கிட்டிரு! அவன் இந்நேரம் எத்தனை இளசு களையும், பழசுகளையும் பதம் பார்த்தானோ? யார் கண்டது?....''

படியும் மம்மியும் சினிமாவுக்குப் போயிருக்கும் ஒரு ஞாயிற்றுக் கிழமையின் மாலைப் பொழுது. அன்றைக்குக் காஞ்சனா விடம் வாங்கிக் கொண்டு வந்த 'செக்ஸ்' புத்தகத்தை யெல்லாம் பரப்பி வைத்துக் கொண்டு கட்டிலில் படுத்தபடியே ஒவ் வொண்ணுப் படிக்கத் தொடங்கினேன்.

கீழே ஹாலிலிருந்து வரும் 'டைப் ரைட்டிங்' மிஷின் சப்தம் இந்தப் பெரிய வீட்டோட பயங்கரமான நிசப்தத்தைக் குலைத்து ஒரு ஜீவனுள்ள மெஷினோட வாழ்க் கைப் போராட்டத்தைச் சுருதி நயத்தோட நினைவுபடுத்தற மாதிரி ஓர் எண்ணம்....

நேரம் போகப் போக மனசுக்குள்ளே ஆயிரக் கணக்கான 'காமப் பூக்கள்' ஒவ் வொண்ணு மலரத் தொடங்கி உடம்பு பூரா இனம் தெரியாத உஷ்ணத்தை உண் டாக்கி, பெருமூச்சுக்களை வெளி விட்டுக் கிட்டிருக்கு. இந்த நிமிஷத்திலே காஞ்சனா ஒரு வழிகாட்டியாக, தீர்க்கதரிசியாகக் கண்ணுக்குப் புலப்பட்டாள்.

'அவனை இழுத்துக்கயேன்' — காஞ்சனா வோட குரல் காதுக்குள்ளே கிசுகிசுக்கிற மாதிரி இருக்கு... முகம் வெட்கத்தால் சிவந்து போகிறது....

கொழுந்து விட்டு எரியும் காமத் தீயிலே நியாயங்களும், தர்மங்களும் வெந்து கருகின. பின்னால் நான் ஒரு நிமிஷம்கூட வீணாக்கலே.


படுக்கையிலிருந்து எழுந்து மாடி வராந் தாவில் நின்னபடியே, ஹாலில் மெஷினோட மல்லுடிச்சுக்கிட்டிருந்த அந்த ஜீவனுள்ள மெஷினை மேலே வரும்படி கையைக் காட்டி அழைக்கிறேன்....

மேலே என் பெட் ரூமுக்கு வந்த அவன் என்னோட கோலத்தைக் கண்டு திடுக்கிட்டுத் திக்பிரமை பிடித்து நிற்கிறான். சிறிது நேர பிரமைக்குப் பின்னால் அவனோட கண் களில் காமப் பூக்கள் 'பளீர் பளீர்' என்ற பிரகாசத்தோடு மலருகின்றன.

உஷ்ணத்தில் கொதிக்கிற இந்த உடம்பும் மயக்கத்தில் சொருகிப்போன கண்களும் ஈரப் பசைக்காக ஏங்குகிற உதடுகளும் இன் னும் இன்னும்....

—இவையெல்லாமே இந்தத் திரிசங்கு சொர்க்கத்தோட அற்புதங்கள்!

நிச்சயமா நடந்து போகுது பெரிய தவறுதான்னு இப்போ எனக்குப் புரியுது.



என்னோட கௌரவத்துக்கும், அந்தஸ்துக்கும் கொஞ்சம் கூடத் தகுதியில்லாமல், அந்தப் பையன் கிட்ட நான் 'இணை' சேர்ந்திருக்கக் கூடாதுதான். மம்மி அடிச்சதிலே எந்தக் குற்றமும் சொல்லக் கூடாது. ஆனா, மம்மிக்கு இந்த விஷயம் தெரியாமலேயே இருந்திருக்கலாம்னு தோணறது. என்ன செய்ய?

அந்தத் தப்புக்குப் பிறகு அவனோட புன் சிரிப்பையும், கண் சிமிட்டலையும் பார்க்கறச்சே குமட்டிக்கிட்டு வர்றது. இவனை இனியும் விட்டு வைச்சா நேரம் கிடைக்கும் போதெல்லாம் சொந்தம் கொண்டாட வருவான்னு நல்லாப் புரிஞ்சதாலே மம்மி கிட்டே அவனைப் பத்தி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வேலையிலிருந்தே நிறுத்தச் செய்து விட்டேன். போகறச்சே கண்ணீரோட அவன் பார்த்த பார்வை எனக்கே ரொம்பவும் சங்கடத்தை உண்டு பண்ணிட்டுது.

அவன் போய்விட்டான். ஆனால்...

வழக்கத்தையும் மீறிப் பதினைந்து நாளாகியும் ஒண்ணும் காணலை.... எனக்குப் பயமாப் போயிட்டது. நடுங்கற மனசோட காஞ்சனா கிட்ட ஓடினேன். அவகிட்ட எல்லாத்தையும் சொல்லிக் குலுங்கி அழுதேன்.

அவள் ஆதரவா என்னை அணைச்சுக்கிட்டுச் சொன்னாள்: "லுக் லாவண்யா! ப்ளீஸ் டோன்ட் க்ரை. இட் இஸ் எ ஸில்லி மேட்டர். நாம் இதற்கு வேண்டிய பரிகாரம் பண்ணலாம்..."

• • •

அவள் தனக்குத் தெரிந்த டாக்டர் ஒருத்தர் கிட்டே என்னை அழைச்சுக்கிட்டுப் போய்க் காட்டினாள். அவர் என்னைப் பரிசோதித்த பின்னால் சொன்னார்: "ஒரு ரெண்டு, மூன்று நாள் தங்கியாகணும். வீட்டிலே எங்காவது 'டூர்' போறதாச் சொல்லிட்டு வந்துடும்மா. வேண்டியதைச் செய்யலாம். கவலைப்படாமப் போய் வாம்மா."


நெஞ்சு கனக்கிறது. ரொம்ப நேரம் காஞ்சனா கிட்டப் பேசிக்கிட்டிருந்துட்டுத் தைரியத்தை வரவழைச்சுக்கிட்டு வீட்டுக்குப் புறப்பட்டேன்.

வீட்டுப் படியேறினதும் அப்படியே 'திக்பிரமை' பிடிச்சு நின்னுட்டேன். வீட்டிலிருந்து அந்த மனிதன், பாழாய்ப்போன அந்த டாக்டர் வெளியே வந்தார். என்னைப் பார்த்துச் சோகமா ஒரு புன்சிரிப்புச் சிரிச்சுட்டுக் காரில் ஏறிப் போய்விட்டார்...

அந்த டாக்டரை இதற்கு முன்னால் எப்போதுமே பார்த்தாக நினைவில்லே. ஆனால் அந்த டாக்டருக்கு என்னைத் தெரிஞ்சிருக்கு. பாவி மனுஷன் தனக்கு வேண்டப்பட்டவரோட பொண்ணு வீணாய்ப் போய்ட்டாளேங்கற ஆதங்கமோ என்னவோ வீட்டிலே வந்து வத்தி வெச்சுட்டார். மம்மி இப்படி அரக்கியா மாறினதுக்கு இதுதான் காரணம்.

மாலை, அப்பா வந்த கார் சப்தம் கேட்டபோது உடம்பெல்லாம் பதறிப் போறது. துக்கம் தொண்டையை அடைக்கக்

அவன்: வாங்கின கடனைத் திருப்பித் தருகிற பழக்கமே உனக்குக் கிடையாதாமே உண்மையா?



இவன்: அது உண்மையா பொய்யாங்கிறதை நீயே அனுபவத்தில் புரிஞ்சுக்கவேன்!

-உ. ராஜாஜி

கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. வானம்பாடி மாதிரி சுதந்திரமாச் சுத்தித் திரிஞ்சுக்கிட்டிருந்த நான் இன்னிக்குக் கூட்டுப் புழுவா இந்த அறைக்குள்ளேயே அடைஞ்சு கெடக்கிறேன். ஓ, என்ன கொடுமை!

காலடியோசை கேட்கவே நிமிர்ந்து பார்க்கிறேன். மம்மி!

தலையணையில் முகம் புதைச்சுக்கறேன்! மனசு துடிக்கிறது.

பக்கத்திலே வந்து உட்கார்ந்து ஆதரவா தலையைக் கோதி விட்டபடியே மம்மி சொல்றாள்: "லாவண்யா! அழாதேயம்மா இனி அழுது என்ன பிரயோசனம்? நடக்கக் கூடாததெல்லாம் நடந்துட்டுது. இனி நடக்க வேண்டியதைப் பத்தி யோசிப்போம். உன் தலைவிதி இப்படி ஆகும்னு யார்தான் கண்டார்கள்? அழாதேம்மா... அப்பா, அவனை அழைச்சுக்கிட்டு வரத்தான் தஞ்சாவூர் போயிருக்கார். உன் மனசுப்படியே அவனையே உனக்குக் கல்யாணம் பண்ணி வெச்சுடறேன். அழாதேம்மா...!"

இதுவரைக்கும் வெளியே இடிச்சுக்கிட்டிருந்த இடி, இப்போ என் தலையிலேயே விழுந்துட்டதோ?

"மம்மி....!" அதிர்ச்சியால் வாயடைத்துப் போக, அவளைப் பயத்தோட ஏறிட்டுப் பார்த்தேன்.

"என்னம்மா?...." அவள் அணைத்தபடியே கேட்கிறாள். எப்படிச் சொல்வேன்?

"மம்மி...! அவனையா கல்யாணம் பண்ணிக்கச் சொல்றே! நோ மம்மி, நோ! ஐ டோன்ட் லைக் தட் ஃபெலோ..." நான் குமுறுகிறேன்.

"பின்னே....!" ஆச்சரியத்தோட அம்மா கேட்கிறாள். "பிடிக்காமலா அவன் கூட...."

தயக்கத்தோடு பதில் சொல்கிறேன். "ஓ, மம்மி! ஏதோ ஒரு... நான் எப்படிச் சொல்வேன்? நடந்துட்ட தவறுக்காக நான் ரொம்ப ஃபீல் பண்றேன் மம்மி...ஆனா, அதுக்காக என்னை அவன் தலையிலே கட்டி வெச்சு, வாழ்நாள் முழுக்க நான் கண்ணீர் விடற மாதிரி பண்ணிடாதே மம்மி... ப்ளீஸ் மம்மீ...."

கண்களில் கண்ணீர் மழையாகக் கொட்டறது. அவள் என்னோட முகத்தில் என்னமோ ஆராய்கிறாள்.

"டீ லாவண்யா! நீ என்னடீ சொல்றே... என்னாலே புரிஞ்சுக்க முடியல்லேடீ..."

''ஓ, மம்மி! உனக்கு நான் எப்படிப் புரிய வைப்பேன்...! சொல்றேன் மம்மி... ரமேஷோட நான் வளர்த்துக்கிட்டிருக்கிற கற்பனைகளை... அவனைத்தவிர வேறே யாரையும் நான் கட்டிக்க விரும்பல்லே!...''

''அப்ப உன் வயிற்றிலே வளர்ற சிசு...'' அவள் கேள்விக் குறியோட என்னைப் பார்க்கிறாள்.


''அது வந்து... வந்து... மம்மி... முதல் மாசம்தானே.... 'ஈஸி'யா அபாலிஷ் பண்ணிடலாம்....'' நான் தயங்கித் தயங்கிச் சொல்றேன்.

அடுத்த நிமிஷம் அவள் என்னைப் பார்த்த பார்வை.... ஓ, காட்! அப்பா பார்த்த அதே பார்வை!... சிவப்பேறி வந்த கண்கள் தீப்பிழம்புகளாய் ஜொலிக்க, என்னோட தலை முடியை வாரிப் பிடித்து முகத்தில் காரித் துப்புகிறாள்.

''அடிப் பாவி! உன்னோட மனசுக்குள்ளே இந்த அளவுக்கு விஷ வித்தை யாருடி தூவினா!.... ஐயோ, தெய்வமே! என்னோட வயத்துலே இவ வந்து பொறக்கறதுக்கு நான் என்ன பாவம் பண்ணினேன்....ம் சண்டாளி! படிச்சவன்னு பெருமையா சொல்லிக்கிறியே, இந்தப் புனிதமான மண்ணுலே பொறந்துட்டு இப்படியெல்லாம் பேசறதுக்கா உன்னோட காலேஜ் படிப்பு உதவினது? பொண்ணுங்கறவ ஒருத்தனோட ஒரு நிமிஷம் வாழ்ந்துட்டாப் போதுண்டி; தான் சாகற வரைக்கும் அவனோடவே தன்னோட வாழ்க்கையை ஐக்கியப்படுத்திக்கறதுலேதான் இந்த மண்ணோட சிறப்பே இருக்கு... களங்கப்பட்ட உடம்போட வாழற ராஜ வாழ்க்கையை விட சாகறது மேல். இத நல்லா மனசிலே வெச்சுக்கோ!... உனக்கு அந்தப் பையன் ரகுதான் மாப்பிள்ளை... இது நீயாத் தேடிக்கிட்ட முடிவு.... என்கிட்டே உளறின மாதிரி அப்பாகிட்ட உளறாதே...''

மம்மி புயலாகச் சீறிவிட்டுப் போய்விட்டாள். இந்த இடியும், பேய்க் காற்றும், பெரு மழையும் என்னோட இதயக் குமுறல் கிட்டத் தோற்றுப் போகுது.

மம்மி, சொன்ன தர்மப்படி நான் ரமேஷை மட்டுமில்லே, ரகுவைக் கூடக் கட்டிக்க முடியாதே! ஏன்னா ரமேஷ் இங்கே இருந்தப்போ யாரும் இல்லாத தனிமையில் இரண்டு மூணு தடவை நானும் அவனுமா... சே! அப்பவே மம்மியோட தீர்ப்புப்படி நான் அவனுக்குச் சொந்தமாயிட்டேன். அப்படியானால்...டார்லிங் ரமேஷ்! நான் உனக்குத் துரோகம் பண்ணிட்டேன்! என்னை மன்னிச்சுடு! இந்தத் தவறுக்கெல்லாம் பிராயச்சித்தமா இதோ டாடியோட ஷெல்பில் இருக்கிற தூக்க மாத்திரைகள் எனக்குச் சாந்தியை அளிக்கட்டும்.



அருள் வாக்கு

குரு பக்தி

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள்



'ஈசுவரனைக் காட்டிலும் குரு பெரியவர்; ஈசுவர பக்தியைக் காட்டிலும் குரு பக்தி விசேஷம் என்கிறார்களே ஏன்?' என்று கேட்டால், நம்மில் யாரும் ஈசுவரனைப் பார்க்கவில்லை. பிரத்யட்சமாக நாம் பார்க்கக் கூடிய ஒரு மனிதர் சுத்தராய், ஞானம் உடையவராய், அசைவில்லாத சித்தமுடையவராய் நமக்குக் கிடைத்துவிட்டால் நாம் எந்த மனச் சாந்திக்காக ஈசுவரனிடத்தில் போகிறோமோ அந்த சாந்தி இவரிடம் பக்தி செலுத்தினாலே கிடைத்து விடுகிறது. அதனால்தான்

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு:
குருர் தேவோ மஹேச்வர:

என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ச்லோகத்தில் குருவுக்கும் பரமாத்மாவுக்கும் அபேதம் சொல்லியிருப்பது ஒரு விசேஷம். Incidental ஆக இதிலேயே இன்னொரு விசேஷம். இதில் ஒரே குருவை விஷ்ணு, சிவன் என்ற இருவராகவும் சொல்லியிருப்பதால் அந்த இரண்டு பேரும் ஒன்றேதான் என்றும் ஏற்பட்டு விடுகிறது! இந்த ஆரம்ப ச்லோகத்தைச் சொல்லி குரு வந்தனம் பண்ணும்போதே நமக்கு சிவ-விஷ்ணு அபேத பாவமும் உண்டாகிவிடும்.

ஜகத்தை சிருஷ்டிப்பது, பரிபாலிப்பது போன்ற பல காரியங்கள் ஈசுவரனுக்கு இருக்கின்றன. அவையெல்லாம் குருவுக்கு இல்லை. அவனுக்கு ஆபீஸ் உண்டு; இவருக்கு ஆபீஸ் இல்லை. ஆபீஸ் இருக்கிறவனிடம் போய்த் தொந்தரவு கொடுப்பதை விட ஆபீஸ் இல்லாமல் சும்மா இருக்கிறவரிடம் நம் காரியத்தை மிக எளிதாக முடித்துக் கொண்டு விடலாம். ஈசுவரனுக்கு என்ன என்ன உத்தமமான குணங்கள் இருக்கின்றனவோ அவையெல்லாம் இந்தக் குருவினிடத்தில் இருக்கின்றன. இவரைப் பிரத்யட்சமாகப் பார்க்கிறோம். பகவானையோ பிரத்யக்ஷத்தில் பார்க்க முடியவில்லை. ஆகவே குருவின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு பக்தி செய்ய ஆரம்பித்துவிட்டால், ஈசுவர பக்தியினால் நமக்கு என்ன அநுகூலங்கள் உண்டாகின்றனவோ அத்தனையும் சுலபமாக உண்டாகி விடும். அதனால்தான் குரு பக்தி உயர்ந்தது என்று சொன்னார்கள்.

ஆனால் தெய்வ பக்தியை மறக்கக் கூடாது. இந்த குருவை இவரோடு சேர்த்து வைப்பதே தெய்வம்தானே? தெய்வ அநுக்ரஹத்தால்தான் ஒருவனுக்கு மனுஷ்ய ஜன்மா, மோக்ஷ நாட்டம், மஹாபுருஷனான குருவின் ஸங்கம் என்ற மூன்றும் கிடைக்கின்றன என்று ஆசார்யாள் ''விவேக சூடாமணி'' ஆரம்பத்தில் சொல்லியிருக்கிறார். நம் குரு, அந்த குருவுக்கு குரு, அவருக்கும் குரு என்று சொல்லிக் கொண்டே போனால், கடைசியில் ஒருத்தருக்கு ஈசுவரனே ஆதி குருவாக இருந்து ஞானத்தைத் தந்திருக்க வேண்டும். எனவே தெய்வத்தை மறக்கக் கூடாது.

குரு, ஈசுவரன் என்று இரண்டு பேர் வைத்துக்கொள்ளாமல், ஈசுவரனே குருவாக வந்திருக்கிறான் என்று வைத்துக் கொண்டு விட்டோமானால், குரு பக்தி, ஈசுவர பக்தி என்று இரண்டு தனித் தனியாகப் பண்ண வேண்டாம். குருவே ஈசுவரன் என்று கருதி அந்த குருவான ஈசுவரன் ஒருத்தனிடத்திலேயே பூர்ண சரணாகதி பண்ணிவிடலாம். நமக்குக் கிடைத்த குரு பரம சுத்தமானவராக, உத்தமமானவராக இல்லாவிட்டாலும் கூட, இவர் மூலமாக நாம் நித்திய சுத்தனும், உத்தமோத்தமனுமான ஈசுவரனையே பக்தி பண்ணுவதால், அந்த ஈசுவரனே இவர் மூலமாக நமக்கு அநுக்ரஹம் பண்ணிவிடுவான். இதனால்தான் குருவையே பிரம்மா—விஷ்ணு — சிவன் மூன்றுக்கும் ஆதாரமான பரப்பிரம்மம் என்று சொல்கிறார்கள்.

குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேச்வர:
குருஸ் ஸாக்ஷாத் பரப்ரம்ம தஸ்மை
ஸ்ரீ குரவே நம: ||



குழியில் விழுந்த காய்கள்!

லீலா கோபாலன்

“நட்டுவுக்கு இந்த வருஷம் கல்யாணத்துக்கு ஏதாவது பார்க்கிறயாடி பாகீ....” காமாட்சி மாமி அம்மாவிடம் கேட்டது, அவன் காதில் முள்ளாகப் பாய்கிறது. இந்த மாமிக்கு என் கல்யாணத்தைப் பற்றி ஏன் இத்தனை அக்கறை....

“..‘எனக்கென்னம்மா கல்யாணத்துக்கு அவசரம்.... இன்னும் மேலே படிக்கணும்’கிறான். கோமதி எப்போ தன் பெண்ணைக் கொடுக்க முடியாதுன்னு சொல்லிட்டாளோ அதுலேர்ந்து ஒரே பிடிவாதமா இருக்கான்.” அப்புறம் அம்மா ஏதோ தாழ்ந்த குரலிலே சொல்லுகிறாள்.

காமாட்சி மாமி உரக்கப் பதிலளிக்கிறாள். “நன்னாருக்குமே.... இந்தக் காலத்திலே கூன் குருடுகளுக்குக் கூடக் கல்யாணமாயிடறது. ராஜா மாதிரி இருக்கான் நட்டு.... செத்தே காலை விந்தி விந்தி நடக்கிறான்கிறதைத் தவிர அவனுக்கென்ன குறைச்சல்? அப்பா வெச்சுட்டுப் போன சொத்து இருக்கு... படிப்பான படிப்பு.... என்னமோ உன் நாத்தனாருக்குத்தான் புத்தி கெட்டுப் போச்சு... ‘ராஜாத்தி மாதிரி எம் பொண்ணை நொண்டிப் பயலுக்குக் கொடுப்பேனான்’னு வேறு இடம் பார்க்கறா....”

‘நொண்டி’ என்ற வார்த்தை ஊசியாக அவன் நெஞ்சத்தைத் தைக்கிறது. அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் சத்தம் செய்யாது அறையின் வேறு வழியாக வெளியே சென்றான்.

சாருவின் நினைவை அசை போட்டபடி நடந்து கொண்டிருந்தான் நடராஜன்.

அவன் வெளியில் யார் வீட்டுக்கும் அதிகம் அரட்டையடிக்கப் போக மாட்டான். அடுத்த தெருவிலிருக்கும் அத்தை வீட்டுக்கு மட்டும் போகலானான். அவனைவிட சிறியவளாயினும் கள்ளம் கபடமில்லாது பழகும் அவன் அத்தை பெண் சாரதாவின் நட்பு அவனை ஈர்த்தது. குண்டு முகமும், கருவிழிகளும், நீண்ட தலைமுடியை இருபுறமும் நெளிய விட்டுக் கொண்டு உடம்பைச் சுழற்றிச் சுழற்றி நடப்பது ஓர் அழகு.

‘நட்டு அண்ணா’ என்று குதித்தோடிக் கொண்டு வருவாள். ஒரு தட்டு நிறையத் தேன்குழலோ, ஓமப்பொடியோ எடுத்துக் கொண்டு வருவாள். அதை நடுவில் இருவருக்கும் கை எட்டுகிறாற்போல் வைத்துக் கொண்டு, நடுநடுவே பட்சணத்தைச் சுவைத்துக்கொண்டே இருவரும் ‘கேரம்’ விளையாடுவார்கள். விளையாட்டின் சுவாரசியத்தின் நடுவே இருவரும் ஒன்றாகத் தட்டில் கையைப் போட்டு பட்சணத்தைத் துழாவ இருவருடைய கைகளும் ஒன்றுக் கொன்று பின்னிவிட ‘ஹோ’ வென்று சிரிப்பார்கள் இருவரும். அப்போதெல்லாம் பன்னிரண்டே வயதான சாரதாவின் முகத்தில் நிஷ்களங்கமான நிர்மலமான களிப்பு, ஆட்ட சுவாரசியத்தில் தட்டைப் பார்க்காமல் ‘தேன்குழல்’ என்று அவன் விரலைப் பிடித்து இழுத்துவிட்ட, வேடிக்கை மட்டுமே வெடிச் சிரிப்பாக மாறும். ஆனால் அரும்பு மீசை மலர்ந்து பதினேழு வயதை எட்டிக் கொண்டிருக்கும் நட்டுவின் மனத்தில் அதற்கும் அப்பாற்பட்ட ஏதோ ஓர் உணர்ச்சி ஏற்படுவதை அவன் வாலிபம் உணர்த்தியது. இத்தனை அன்பாகப் பழகும் அத்தை; சாரதாவைத் தனக்கு மணம் முடிக்க விரும்புவாளா? சாரதா தன் வாழ்நாளைத் தன்னைப் போல் ஓர் ஊனமுற்றவனுடன் கழிக்க இசைவாளா? இல்லை அவன் காட்டும் அன்பு காதலாக மலர்ந்து கதைகளில் வருவது போல், பண்ணிக் கொண்டால் நட்டு அம்மாஞ்சியைத்தான் பண்ணிக் கொள்வேன். அவனுக்குக் கால் சிறிது ஊனம் என்பதைத் தவிர என்ன குறைச்சல்” என்று வாதித்துச் சாதித்துத் தன்னை மணப்பாளா?

அரை வருடப் பரீட்சையில் மும்முரமாக இருந்துவிட்ட நட்டு பரீட்சை முடிந்து

ஒரு நாள் சாரதாவுடன் சிறிது நேரம் கழிக்க விரும்பி அவன் வீட்டுக்குப் போனபோது சாரதா ஓடிவரவில்லை. ''சாரு....'' என்று இருமுறை அழைத்தான். அதற்குள் அத்தை உள்ளேயிருந்து ஓடிவந்தாள்.

''வா... நட்டு.... சாரு இனிமே ஒன்னோட உக்காந்து 'கேரம்' எல்லாம் வெளையாட வரமாட்டா... பெரியவளாயிட்டா... மெத்தையிலே உக்கார வெச்சிருக்கேன்.... அவள் குழந்தை புத்தி மாறி என்னிக்கு பொறுப்பு வருமோ... செல்லக் குழந்தையா வளர்த்தாச்சு இனிமே ஒருத்தன் கையிலே பிடிக்கக் கொடுக்கிற வரைச்சும் வயித்திலே நெருப்பைக் கட்டிக்கணும்..... 'சுவாமி உன்னுக்குத்தானே நான் வரக் கூடாது. நட்டு அண்ணாவைக் கூப்பிடேன். கேரம் விளையாட..... போரடிக்குதும்மா...' என்கிறாள். நீ உலகம் தெரிஞ்ச பிள்ளே... இனிமே இங்கே வர்ரதைக்கொறச்சுக்கோ... இப்படிச் சொல்றேனே அத்தைன்னு மனசுக்குக் கஷ்டப்பட்டுக்காதே....''

அவனுக்கு இப்போது எல்லாமே புரிந்து விட்டது. அத்தை, சாரதாவைப் பிடித்துக் கொண்டு போகும் ஒருத்தன் தான் இல்லை என்பதை மட்டுமல்ல... 'அவள் திருமணத்துக்கு உங்கள் சிநேகிதம் குறுக்கே நிற்கக் கூடாது' என்பதையும் தெளியச் சொல்லி விட்டாள்.

கணவனாகும் முறை இருந்தும் அவனுக்கு அண்ணாவாகவே இருக்கத்தான் தன்னை ஓர் ஊனக்காலோடு படைத்து விட்டதோ விதி!

அன்று அவன் ப்ராக்டிக்கலை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். சற்றே வெளிச்சம் மறைந்து கருக்கல் விழும் வேளை. வெகு நேரம் லாபரேட்டரியிலிருந்து 'கெமிஸ்ட்ரி ப்ராக்டிகல்' செய்ததில், கண்கள் அழற்சி தந்தன. உடலோடு மனமும் சோர்ந்திருந்தது.

எதையோ நினைத்துக் குனிந்து நடந்து கொண்டிருந்தவனுக்குச் சட்டென்று பரிச்சயமான அந்த நடை. ஹைஹீல் செருப்பின் மேல் ஊதா நிற நைலக்ஸ் புடவையின் கீழே ஊதா நிற உட்பாவாடையின் 'ஃப்ரில்' களினூடே 'மழுமழு' கூழாங் கற்களைப் போன்ற குதிகால் சுழன்று சுழன்று பின் வந்து போகும் அந்த நடை சாரதாவுடையது தான். தன் விந்தும் காலைச் சற்றே வீசிப் போட்டு நடந்தான். அவன் காலணிச் சத்தம் கேட்டுத் திரும்பினாள் அவள்.

'சாரதா' என்று விளித்தான் அவன் ஆவலை அடக்க மாட்டாது. ''சாரதா! இன்று கார் வரவில்லையா? ஏன் இத்தனை லேட்....?''

''எங்களுக்குப் பள்ளி கடைசி வருடம் இல்லையா? 'ஸோஷல் ஃபங்ஷன்... அப்பா ஊரில் இல்லை....''

''இப்படித் தனியாக வருவதை அப்பா அனுமதிப்பாரா... இருட்டும் நேரம்.!.''

''வேறொரு சிநேகிதியுடன்தான் வந்தேன். அடுத்த தெரு வரை... இன்னும் கொஞ்ச தூரம் தானே...''



சந்தர்ப்பதை நழுவ விடாது, ''சாரதா! என்னைப் பார்க்கும்போதே நீ தூர விலகிச் செல்லும்படி நான் என்ன தவறு செய்தேன்? உன் களங்கமில்லாத உள்ளம் என்னைக் கவர்ந்தது. உன் கம்பெனி எனக்கு மனத்துக்கு எத்தனை ஆறுதல் அளித்தது தெரியுமா? அத்தை உன்னுடன் நான் இனி அடிக்கடி வந்து கேரம், செஸ் விளையாடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சொன்னபோது கூட நீ என்னிடமிருந்து அறவே விலகிச் சென்று விடுவாய் என்று நான் நினைக்கவில்லை....'' உணர்ச்சி வசப்பட்டுப் பல நாள் அடக்கி வைத்திருந்த தன் எண்ணக் குவியல்களைக் கொட்டினான் அவன்.

''உண்மை. சிறு வயதில் நானும் உன் நட்பை விரும்பினேன். ஆனால் ஒரு வயது வந்து அவரவர் வாழ்க்கை அமைத்துக்கொள்ளும் 'கட்டம்' வரும்போது சில நெருக்கங்கள் விலகிப் போவதே அவர்களுக்கு நன்மையாக இருக்கும்....''

சாரதாவா இத்தனை பேசுகிறாள்! அத்தை சொல்லிக் கொடுத்த பாடமா?

''எனக்கென்று லைஃபில் சில 'ஆம்பிஷன்ஸ்' இருக்கு. என்னை மணப்பவர் நல்லதொரு கிரிக்கெட் பிளேயராக... டென்னிஸ் சாம்பியனாக.... பதவி - ஸ்டேடஸ்' உள்ளவராக...''

''போதும்.. என்னைக் குத்திக் காண்பித்துக் கொல்லாதே.... உன் வாழ்க்கைக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் நான் நடந்து கொள்ள மாட்டேன். நீ பெற்றோரால் கட்டுப்படுத்தப்பட்டுத்தான் என்னை ஒதுக்கிறாய் என்ற எண்ணம் தவறு என்று இப்போது தெரிந்து கொண்டேன்.''

''முதலில் பெற்றோர் கட்டுப்படுத்தியது உண்மை. அதன் பின் நானே என் நிலையைப் புரிந்துகொண்டு உன்னை 'மீட்'பண்ணுவதைத் தவிர்த்தேன். அன்பு ஓரிடத்தில் உறைந்து விட்டால் மாற்றுவது கடினமாகி விடும். அதற்காகத்தான் காலம் தாழுமுன் விலகிக் கொண்டேன்...''

சாரதா முன்னே நடக்கத் தொடங்கி விட்டாள். நொந்து வெந்து கொண்டிருந்த நட்டுவுக்கு வாழ்வே முடிந்துவிடாதா என்று தோன்றியது. வாழ்க்கையில் ஏற்பட்ட நிராசையில் பரீட்சையில் தீவிரம் காட்டி அவ்வருடம் மாநிலத்திலேயே முதலாவதாக பி.எஸ்ஸி.யில் தேறியதோடு பெங்களூர் ஸயன்ஸ் இன்ஸ்டிட்யூட்டில் ''கம்ப்யூட்டர் ஸயன்ஸ்'' படிப்புக்கு ஸ்காலர்ஷிப் போடு புறப்பட்டுவிட்டான், அத்தை வீட்டாரைப் பற்றி எதுவும் காதில் விழாது எங்கேயாவது போய்விட வேண்டும் என்ற தன் விருப்பத்துக்கிணங்க.

முதன் முதலாகத் தன் தாயாரைப் பிரிவது அவனுக்குக் கடினமாகவே இருந்தது. ஆனால் எதையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் வளர்ந்து விட்டது அவனுள்.

அவன் பெங்களூரில் இருக்கும்போது அவன் அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது. ''சாரதாவுக்குப் பெரிய இடத்தில் கல்யாணம் நிச்சயமாகி யிருப்பதாக.

சாரதாவை ஒருமுறை அலங்கார பூஷிதையாய் மணக் கோலத்தில் மானசீகமாகக் கண்டு தன்னை மறந்து பூரித்துப் போனான் அவன். அவள் தன்னை ஒதுக்கி விட்டாலும் அவள் நல்ல கணவனை அடைந்து எங்கிருந்தாலும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று கண் மூடி இறைவனை வேண்டிக் கொண்டான். கல்யாணத்துக்குச் சென்று கண் குளிரத் தம்பதிகளைக் காண வேண்டும் என்ற ஒரு அவாதான் அவனுக்கு. அம்மாவும் அவனைப் பார்க்கத் துடிக்கிறாள். ஆயினும் ஏதோ ஓர் உணர்ச்சி அவனைத் தடுத்து நிறுத்திவிட்டது.

அவன் விடாமுயற்சியில் அவன் எடுத்துக்கொண்ட 'கம்ப்யூட்டர்' படிப்பிலும் சிறப்பாகவே தேர்ச்சி பெற்று, 'ஃபுல் ப்ரைட்' ஸ்காலர்ஷிப் பெற்று மேற் படிப்புக்கு கலிஃபோர்னியா'வில் பெர்க்லீ பல்கலைக் கழகத்துக்கு அனுப்பத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இதை அவன் தன் வாழ்வில் புது மலர்ச்சியாகவே நினைத்து மகிழ்ந்தான்.

இந்த நற்செய்தியுடன் அவன் சென்னைக்கு வந்தபோது அம்மா அவன் திருமணத்தை ஒரு பிரச்னையாக முன் வைத்தாள்.

அவன் தாயார் குறிப்பிட்ட விமலாவின் குடும்பம் ஏழை சம்சாரிக் குடும்பம். ஆயினும் விமலாவுடன் பேசிப் பழகியபோது அவனுக்குப் பிடித்திருந்தது. அவனும் தன் மனப்பூர்வ சம்மதத்தைத் தெரிவித்தான். எளிமையாக அவர்கள் திருமணம் நடந்தது.

மூன்று மாதம் கழித்துப் புது மனைவியையும் வயதான தாயாரையும் விட்டுச் செல்வது அவனுக்கு மனத்துக்குத் தாங்கொணு பாரமாகவே இருந்தது.

அமெரிக்காவில் உள்ள பெர்க்லியை அடைந்ததும், தன் ஆராய்ச்சிப் பணியைத் தொடங்கினான். தன் முழு கவனத்தையும் செலுத்தித் தீவிரமாக ஈடுபட்டான். பேராசிரியர்களின் நன் மதிப்பையும் ஆதரவையும் பெற்றான்.

விமலாவின் அளவளாவும் அன்பு பொங்கும் கடிதங்களைப் படித்து மெய் மறந்தான். மஞ்சள் தடவிய கடிதத்தைப் படித்ததும் சந்தோஷத்தில் சிறிது பருத்து விட்டான். ''நீ புறப்படும்போதே மெய்யோ பொய்யோன்னிருந்தது. இப்போது ஆறும் மாதம், சாஸ்திரத்துக்கு வளைகாப்பு, சீமந்தம் செய்தேன். நீ இருந்து மூக்குப் பிழியாதது குறையாகத்தான் இருந்தது.''

அவன் வாழ்விலும் வசந்தம் வீசத் தொடங்கியது. விமலாவுக்குத் தன் ஆசையெல்லாம் கொட்டிக் கடிதம் எழுதினான்.

''என்ன ராத்திரி பூரா இருமிக்கிட்டே இருந்தீங்க. உடம்பு சரியில்லையா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. ஆபீஸ் நாடகத்தில் நோயாளியா நடிக்கிறேன். அதுக்கு ஒத்திகை பார்த்துக்கிட்டு இருந்தேன்.''

-ஆர். கோபாலகிருஷ்ணன்



அந்த நாள் அவன் வாழ்வில் மறக்க முடியாத நாள்... மணம் கமழும் புஷ்பங்களைப் பன்னீரில் அமிழ்த்தி அவன் மீது வீசியது போன்ற மென்மையான இன்ப உணர்ச்சியை அன்று வந்த அந்தக் கேபிள் — ''விமலாவுக்குப் பிள்ளை பிறந்து தாய்-சேய் நலம்'' என்ற அந்தச் செய்தி தந்தது. இன்ப வாரிதியில் திக்குமுக்காடியல்லவா போய்விட்டான்!

சாரதாவுக்கும் மூன்று வருடத்துக்குப் பின் பெண் குழந்தை பிறந்திருப்பதாக அம்மா எழுதியிருந்தாள்.

ஆயிற்று! டாக்டர் நடராஜனுக ஒரு 'டி. எஸ். ஸி. (டாக்டரேட் இன் ஸயன்ஸ்) பட்டத்துடன் அவன் இந்தியா திரும்பச் சில மாதங்களே இருந்தன. இன்ப நினைவுகளில் நாள் பறந்து விட்டது.


விமலாவுக்கு அவன் எழுதிய அன்பு மயமான கடிதத்தில், ''விமல்! நான் இந்தியா வரும்போது ஒரு ஸர்ப்ரைஸ் கொண்டு வரப் போகிறேன். 'ஸர்ப்ரைஸ்' என்றதும் எல்லாப் பெண்களும் நினைப்பது போல் வெள்ளைக்காரியுடன் வருகிறேனே என்னவோ என்று பயந்து விடாதே. 'ப்ளஸண்ட் ஸர்ப்ரைஸ்'' என்று முடித்திருந்தான்.

விமலா தன் தம்பி, மாமியார் இவர்களின் துணையுடன் குழந்தை கண்ணனை ஏந்திக் கொண்டு சென்னை விமானநிலையத்தில் காத்து நின்றாள். தன் மனைவி தன்னை எதிர்கொண்டழைக்க விமான நிலையத்துக்கே வந்துவிடுவாள் என்று சற்றும் எதிர் நோக்காத நட்டுவுக்கு அது ஒரு 'ப்ளஸண்ட் ஸர்ப்ரைஸ்' தான். அவன் அவளுக்கு எழுதியிருந்த 'ப்ளஸண்ட் ஸர்ப்பரைஸ் எது?....ஆம்! தூரத்தில் நிற்கும் தன் அன்பு மனைவியையும் குழந்தையையும் அம்மாவையும் கண்டுவிட்டவன், கையில் பிடித்திருந்த 'ப்ரீஃப்' கேஸை'ம், கழுத்து டையும் திறந்துவிடப்பட்டிருந்த கோட்டு'ம், இரு புறமும் அசைலாட ஓட்டமும் நடையுமாக வந்த காட்சி விமலாவையும், அவன் அம்மாவையும் உடல் சிலிர்க்க வைத்தது. அவனிடம் மிகவும் அன்பு பாராட்டி வந்த ஒரு பணம் பெற்ற அமெரிக்கத் தம்பதியின் உதவியில் ஒரு பெரிய அறுவைச் சிகிச்சை மூலம் காலின் ஊனம் இருந்தது தெரியாமல் மறைந்திருந்தது. குழந்தையை அள்ளி எடுத்துக் கொஞ்சி முன்னே நடந்த அவன் ராஜ நடையைப் புளகிதத்துடன் பார்த்து மகிழ்ந்து பின்னே சென்றனர் அம்மாவும் விமலாவும்.

சின்னக் கண்ணன் குடுகுடுவென்று ஓடி வீட்டை இரண்டு படுத்திக் கொண்டிருந்தான். மனைவி, குழந்தை, அம்மாவுக்குத் தான் வாங்கி வந்த பரிசுப் பொருட்களைக் கொடுத்துவிட்டுச் சாரதாவின் குழந்தையைக் கண்டு வரக் கிளம்பினான். சாரதாவின் குழந்தைக்கென்று ஓர் அழகிய கவுனும், பூனை போல் புசுபுசு முகப்பு வைத்த காலணிகளும் வாங்கி வந்திருந்தான்.

''நட்டு, அந்தக் கவுனை மட்டும் கொண்டு கொடு. பூட்ஸ் வேண்டாம் வைத்துவிட்டுப் போ'' என்றாள் அம்மா.

''ஏம்மா அந்தக் குழந்தையும் நடக்க ஆரம்பிச்சிருக்குமே.'' என்றான்.



''கங்கா, யமுனா, ஜலஜா, அகலவதி, கார்த்திகா — இவை பெண்களின் பெயர்களா - அதுதான் இல்லை. கொச்சியிலிருந்து எர்ணுகுளத்திற்குள்ள பத்து கி. மீ. தூரத்தைத் தண்ணீர் மார்க்கமாகக் கடக்க கேரள அரசால் விடப்பட்டிருக்கும் சிறு கப்பல் (Boat)களின் பெயர்கள்.''

— லீலா ராம்

''நான் உனக்கு எழுதினுல் மனசு கஷ்டப்படுவாய் என்றுதான் தெரிவிக்கவில்லை. சாரதாவோட பெண்ணுக்கு ஒரு கால் சூம்பிச் சின்னதா இழுத்துண்டாப்பலே இருக்கு.. இதைக் கொண்டு போனுல் குத்திக் காட்டுவது போல்இருக்கும்...''

கையைச் கட்டுக் கொண்டவன் போல் அவன் பின்னுக்கு இழுத்துக்கொள்ள, காலணிகள் கை நழுவின.

சில சமயங்களில் தெய்வம் ஏன் இப்படி மனிதர்களை சிட்சித்துவிடுகிறது?

தோட்டத்தில் குழந்தைகளுக்கான 'ப்ராம்' வண்டியில் பெண்ணை அமர்த்தி, லேசாகத் தள்ளிக் கொண்டு சாரதா நடந்துகொண்டிருந்தாள். சாரதாவா அது! நிறம் மங்கி, அழகு அழிந்து.... குழந்தை 'ஜெவ ஜெவ' வென்று சாரதாவைப் போல நிறம். அவனைப் பார்த்துக் குஞ்சு வாயைப் பிரித்துச் சிரித்தது.

''வா நட்டு அண்ணு....'' என்று சாரதா அழைத்துவிட்டுத் தலை குனிந்து கொண்டாள். அவன் கண்கள் கலங்கின. துக்கத்தைத் தாங்க முடியாத மென் இதயம்! ''சவுக்கியமா சாரதா?'' என்று நலம் விசாரித்துக் குழந்தையைத் தூக்கிக் கொண்டான்.

''சாரதா! நாம் சிறு வயதில் 'கேரம்' விளையாடுவோமே நினைவிருக்கா...''

''ஊம்....'' என்று சோகமாகப் புன்னகைத்தாள்.

''காய்கள் ஒவ்வொன்றையும் குழியில் தள்ளும்போது நாம் கும்மாளம் போடுவோமோ... நமக்கு எத்தனையோ குஷியாக இருக்குமல்லவா... அது போலத்தான் விதி என்று இருக்கிறது பார், அதற்கு நம்மைக் கேரம் காய்களாகக் குழியில் தள்ளிப் பார்ப்பதில் ஒரு குஷி. ஆனுல் கேரம் காய்களைக் குழியிலேயே விட்டுவிடுவதில்லை. ஒருவர் தள்ளினுலும் மற்றொருவர் அதைத் தூக்கி 'போர்டு'க்குக் கொண்டு வருவது போல், விதி நம்மைத் தள்ளி விட்டாலும் நாம் அதைத் தள்ளிக் கொண்டு முன்னேற வேண்டும். தெய்வம் யாராவது ஒருவர் ரூபத்தில் வந்து உதவி செய்யும். என்னைப் பார்.... மனம் தளராமல் குழந்தையை ஆரோக்கியமாக அன்புடன் வளர்த்து வா... எத்தனை அழகாக இருக்கிறுள்... குழந்தையின் பெயர் என்ன சொல்லவில்லையே...''

''பிரஸன்னு....!'' பிரஸன்னமாகச் சிரிக்கிறுள் குழந்தை. விளையாட்டிலேயே விதியின் தத்துவத்தைப் புரிந்து கொண்ட—புரிய வைத்த அவனைச் சாரதா வினேதமாகப் பார்க்கிறுள்!

[திருச்சி நேஷனல் கல்லூரி. கல்லூரி நிர்வாகிகளிடையேயும், மாணவர்களிடையேயும் இந்நிகழ்ச்சிக்கு அமோக வரவேற்பு. 'ஐ.ஏ.எஸ். போன்ற மத்திய நிர்வாகத் தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை சமீப காலத்தில் மிகவும் குறைந்துள்ளது என்கிற ஆதங்கம் என்னுள் மிகவும் உண்டு. இந்நிலையில் இம்மாதிரி 'க்விஸ்' நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து மாணவர்களது பொது அறிவை விருத்தி செய்யும் பணியில் 'கல்கி' ஈடுபட்டுள்ளது மிகவும் போற்றத் தக்கது என்று கல்லூரி முதல்வர் திரு என். கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டார்.

போட்டியில் பங்கேற்கத் தேர்க்கண்ட ஆறு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆங்கிலத் துறையில் உதவிப் பேராசிரியராக இருக்கும் திரு ஆர். கண்ணன் 'கல்கி'யின் கேள்விகளைக் கொண்டு நிகழ்ச்சியினை நடத்திக் கொடுக்க முன்வந்தார்.]

பங்கேற்றவர்கள்:

திரு கே. சுரேஷ்குமார்
திரு கே. ராஜன்
திரு கே. விஜய்
திரு ஜே. ரமேஷ்
திரு வி. செல்வராஜ்
திரு B. தியாகராஜன்

1. கேள்வி: தமிழ் ஆண்டான 'அக்ஷய' ஆண்டுக்கு அடுத்து வரும் ஆண்டின் பெயர் என்ன?
(எவரும் விடையளிக்கவில்லை.)

2. கேள்வி: சசிகலா காகோட்கர் கோவா யூனியன் பிரதேசத்தில் நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் தோல்வியுற்றதாக அறிகிறோம். அவர் எக்கட்சியைச் சேர்ந்தவர் என்று கூற முடியுமா?
(சுயேச்சையாளர் என்று ஒருவர் கூற சரியான விடையைப் பார்வையாளர்களில் ஒரு மாணவர் கூறினார்.)

3 கேள்வி: Somnambulism என்பதன் அர்த்தம் என்ன?
(சுரேஷ்குமார் சரியாக விடையளித்தார்

4 கேள்வி: Mein Kamf என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?
(சுரேஷ் சரியாக' விடையளித்தார்.)

5. கேள்வி: இஸ்லாமாபாத் நாட்டுக்கான இந்தியத் தூதுவர் யார்?
(பார்வையாளரிலிருந்து ஒருவர் பதில் அளித்தார்.)

6. கேள்வி: ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரபூர்வமான மொழிகள் எவை?
(விஜய்யும் ரமேஷும் இணைந்து சரியான விடையை அளித்தனர்.)

7. கேள்வி: ஈரான் நாட்டின் கரன்ஸி பெயர் என்ன?
(ரமேஷ் சரியாக விடையளித்தார்.)

8. கேள்வி: தபால் கார்டு இந்தியாவில் முதன் முதல் அமுல்படுத்தப்பட்டபோது அதன் விலை என்ன?
(செல்வராஜ் சரியாக விடையளித்தார்.)

9. கேள்வி: 'கோபாலன் டிராஃபி' எந்த விளையாட்டோடு சம்பந்தப்பட்டது? எந்த அணிகளுக்குள்ளே இக் கோப்பைக்காக போட்டி நடைபெறும்?
(விஜய் சரியாக விடையளித்தார்.)

10. கேள்வி: Oedipus Complex என்றால் என்ன அர்த்தம்?
(அது ஒரு பயங்கர வியாதி என்று ஒரு மாணவர் விடையளிக்க, பார்வையாளரில் ஒரு உதவிப் பேராசிரியர் சரியான விடையைக் கொடுத்தார்)

11. கேள்வி: மண்பாண்டங்கள் செய்யும் கலைக்கும் அது பற்றி அறிவதற்கும் ஆங்கிலத்தில் உள்ள ஒரு வார்த்தை கூறவும்.
(தியாகராஜன் சரியாக விடையளித்தார்.)

✗ பார்வையாளர்களில் ஒரு பகுதி

கல்லூரியில் 'க்விஸ்'





✖ போட்டியில் பங்கேற்ற மாணவர்களுடன் கல்லூரி முதல்வர், உதவி முதல்வர், குவிஸ் மாஸ்டர் திரு. கண்ணன்.

12. கேள்வி: தற்போதைய தேசிய செஸ் பெண்கள் சாம்பியன் யார்?
(ஜெயஸ்ரீ காடில்கர் என்ற விடையை ஒரு மாணவர் சொல்ல சரியான விடை பார்வையாளரிடமிருந்து வந்தது.)

13. கேள்வி: இந்தியாவிலேயே மிகவும் நீண்ட ரயில் எது? எவ்விடங்களுக்கு இடையே ஓடுகிறது?
(விஜய், ரமேஷ் ஆகிய இருவரும் பாதிப் பாதி சரியாகக் கூறினர்.)

14. கேள்வி: தமிழ்த் திரை உலகில் டைரக்ஷன் பொறுப்பேற்ற முதல் பெண்மணி யார்?
(திரு விஜய் சரியாகக் கூறினார்.)

15. கேள்வி: கீழே கொடுக்கப்பட்ட இரு பிரமுகர்களின் பெயர்கள் எத்துறையோடு சம்பந்தப்பட்டவை?
(1) Milton Friedman
(2) Promilla Kapur
(பாதி கேள்விக்கு சுரேஷ் சரியாக விடையளித்தார். ஃப்ரீட்மென் விளையாட்டுத் துறையுடன் சம்பந்தப்பட்டவர் என்று ஒரு மாணவர் தவறாகக் கூறினார்.,

16. கேள்வி: Colt என்றால் என்ன? Filly என்றால் என்ன?
(பாதி கேள்விக்கு சுரேஷ் சரியாக விடையளித்தார்.)

17. கேள்வி: டச்சுக்காரர்களின் காலனி ஆதிக்கத்தில் இருந்தபோது நியூயார்க் என்னவென்று அழைக்கப்பட்டது?
(விஜய் பளிச்சென்று சரியான விடையைக் கூறினார்.)

18. கேள்வி: வருமான வரி முதன் முதலில் யாரால் கொண்டுவரப்பட்டது?
(ஸ்டாலினால் என்று ஒரு மாணவர் விடையளிக்க, சரியாக எவரும் விடையளிக்கவில்லை.)

19. கேள்வி: யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனின் தலைவரையும், அங்கத்தினர்களையும் நியமிப்பவர் யார்?
(ரமேஷ் சரியாக விடையளித்தார்.)

20. கேள்வி: ஒரே இன்னிங்ஸில் டெஸ்ட் அரங்கில் பத்து விக்கெட்டுகளையும் வீழ்த்திய ஒரே பௌலர் யார்?



✖ திரு விஜய் பரிசு பெறுகிறார்

(விஜய் சரியாக விடையளித்தார்.)

21. கேள்வி: UNICEF என்பதன் விரிவு என்ன?
(சுரேஷ் சரியாகக் கூறினார்.)

22. கேள்வி: லலித் கலா அகாதமி என்றால் என்ன? எப்போது அது ஸ்தாபிதம் ஆயிற்று?
(சுரேஷ் பாதி கேள்விக்குச் சரியாக விடையளித்தார்.)

23. கேள்வி: எந்தத் துறையைப் பற்றி ஆராய்பவர் Ornithologist எனப் படுகிறார்?
(பூ, பழம் என்று விதம் விதமாக வந்தன விடைகள். எவரும் சரியாக விடையளிக்கவில்லை.)

24. கேள்வி: Nylon என்ற வார்த்தை எப்படி உண்டானது?
(விஜய் சரியாக விடையளித்தார்.)

25. கேள்வி: 'பிச்சைக்காரர்கள் இறக்கும் போது வால் நட்சத்திரங்கள் காணப்படுவதில்லை' (When beggars die no Comet is seen.) என்ற வார்த்தைகள் எந்தப் புத்தகத்தில் வருகின்றன? எவரால் எழுதப்பட்ட புத்தகம் அது?
(தாமஸ் ஹார்டி என்று ஒரு பதில் வந்தது. சரியான விடையை திரு ராமமூர்த்தி என்ற உதவிப் பேராசிரியர் கூறினார்.)

26. கேள்வி: 'ஸாம்பியா'வின் தலைநகரம் எது?

(செல்வராஜ் சரியான விடையைக் கூறினர்.)

27. கேள்வி: மைல்களைக் கிலோ மீட்டரில் கணக்கிட்டுச் சொல்லச் சுலபமான வழி எது?
(ராஜன் சரியாக விடையளித்தார்.)

28. கேள்வி: சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் ஓய்வு பெறும் உச்ச வயது எது?
(சுரேஷ்குமார் சரியாக விடையளித்தார்)

29. கேள்வி: முதல் முதல் கிரிக்கெட் டெஸ்ட் மேட்ச் எந்த நாடுகளிடையே விளையாடப்பட்டது, எப்போது?
(பாதிக் கேள்விக்கு விஜய் சரியாக விடையளித்தார்.)

30. கேள்வி: ஹிந்து பத்திரிகையில் எந்த நாளில் சினிமா விமர்சனம் பிரசுரிக்கப் படுகிறது?
(விஜய் சரியாக விடையளித்தார்.)

[இருபத்தெட்டுக் கேள்விகள் முடிந்த நிலையில், சுரேஷ், விஜய் ஆகிய இருவரும் சம மார்க்குகள் பெற்று எவர் வெற்றி பெறுவார் என்று கணிக்க முடியாத நிலை இருந்தது. கடைசி இரண்டு கேள்விகளுக்கும் விஜய் பதிலளித்து கல்கியின் பரிசான ரூ. 50ஐத் தட்டிச் சென்றார். ஆனாலும் சுரேஷ் பாராட்டுக்குரியவர். ஆங்கில உதவிப் பேராசிரியர் கண்ணன் இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தது குறிப்பிடத் தக்கது.]

விடைகள்: (1) பிரபல. (2) மஹாராஷ்டிரவாடி கோமந்தக் கட்சி. (3) தூக்கத்தில் நடக்கும் வியாதி. (4) அடால்ஃப் ஹிட்லர். (5) கே. எஸ். பாஜ்பாய். (6) ஆங்கிலம், ரஷ்ய மொழி, பிரெஞ்ச், சைனீஸ், ஸ்பானிய மொழி, அராபிய மொழி ஆகியவை. (7) ரியால். (8) காலணா. (9) கிரிக்கெட்; தமிழ் நாடு, ஸ்ரீலங்கா அணிகளுக்கிடையே விளையாடப்படுவது. (10) மிகவும் இளவயதில் ஒரு மகனுக்குத் தன் தாயின் மீது தன்னையறியாமல் ஏற்படும் ஒருவித காதலும் அதன் பலனாய்த் தந்தை மீது ஒருவித பொறாமையும் வெறுப்பும் உண்டாவது. (11) Ceramics (12) ரோஹிணி காயில்கர். (13) சென்னைக்கும் புதுடில்லிக்கும் இடையே ஓடும் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ். (14) பி. பானுமதி. (15) Milton Friedman — பொருளாதார விஞ்ஞானம், Promilla Kapur - சமுதாயவியல். (16) Colt — ஆண் குதிரைக் குட்டி. (சுமார் 4 அல்லது 5 வயது வரை) Filly - பெண் குதிரைக்குட்டி (4 அல்லது 5 வயது வரை) 17) New Amsterdam (18) கிரேட் பிரிட்டனில் வில்லியம் பிட் என்பவரால் (நோக்கம்: போர்ச் செலவை ஈடு கட்டுவது). (19) இந்திய ஜனாதிபதி. (20) ஜிம் லேகர் என்ற ஆங்கில ஆட்டக்காரரால் (10 for 53 என்று 1956ல் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விக்கெட்டுகள் எடுத்தார்.) (21) United Nations International Children's Emergency Fund. (22) நுண்கலை வளர்ச்சிக்காக இந்திய அரசால் 1954ல் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. (23) பறவைகள் பற்றி. (24) Newyork, London என்பதன் இணைப்பு Nylon ஆயிற்று. (25) வில்லியம் ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீஸர் நாடகத்தில். (26) லுசாகா. (27) மைல்களை எட்டால் பெருக்கி ஐந்தால் வகுத்தால் கிலோ மீட்டர் அளவு வரும். (28) 65. (29) 1877ல் இங்கிலாந்து ஆஸ்திரேலியாவுக்கும் இடையே. (30) வெள்ளிக் கிழமைகளில்.

தொகுப்பு: நாயகன்

புகைப்படம்: மார்டன் ஃபோட்டோ ஃபினாஷ், திருச்சி.

படவிமர்சனம்

சித்திரச்செவ்வானம்



கதாநாயகன் ரவி ஒரு சித்திரத்தை வரைந்து வைத்துக் கொண்டு பணத்தைக் கொட்டி இறைத்து அந்தச் சித்திரப் பாவையைச் சல்லடை போட்டுச் சலித்துத் தேடுகிறான். டென்னிஸ் ஆட்டக்காரர் கண்ணனின் மனைவி சாந்தியே அந்தச் சித்திரப் பாவை.

மனைவி சாந்தியை அரை நிமிடமும் பிரியப் பிரியப்படாதவன் டென்னிஸ் கண்ணன். சாந்தியாக நடிக்கும் ஸ்ரீவித்யாவுக்கு இப்படி இருவர் மத்தியில் மாட்டிக் கொண்டு விழிக்கும் அவலம்.

காதல் காட்சிகளை அள்ளித் தெளித்தால் படம் ஓடிவிடும் என்பது புரொட்யூசரின் பகல் கனவு!

வேலைக்குப் போகும் மனைவி மனோவாக மனோரமா, அவளுக்கு வீட்டில் அடங்கிப் போகும் கணவன் மகாலிங்கமாக சுருளி! 'செஞ்சுரி' கண்ட அறுவை ஜோக்குகள்.


இது ஒன்றையாவது ரசித்துத் தொலை என்பது போல் கவிஞர் கண்ணதாசனின் பாட்டு 'பொன் வண்ண வீணை' வாணி ஜெயராம் குரலில் நன்கு ஒலிக்கிறது.

நல்ல நடிகர்கள். ஆனால் அபத்தக் கதை. 'சித்திரச் செவ்வானம்'. திரை உலகுக்குத் தலைகுனிவு.

—பி.எஸ்.எம்.

பர்ஸென்டேஜ்!

ஜே.வி.நாதன்



சர்மா கடந்த அரை மணி நேரமாகத் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

மானேஜர் நல்ல மூடில் இருப்பதாக அவர் அறையிலிருந்து வந்த 'ஓஹோ...ஹோ...'' என்ற சிரிப்பொலி தெரிவித்தது. உள்ளே பேசிக் கொண்டிருக்கும் ஆசாமிகள் வெளியேறியதும் போய் விஷயத்தைச் சொல்லி விடவேண்டும்.

பொறுமைக்கும் ஓர் எல்லைஉண்டு அல்லவா? இத்தனைக்கும் அவர் யார்? எத்தனை வருஷ சர்வீஸ் அவருக்கு? நேற்றைக்கு வந்தவனெல்லாம் அவரைக் கிள்ளுக் கீரையாக நினைத்து நடப்பதா?

முக்கியமான ஃபைல்கள் விவகாரமாக அவரை நான்கு முறை தலைமை அலுவலகத்துக்கு அனுப்பியிருந்தார்கள். அந்தப் பயணங்களுக்காக டிராவலிங் அலவன்ஸ் பில்லைச் சமர்ப்பித்து ஒரு மாதம் ஆகியும் பணம் கைக்கு வந்தபாடில்லை. பில் கிளார்க் ஆபத்பாந்தவனை அணுகியதற்கு அவன், ''அதுக்கென்ன சர்மா ஸார், பாஸ் செய்துட்டாப் போவுது. இன்னிக்கு நான் சாப்பாடு கொண்டு வரலை. முனியாண்டிக்குப் போகலாமா?'' என்று கேட்டதுதான் சர்மாவுக்குக் கோபம் பிய்த்துக் கொண்டு வரக் காரணம்.

ஆபத்பாந்தவனைப் பற்றி அந்த ஆபீசில் முதுகுக்குப் பின்னாலும் முகத்துக்கு முன்னாலும் நிறையப் பேர் பேசினார்கள். ஆசாமி இரண்டு கையாலும் கூசாமல் கேட்டு வாங்குகிறானாம். ஒவ்வொரு பில்லுக்கும் ரேட் நிர்ணயித்து வைத்திருக்கிறானாம். டி.ஏ. பில், இன்கிரிமெண்ட் பில் வகையறாக்களுக்குப் பத்து ரூபாய், லீவு சம்பளத்துக்கு இருபது ரூபாய், பிராவிடெண்ட்பண்ட் லோன் பில்லுக்கு முப்பது ரூபாய்... இந்த நிர்ணயிக்கப்பட்ட 'ரேட்'கள் கூடசம்பந்தப்பட்டவர்களின் தேவை அவசரங்களைப் பொறுத்து அதிகமாகுமாம். இப்போது அவன் சர்மாவையே முனியாண்டி ஓட்டலுக்கு அழைக்கிறான். பிரியாணி வாங்கித் தந்தால் பில்லைப் பாஸ் செய்வானாம்— அதுதானே அதற்கு அர்த்தம்!

என்ன அநியாயம்?

மானேஜர் முன் சர்மா நின்றார். ஆபத்பாந்தவன் டி. ஏ. பில்லைப் பாஸ் செய்யத் தம்மிடம் லஞ்சம் கேட்பதாகப் புகார் செய்தார்.

''வாட் நான்சென்ஸ் – கூப்பிடு அந்தப் பில் கிளார்க்கை!'' என்று மானேஜர் கத்தினார்.

ஆபத்பாந்தவன் சாதுப் பூனையாய் வந்து கையைக்கட்டிக்கொண்டு பவ்யமாய் நின்றான்.

''ஏன்யா பில் கிளார்க், நீ இவரோட டி. ஏ. பில்லை பாஸ் செய்ய லஞ்சம் கேட்கிறியாமே, ஈஸ் இட்?''

ஆபத்பாந்தவன் கடகடவென்று சிரித்தான். ''ஆமாம் ஸார்... கேட்டது வாஸ்தவம்தான்.''

சர்மா திகைத்துப் போய் அவனைப் பார்த்தார்.

''சர்மா ஸாரைப் பாருங்க ஸார். இன்னிக்குப் புது ஷர்ட், புது பாண்ட் போட்டுண்டு வந்திருக்கார். அதுக்காக முனியாண்டியில் ஒரு பார்ட்டி வைக்கணும்கிற அர்த்தத்தில் தமாஷாகக் கூப்பிட்டேனே தவிர, டி.ஏ. பில்லுக்காகன்னு நான் சொன்னேனான்னு கேளுங்க ஸார்... நம்ம ஆபீசில் யாராவது புது ஷர்ட் போட்டால் அன்னிக்குக் காப்பி சப்ளை அவருடையதுங்கறது பொதுவா உள்ள பழக்கம். உண்டா இல்லையான்னு விசாரியுங்க ஸார்...''

''என்ன மிஸ்டர் சர்மா?'' — மானேஜர் சர்மாவைப் பார்த்தார்.

சர்மா மென்று விழுங்கினார். ''நான் டி. ஏ. பில் பற்றிக் கேட்கறச்சே இவர் அப்படிக் கேட்டதைப் பார்த்து...''

''சரி சரி. நிறுத்துங்க. இதோ பார் மிஸ்டர் ஆபத்பாந்தவன்! உன் மேல் நிறைய புகார்கள் வந்திருக்கு. இன்னிலேர்ந்து பில் செக்ஷனை ராமாச்சாரி பார்க்கட்டும். உன்னை ஸ்டோர்ஸ் செக்ஷனில் போடப் போறேன். பார்க்கலாம். இனிமேலாவது நீ ஒழுங்கா இருக்கியான்னு.''

''நான் ஒழுங்காத்தான் ஸார் இருக்கேன். நீங்க எந்த செக்ஷன் வேணாலும் கொடுங்க ஸார். பொறாமை பிடிச்சவங்க கோள் மூட்டிக்கிட்டும், மொட்டைப் பெட்டிஷன் போட்டுக்கிட்டும்தான் ஸார் இருப்பாங்க. இப்படியே எனக்கு செக்ஷன் மாத்தறதாக இருந்தால் நம்ம ஆபீசில் இருக்கிற அத்தனை செக்ஷனும் பத்தாது ஸார்....''

''டோண்ட் ஆர்க்யூ மிஸ்டர் ஆபத்பாந்தவன்! நீ போகலாம்.''

ஆறு மாதங்கள் ஓடின. ஸ்டோர்ஸ் செக்ஷனைப் பொறுத்தவரை எந்தப் புகாரும் இல்லை. மானேஜருக்குத் திருப்தி.

அந்தத் திருப்தி குலையும் வண்ணம் தங்கமுத்து வந்து நின்றார்.

''ஸார் மன்னிக்கணும். உங்க நாலெட்ஜுக்குக் கொண்டு வரக் கூடாதுன்னுதான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். முடியலை. ஸ்டோர்ஸ் செக்ஷனில் இருக்கிறாரே, மிஸ்டர் ஆபத்பாந்தவன் — அவர் பண்ணும் அட்டகாசம் தாங்க முடியலை....''

மானேஜருக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''ஏன் ஸார், என்ன ஆச்சு?'' என்று பரபரத்தார்.

''நாங்க உங்க பீங்கான் ஃபாக்டரிக்கு சைனா க்ளே சப்ளை பண்றோம் இல்லையா? அந்த விலைப் பட்டியல்களுக்கு இன்னும் பணம் வரலைன்னு அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் போய்க் கேட்டபோது அவர்கள், 'உங்க இன்வாய்ஸே எங்களுக்கு இன்னும் வரவில்லை. ஸ்டோர்ஸ் செக்ஷனில் ஸ்டாக் என்ட்ரியும், பாஸ் ஆர்டரும் போட்டப்புறம் தான் பேமெண்டுக்கு இங்கே வரும். அங்கே போய்ப் பாருங்க'ன்னு சொன்னாங்க. ஸ்டோர்ஸ் செக்ஷனுக்குப் போய்க் கேட்டால், அர்ஜண்டா உங்களுக்கு பில்கள் செட்டில் ஆகணும்னா பர்சண்டேஜ் வெட்டுங்கன்னு பச்சையாகவே லஞ்சம் கேட்கிறார் ஸார், அந்த ஆபத்பாந்தவன்.''

மானேஜர் ஆபத்பாந்தவனை வரச் செய்தார். ஸ்டோர்ஸ் க்ளார்க் வந்ததும், ''இவங்க கம்பெனி பில்களைச் சீக்கிரம் ஆக்ஷன் எடுத்து அக்கவுண்ட்ஸ் செக்ஷனுக்கு டிரான்ஸ்பர் பண்றதுக்கு பர்சண்டேஜ் கேட்டாயாமே வாஸ்தவம்தானா?'' என்றார்.

''அப்பட்டமான பொய் ஸார்!'' ஆயிரக்கணக்கான ரூபாய் வரவேண்டியிருக்கு. சீக்கிரம் ஆக்ஷன் எடுத்தீங்கன்னா பர்சண்டேஜ் தரேன்னு இவர்தான் ஸார் வந்து என் காதைக் கடிச்சார். அதெல்லாம் முடியாதுன்னு நான் கண்டிப்பாச் சொன்னேன். அதைத்தான் ஸார் உங்க கிட்டே வந்து மாற்றிக் கதை கட்டி என்மேல் அபாண்டமாக பழி சுமத்தறார்.''

மானேஜர் தலையைப் பிய்த்துக் கொண்டார். மணியை ஒலித்து ஸ்டெனோவை அழைத்தார். உடனே ஓர் உத்தரவை 'டிக்டேட்' செய்தார்.

மதிய வேளையில், ''ஏன் மிஸ்டர் ஆபத்து! உங்களை பில் செக்ஷனிலிருந்து ஸ்டோர்ஸுக்கு மாத்தினா, இப்போ ஸ்டோர்ஸிலிருந்து கூட மாத்தி டெஸ்பாட்ச் க்ளார்க்கா டிப்ரொமோட் பண்ணிட்டாளாமே!... கொஞ்ச நஞ்சம் காசு வர்ற வழியும் க்ளோஸ் ஆயிடுத்து!''

ஆபத்பாந்தவன் சிரித்தான். ''எனக்கு அதைப் பத்தியெல்லாம் கவலையில்லை ஸார். நான் எந்த செக்ஷன்லேயும் தேமேன்னு வேலை செய்வேன். டெஸ்பாட்ச் பண்றச்சே முக்கியமான இன்டென்ட், சாங்ஷன் உத்தரவுகள், பேமெண்ட் அட்வைஸ் போன்றவைகளை உடனுக்குடனே டெஸ்பாட்ச் செய்துடுன்னு கம்பெனிக்காரங்க வந்து எங்கிட்டே தானாக லஞ்சம் கொடுப்பாங்க.. நான் தப்பாக விலாசம் எழுதி விட்டால் வேறு எங்காவது போய் முட்டி மோதி அலைஞ்சுக்கிட்டுத் தாமதமா திரும்பி வரக்கூடாதேன்னு பயந்து அவங்க தேடி வந்து பர்சண்டேஜ் கொடுப்பாங்க. என்னைப் பத்தி எல்லாக் கம்பெனிக்காரர்களுக்கும் தெரியுமே! நான் வேண்டாம் வேண்டாம்னாலும் பணம் கொடுப்பாங்க. பின்னாலேயே மானேஜர் கிட்டப் போய் நான் லஞ்சம் கேட்டதாகப் பொய் சொல்லுவாங்க. என் கவலை இதுக்கு அப்புறம் என்னை மாற்றுவதற்கு நம் ஆபீசில் வேறு செக்ஷன் என்ன இருக்குன்னு மானேஜர் கவலைப்படுவாரேங்கிறதுதான்!....''

''எங்கம்மா, ஒரு ஸ்பூன் அரை நெய் வாங்கிட்டு வரச் சொன்னாள்.''
—கதிர்ஸன்



ஓரே பந்தில் 93 ரன்கள்!

வட்ட மேஜை

● கிரிக்கெட் சிறப்பிதழ் படு டாப்! கிரிக்கெட் பட்டி மன்றம் சுவையாக இருந்தது. குண்டுமணிக்கு ஸ்பெஷல் பாராட்டுக்கள்.

சென்னை—5 எஸ். சங்கரசுப்பிரமணியம்

● போகிற போக்கில், கூடிய விரைவில் கல்கி சிறப்பிதழ்கள் வெளியிடுவதில் 'சதம்' எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

திருச்செந்தூர் ஆ. சீனிவாசன்

● 'கிரிக்கெட் ஸ்பெஷல்' சிறப்பிதழ் நான் நினைத்ததை விட மிகவும் அருமையாய் இருந்தது. 'கல்கி' எதைச் செய்தாலும் மிகவும் சிறப்பாகச் செய்யும் என்பதற்கு இது மேலும் ஓர் உதாரணம்.

சென்னை—20 காஞ்சி நாகு

● 'கிரிக்கெட் ஸ்பெஷல்' எதிர் பார்த்தபடி இல்லை. மேலும் சில தவறுகள் வேறு. (1) 'ஸஸ்ஸெக்ஸ்' ஆஸ்திரேலியாவில் இல்லை. இங்கிலாந்தில் உள்ள ஒரு 'கவுண்டி' அது. (2) மஜீத்கான் அப்பாதான் இந்தியாவுக்கு 'டெஸ்டில்' விளையாடினார். இந்த மஜீத் அல்ல. (3) வஸீம் ராஜா பௌல் செய்வது 'கூக்ளி'. 'ஹூக்ளி' அல்ல!

சென்னை—28 வி. மகாலிங்கம்

● கிரிக்கெட் சிறப்பிதழ் எங்களைப் போன்ற பல்லாயிரக் கணக்கான கிரிக்கெட் ரசிகர்களை ஏமாற்றி விட்டது. இந்திய ஆட்டக்காரர்களைப் பற்றி எவ்வித செய்தியும் வெளியிடவில்லை.

திருநெல்வேலி—3 எச். எஸ். ராம்ஜி

● உமாபதி வழங்கிய 'கிரிக்கெட் பொங்கல்' வெரி ஸ்வீட். அட்டைப் படங்களோ எக்ஸலெண்ட்.

சென்னை—1 எஸ். ரகு

● நமது இந்தியக் கிரிக்கெட் வீரர்களை முன் பக்கம் போட்டுக் கௌரவிக்காமல் பின்புற அட்டையில் போடுவது வீரர்களை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது. பாகிஸ்தான் வீரர்களுக்கு மட்டும் முன் அட்டையில் இடம் தருவானேன்?

பொன்னை தசரதன்


[விருந்தினருக்கு முதலிடம் தந்து கௌரவிப்பதுதானே முறை? — ஆர்]

● ''கிரிக்கெட் அதிசயங்கள்'' எனும் பகுதியில் கிரிக்கெட் சரித்திரத்திலேயே ஒரே பந்தில் மிக அதிகமாக எடுக்கப்பட்டவை பத்து ரன்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 1894ம் ஆண்டு இரு அணிகளுக்கிடையே நடைபெற்ற ஒரு நாள் ஆட்டத்தில் ஒரே பந்தில் 93 ரன்கள் எடுக்கப்பட்டு உள்ளன!

பிரவுன் என்னும் துவக்க ஆட்டக்காரர் அடித்த பந்து எல்லைக் கோட்டின் அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது பறவைக் கூட்டில் சிக்கியது. அந்த மரக் கிளை எல்லைக் கோட்டின் உள்ளே இருந்ததால் ஸிக்ஸர் என்று அறிவிக்க விதிகள் இடம் தரவில்லை. ஆனால் பந்து பார்வையாளர், மற்றும் ஆட்டக்காரர் கண்களுக்குத் தெரிந்ததால் அதைக் காணவில்லை என்றும் அறிவிக்க இயலவில்லை. அந்த பந்தை ஃபீல்டர்கள் மீட்டு வருவதற்குள் பிரவுனும் ஆர்ச்சியும் சேர்ந்து ஓடி 93 ரன்கள் எடுத்துச் சாதனை புரிந்தனர்.

ஆதாரம்: ஸன் இதழ்

சென்னை—7 ஆர். பாலாஜி



● ''நட்புறவுடன் படையெடுப்பு'' கட்டுரை படித்தேன். ருஷ்யா — இந்தியா நட்புறவு ஒப்பந்தம் பற்றி ரொம்பத்தான் மிரட்டி இருக்கிறீர்கள். நிராயுதபாணியாய் நின்று வெள்ளையரை விரட்டிய காந்திஜியும் நேருக்கு நேர் அவர்களுடன் போரிட்ட பெண்ணரசிகளும், பேராண்மையாளர்களும் அவதரித்த இந்த மண்ணின் மைந்தர்கள் ஆப்கானிஸ்தானியர்களைப் போன்ற இளித்த வாயர்கள் அல்ல. கார்மாலைப் போல இந்திரா ஒன்றும் சுயநலவாதி அல்ல!

அரகண்டநல்லூர் கே. பிரதாப் சிங்

● தேர்தலுக்கு முன்பாக ஜனதா, அ.இ. அ.தி.மு.க. கூட்டணியை நியாய உணர்வோடு மிகத் துணிவுடன் ஆதரித்து எழுதினீர்கள் என்பதற்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வி விட்டது. 'தர்மம் மறுபடியும் வெல்லும்' என்ற மகா கவி பாரதியின் வாக்கு வேத வாக்காகும். நன்னாளுக்காகக் காத்திருக்கிறோம்.

செங்கைவல்லி இ. முருகவேள்



அடியும் உதையும் அண்ணனுக்கும் உதவும்

— பர்வதவர்த்தனி —

"டேய் ரங்கா, வாடா இங்கே!"

வேகமாக சைக்கிளில் வந்து ரங்கனைக் கூப்பிட்டான் விஜயன்.

விளக்குக் கம்பத்தை ஒட்டி நடை பாதையில் உட்கார்ந்திருந்த ரங்கன் எழுந்து ஓடி வந்தான்.

"என்ன அண்ணாத்தே!"

"ஏறு பின்னாலே."

அதட்டலில் அந்த இடமே அதிர்ந்தது.

பதிலே பேசவில்லை ரங்கன்.

அதற்காகவே காத்திருந்தவன் போல் பின்னால் ஏறிக் கொண்டான்.

சைக்கிள் பறந்தது.

அந்த வட்டாரத்தில் கலாட்டா, கல்லெறி இதற்கெல்லாம் விஜயன் மொத்த குத்தகை எடுத்தவன். சண்டை பூசல்களுக்கு அஞ்சாதவன். அதிகமான வாய்ப் பேச்சே அவனிடம் இடையாது. ஆரம்பமே அடிதடிதான்.

சைக்கிளைத் திருப்பமொன்றில் வேகமாகத் திருப்பினான். விஜயன். பிறகு அவனே பேசினான் ரங்கனிடம்.

"அந்த மாணிக்கம் பய நெருப்புன்னு தெரிஞ்சி கையை வச்சிப் பார்க்கிறான்."

"சுட்டுட வேண்டியதுதான்."

"அதுக்குத்தான் போறேன்."

"....."

"இப்போதாண்டா சொல்லிச்சி தங்கச்சி. நேத்தைக்கு அவ மீனு வாங்கிட்டு வர்றபோது 'அண்ணாத்தே சொகமான்னு கேட்டிருக்கான். இவன் என்னடா' அவ கிட்டப் போயி என் சொகத்தைப் பத்திக் கேக்கறது? அதுகூடப் போவட்டும். அதுக்கு மேலே இன்னொரு வேலை செய்திருக்கான். 'என்னைக் கட்டிக்கிறியா மீனா'ன்னு..... என்ன?"

"என்னைக் கட்டிக்கிறியான்னு!"

"உம். இந்த மடையன் பெரிய மன்மதன். அதுக்கு இவரு அவளை நேருக்கு நேரா கேக்கறாரு. என்ன கேட்டான்? 'என்னைக் கட்டிக்கிறியா மீனா'ன்னு! இப்போ போறேன். எதுக்குத் தெரியுமா? அவுங்க குப்பத்திலே அவன் குடிசைக்குப் பக்கத்திலே லைட் கம்பத்திலே அவனைக் கட்டிப் போட...."

"போட வேண்டியதுதான்."

"போட்டுட்டுப் பார்க்கறேன். அவனை எவன் அவுத்து வுடறான்னு?" — உறுமினான் விஜயன்.

"நான் ஒண்ணு சொல்றேன். தப்பா நெனைக்க மாட்டியே?"

"சொல்டா."

"மாணிக்கத்தை ஒரு கை பார்க்கத்தான் வேணும். இருந்தாலும்..."

"என்னடா இழுக்கிறே?"

"வந்து... ஒன்னோட தங்கச்சி கிட்டே ஒரு வார்த்தை...."

"மாணிக்கத்தைப்போளக்கட்டுமான்னு?"

"இல்லே... அவன் எதுக்கு அது கிட்டே வந்து பேசினான்? எனக்கென்ன ஒரு சந்தேகம் நால் ஏழைத் தட்டுதுன்னு கேள். ஒருவேளை அந்தப் பொண்ணுக்கும் அவன் மேலே ஆசைன்னு வச்சிக்க...."

"தலையிலே தட்டுவேன்."

"கேள் அண்ணாத்தே. அப்படி ரெண்டு பேரும் விரும்புகிறபோது எதுக்காகப் பேசியிருக்கக் கூடாது?"

"அட மடையா! ரெண்டு பேரும் ஆசைப் பட்டா எதுக்குடா என்கிட்டே வந்து புகார் சொல்லப் போவுது?"

"அதுவும் மெய்தான்."

"இருக்கட்டுமே... அப்படியே அதைக் கட்டிக்க ஆசை இருந்திச்சின்னா எப்படி முறை? என்னை வந்துல்லே கேழ்க்கணும்? அதை வுட்டுட்டு...."

"நான் என்ன சொல்றேன்னா, அங்கே போனதும் ஒரு தர்ம அடி தொப்புன்னு போட்டுடு. அப்பாலே அவன் சொக்காயைப் பிடி. தானே விஷயத்தைக் கக்கிடுவான். நீ போய் நின்னாலே தானே கால்லே விழுந்திடுவான் பய. ஆனா மொத அடிக்கு மேலே விழப்படாது."

"எனக்குச் சொல்லித் தர்றியா?"

"அய்யோ அதுக்கில்லே அண்ணாத்தே. அவன் மனசிலே என்ன இருக்குதுன்னு தெரிய வாணாம்?"

"அதுக்காக?"

குடிசைக்கு முன் போய் நின்று "டேய் மாணிக்கம்!" என்று கத்தினான் விஜயன்.

''யாரு?'' — சிரித்த முகத்தோடு ஒருத்தி வெளியே வந்தாள்.

''ஓ! மாணிக்கத்தோட தங்கச்சியா? எங்கே அவன்?''

''எதுக்கு?''

ரங்கன் குறுக்கிட்டான். ''இதோ பார் தங்கச்சி! நானிருக்கேன். அண்ணுத்தை ஒண்ணும் செய்துட மாட்டாரு. நேரே வந்து செய்தது தப்புன்னு ஒரு வார்த்தை மன்னிப்புக் கேட்கச் சொல்லு. விட்டுடுவாரு. வழி பூரா சொல்லியாந்திருக்கேன்.''


''வராளு இல்லியா?'' விஜயன் குதித்தான்.

அக்கம் பக்கத்திலிருந்த பெண்கள் சிலர் அருகே வந்து நின்ருர்கள்.

''என்னுப்பா செய்துட்டான் மாணிக்கம் அவன் ஒரு வம்பு தும்புக்குப் போவ மாட்டானே?''

அவர்களை எரிப்பது போல் பார்த்தான் விஜயன்.

மாணிக்கத்தின் தங்கை சொன்ருள்: ''வெளியே வரச் சொல்றேன். அவரை



ஒன்றும் செய்துடாதீங்க. அவரில்லேன்னு என்னைக் காப்பாத்த நாதியில்லே. அவரை அடிச்சுக் கொன்னுடாதீங்க. அதுக்குப் பதிலா என்னை நாலு அடி அடிச்சிருங்க....''

''அட வரச் சொல்லும்மா. நான்தான் சொன்னேன் இல்லே. வந்து அண்ணாத்தே கால்லே விழுந்துடச் சொல்லு. அவரு ஒண்ணும் செய்ய மாட்டாரு. ரங்கன் குறுக்கே குறுக்கே பேசினான். அருகேயிருந்த பெண்களும் அதை ஆமோதித்தனர்.

உள்ளேயிருந்து மெல்ல வெளியே வந்தான் மாணிக்கம்.

ஒரே பாய்ச்சல். அவன் தலை முடியை எட்டிப் பிடித்தான் விஜயன்.

''உடு அண்ணாத்தே. அடிக்காதே. நான் சொல்றேன் இல்லே. கேளு. உட்டுடு. ஏதோ செய்துட்டான். இனிச் செய்ய மாட்டான். ஏண்டா, இவரோட தங்கச்சி மீனு தேத்து மீன் வாங்கி வரச்சே என்னடா கேட்டே?''

விஜயனின் பிடியைத் தளர்த்தி விட்டவாறே ரங்கன் கேட்டான்.

''ஒண்ணும் கேக்கலே! அண்ணாத்தே சொகம்மா இருக்குதான்னு கேட்டேன்.''

''அப்பாலே?''

''என் தங்கச்சியைக் கட்டிக்குவாரா அண்ணாத்தேன்னு கேட்டேன்!''

''பொய். நீ வந்து மீனாவை உன்னைக் கட்டிக்கிறியான்னு கேட்டதாயில்லே அண்ணாத்தே சொல்லுது.''

''அதுவும் கேட்டேன். இல்லேங்கலே. அந்தப் பொண்ணு ஒன்னை மட்டும் சொல்லி அண்ணாத்தையை அனுப்பி வச்சிடுச்சு...''


''உடு அண்ணாத்தே. வண்டி ஏறு. இங்கே வந்ததே தப்பு. டேய்! இனிமே ஏதாச்சும் பேச்சு வச்சுக்கினே? அவ்வளவுதான். வாய் வெத்திலே பாக்குப் போட்டுக்கும்!''

விஜயனைப் பிடித்து இழுத்தான் ரங்கன். படுத்துக் கிடந்த சைக்கிளை நிமிர்த்தி அவனிடம் கொடுத்தான்.

''சைக்கிள் மெல்லக் கிளம்பியது. போன பொழுது விஜயனிடமிருந்த வேகம் திரும்புறபோது இல்லை.

''ரங்கா! ஊட்டு முன்னாலே துணிச்சலா வந்து நின்னுச்சே அந்த மாணிக்கத்தோட தங்கச்சி!....''

''ஆமா. அது ரொம்பத் தைரியம்!''



''அதாண்டா! என்ன தைரியமா என்கிட்டேப் பேசுது?''

''அண்ணே, மீனு ஒங்கிட்டே ஒரு பாதியைத்தான் சொல்லி அனுப்பியிருக்குது. நேரா ஒன்னை இங்கே அனுப்பி நேருக்கு நேரா அந்தப் பொண்ணைப் பார்க்க வச்சி... இது மாணிக்கமும் மீனாவும் சேர்ந்து செய்திருக்கோணும். உம்.... கவனிச்சேன். நீ முடியைப் புடிச்சியே தவிர ஒரு தர்ம அடி கூடப் போடலியே?''

சிரித்தான் விஜயன்.

''அண்ணாத்தே, என்னை எறக்கிவுடறியா?''

''எதுக்குடா?''

''இல்லே... அந்த மாணிக்கத்துகிட்டே போய், வெத்திலே பாக்கு பழம் வாங்கிட்டு வாடா, அண்ணாத்தே கிட்டே பேசலாம்னு சொல்லத்தான். அவன் தங்கச்சியை நீ கட்டிக்கிட்டு உன் தங்கச்சியை அவன் கட்டிக்கலாம்!''

''போய்த் தொலை.''

''அப்பாலே பழத்தைத் தட்டிவிட மாட்டியே?''

''மீனு பொண்ணு பொல்லாதுடா, நான் போய் அந்தப் பொண்ணை நேர்லே பார்க்க வேண்டி இந்த மாதிரி கௌப்பி விட்டிருக்குது இல்லாட்டி நானாவது போறதாவது? அடி உதைன்னுத்தான் ஊட்டை வுட்டு காலே கௌம்புது. நீ கீழே எறங்கு.''

விஜயன் வேகமாக சைக்கிளை மிதித்தான்.

மாணிக்கத்தின் குடிசையில்—

''மாணிக்கம், நீ சொன்னபடியே விஜயன் வழக்கமா வர்ற வழியிலே காலேலேந்து ஒக்காந்திருந்தேன். வழி பூரா அவருக்கு ஏத்த வேண்டியதை ஏத்தி, என்ன கஷ்டம் தெரியுமா? லேசிலே மசியலே. 'உன் தங்கச்சி ஆசைப்பட்டிருப்பா.... அதான் கேட்டான் அந்த மாணிக்கம்'னு புத்தி சொல்லி, இல்லாட்டா விஜயனாவது உன்னை பொணக்காம வுடறதாவது? நீயும் சமாளிச்சியே? ஆமா? உன் தங்கச்சியை விஜயனுக்குத் தர்றதாவா கேட்டே மீனுகிட்டே? பொய்தானே?''

ரங்கன் அளந்து கொண்டிருந்தான்.

''பொய்யில்லே. நிஜந்தான். 'விஜயனைக் கோபப்படுத்தி இங்கே அனுப்பறேன். நீ சமாளி'ன்னு சொல்லிச்சி. இல்லாட்டி விஜயன் இங்கே வரமாட்டான். நானு போய் பொண்ணு கேட்டா அடிக்கவருவான். இப்போ என்ன சொல்றே?''

''உடு. நான் எதுக்கிருக்கேன்? உம் உம். எனக்கு நேரமாவுது. பேசின காசைக் கொடுத்தனுப்பு.''

பத்து ரூபாயைக் கொடுத்தான் மாணிக்கம். வாங்கிக் கொண்ட ரங்கன் சொன்னான்:

''கல்யாணமெல்லாம் முடிஞ்ச பிறகு. நீ சொல்லித்தான் நான் அண்ணாத்தை வர்ற வழியிலே குந்திக்கிட்டிருந்தேன்னு விளையாட்டாக்கூட அவருகிட்டே சொல்லிடாதே. ஒன்னைப் பின்னாலே உக்கார வச்சிகிட்டு என்னைப் பொளக்க வந்துடுவாரு. தயவு செய்து ரகசியமாகவே இருக்கட்டும்.

ரங்கனின் அச்சத்தில் நியாயம் இருக்கிறது.


இனிமையுடன் புதுமைப் பொலிவுடன் விளங்க ராசியான ஸ்தாபனம்
பொன்விழா பரிசுத்திட்டம்
ஒவ்வொரு 50 - ரூபாய்க்கும் ஒரு பரிசு கூப்பன்
முதல் பரிசு - நவீன பங்களா
2-வது பரிசு - 50 பவுன் நகை செட்
3-வது பரிசு - சேடாக் ஸ்கூட்டர்
4-வது பரிசு - சோலெக்ஸ் மோபட்
மற்றும் 100-க்கு மேற்பட்ட பல அரிய பரிசுகள் காத்திருக்கின்றன.
பார்புகழும் சிறப்பு காஞ்சீபுரம் சேலைகள் மற்றும் புத்தம் புதிய
டிசைன்களில் பருத்தி நூல் ஜவுளிகள் ரெடிமேட் ஆடைகள், ஆடவர்
சூட்டிங்ஷர்டிங் அனைத்தும் வாங்க சிறந்த இடம் ஷோபா
ஷோபா
கிளாத் சென்டர்
சாரி சென்டர்
டிரஸ் சென்டர்
ஷோபா கார்னர், பெரிய கடை வீதி,
கோயமுத்தூர்-641 001
போன் : 24364

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

✿ ராஜ்மோகன் காந்தி ✿

"இன்னொரு முறை என்னைச் சந்திக்க முயலுமாறு உங்களை நான் கேட்டுக் கொண்டதற்காக ரொம்பவும் வருத்தப்பட்டேன்" என்று ஸி. ஆர். பின்னால் எழுதினார். "எனது முட்டாள்தனத்தால் உங்களுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது." இந்த ஏமாற்றம் மாப்பிள்ளை, மகளுக்கு மட்டுமல்ல, அவருக்கும் தான் என்பது கடிதத்தில் தெளிவாகவே தொனித்தது.

ஜனவரி 15ந் தேதி பீகாரில் ஒரு பூகம்பம் ஏற்பட்டுப் பெருந் துயரத்தில் ஆழ்த்தியது. இந்திய நிபகர்ப்பம் இமாலயத்தின் மீது அழுந்தியதில் வடக்கு பீகார் நகங்குண்டது. நகரத்துக்கு மேல் நகரமாகப் பல முழுமையாகச் சிதிலமடைந்தன. வெள்ளம், பூமி வெடிப்பு, வளைந்து முறுக்கிக் கொண்ட தண்டவாளங்கள், பாலங்கள் முதலியன அப்பிரதேசத்தின் தோற்றத்தையே உருமாற்றிவிட்டன. ஆயிரக் கணக்கானவர்கள் மாண்டனர். தமது மாநிலத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட வசதியாக ராஜேந்திர பிரசாத்தை விடுவிக்க வேண்டும் என்ற நல்ல புத்தி அரசுக்கு இருந்தது. சிறையிலிருந்தபடி ஸி. ஆர். பிரசாதுக்குத் தமது அனுதாபத்தைத் தந்தி மூலம் தெரிவித்தார்.

பிப்ரவரி 6ந் தேதி காலை ஏழு மணிக்கு ஸி. ஆர். விடுதலையானார். உடனே அவர் ஐம்பது மைல் தூரத்திலிருந்த திருப்பூருக்குக் காரில் பயணமானார். தமது தென்னகப் பயணத்தை ஏற்கனவே தொடங்கியிருந்த ஸி. ஆரின் நண்பர் — மகாத்மா அப்போது அங்குதான் இருந்தார்.

46. முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி பற்றிக் கருத்து வேற்றுமைகள்

முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி அளித்துச் சட்டசபைகளில் மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்களை வழங்குகிற அரசின் திட்டம் சிக்கலான ஒரு பிரச்னையாயிற்று. இப்போது ஜின்னாவின் தலைமையை ஏற்றுக் கொண்டிருந்த முஸ்லிம்கள் காங்கிரஸ் இதனை ஆமோதிக்க வேண்டும் என்றே பொதுவாக எதிர்பார்த்தார்கள். இதற்கு மறு பக்கமாக ஹிந்துக்களான காங்கிரஸ்காரர்களின் ஒரு பகுதியினர் — மாளவியா, எம். எஸ். ஆனே தலைமையில் இயங்கியவர்கள் — அரசின் இந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் சந்தேகத்துக்கிடமின்றி நிராகரிக்க வேண்டும் என்று கருதினர்.

இத்தகைய அபிப்பிராய மாறுபாட்டினால் பிளவுபட்டிருந்த காங்கிரஸ், அரசின் திட்டத்தை ஏற்கவுமில்லை, நிராகரிக்கவுமில்லை. மாறாக, சமரசத் தீர்வு காண வழிமுறைகளைத் தேட வேண்டும் என வற்புறுத்தியது. மாளவியா பிரிவினருக்கு இது போதுமானதாக இல்லை. அவர்கள் பிளவுபட்டுப் பிரிந்து போய், தேசியக் கட்சி என ஒன்றை உருவாக்கினர். ஆயின் காங்கிரஸ்காரர்களும் சரி, தேசியக் கட்சியினரும் சரி, தேர்தலில் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதாக ஓர் உடன்பாடு அவர்களிடையே இருந்தது.

இதே காலகட்டத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயணனும் மற்றவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியால் உருவாகி விருந்த சோஷலிஸப் பிரிவினிடமும் காங்கிரஸ் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டியிருந்தது. அப்பிரிவின் சார்பாக எம். ஆர். மசானி ஸி. ஆருக்கு எழுதி அவரது ஒத்துழைப்பைக் கோரியிருந்தார். "உங்கள் கோஷ்டியின் கருத்துக்களுடன் ஒத்துப் போகவோ அதில் சேரவோ முடியாத நிலையில் தான் இருப்பதற்காக வருந்துகிறேன்" என்று ஸி. ஆர். டதில் எழுதினார்.

சோஷலிஸ்டுகளின் திட்டங்கள் பற்றி நேரடியாக எதுவும் சொல்லாமல் அவர் ஒற்றுமைக்கு வாதாடினார்.

"முதலாளித்துவ இயந்திரங்களுள் மிகவும் சக்தி வாய்ந்த ஒன்று இன்றைய இந்தியாவில் அரசுதான். எனவே முதலாளித்துவத்துக்கு மாற்றான ஓர் அமைப்பை விரும்புகிறவர்கள் அனைவரும் அந்த இயந்திரத்தை உடைக்கத் தங்கள் சக்திகளைப் பாதுகாத்து ஒருங்கிணைவதுதான் புத்திசாலித்தனமேயன்றி, எந்த ஒரு முக்கிய பிரிவின் ஆதரவையும் இழந்துவிடுகிற மாதிரியான காரியம் எதையும் செய்யக் கூடாது."

காங்கிரஸின் புதிய தீர்மானங்களை ஒட்டி ஜூன் மாதத்தில் அரசு காங்கிரஸின் பல அங்கங்கள் மீது இருந்த தடை உத்தரவுகளை நீக்கியது. ஆனால் வடமேற்கு எல்லைப் புற மாகாணத்தில் கான் சகோதரர்கள் தலைமையில் இயங்கிய சிவப்புச் சட்டைக்காரர்களுக்கு இருந்த தடை மட்டும் நீக்கப்படவில்லை.

"ஒவ்வொரு செஞ்சட்டை வீரனும் துராணைக் கையில் ஏந்தி அஹிம்சையைக் கடைப்



• பிரசாத்துடன் ராஜாஜி

பிடிப்பதாகச் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறான்'' என்பதைச் சுட்டிக் காட்டிய ஸி. ஆர்., ''காங்கிரஸை ஆதரிக்கிற முஸ்லிம்களுக்கும் மற்ற காங்கிரஸ்காரர்களுக்கு மிடையே பிளவை உண்டாக்க அரசு முயன்று கொண்டிருக்கிறது'' என்று குற்றம் சாட்டினார். ''அஹிம்சையைக் கடைபிடிக்கிறார்களோ, இல்லையோ, காங்கிரஸில் சேர்ந்ததற்காகவே முஸ்லிம்கள் அவதிப்பட வேண்டும் என்று அவர்கள் மனத்தில் பதிய வைக்க அரசு முயலுகிறது'' என்றார்.

சட்ட மறுப்புச் செய்து சிறை சென்றிருந்த காங்கிரஸ் அங்கத்தினர்கள் இப்போது விடுபட்டு வந்து கொண்டிருந்தார்கள். பட்டேல் கூட விடுதலை அடைந்திருந்தார். காங்கிரஸ் அதன் புதிய செயல் திட்டங்களுக்கு ஏற்பப் புனரமைப்புப் பெற வேண்டியிருந்தது.. தேசிய நோக்கில் இந்தப் புனரமைப்பை கவனிக்குமாறு மகாத்மா ஸி. ஆரைக் கேட்டுக்கொண்டார். ஆனால் ஸி. ஆர். தென்னகத்துக்கு மட்டுமே பொறுப்பேற்றார். அதே ஆண்டில் பின்னால் நடக்கவிருந்த தேர்தலில் தெளிவான வெற்றியைப் பெற்றுக் காட்ட வேண்டும் என விரும்பினார். பலப் பரீட்சையை உற்சாகத்துடன் எதிர் நோக்கினார்.

ஆனால் ஒரு கவலையும் இருந்தது. கடந்த ஆண்டில் மகாத்மா பெற்றிருந்த சிறைத் தண்டனை ஆகஸ்டு ஆரம்பத்தில் முடிவுற இருந்தது. உடல் நிலை காரணமாக காந்தி விடுவிக்கப்பட்டிருந்தாலும் அந்தக் கால கட்டம் முடியும்வரை அவர் தம்மைக் கைதியாகவே பாவித்துக் கொள்வார். அதன் பிறகும் ஒருவேளை அவர் சத்தியாக்கிரஹியாகவே விளங்கலாம். ஏனெனில் சத்தியாக்கிரஹத்தை நிறுத்தி வைத்தபோது தமக்கு மட்டும் விதிவிலக்கு அளித்துக் கொண்டிருந்தார் அவர்.

மகாத்மா இத்தருணத்தில் மீண்டும் சிறை சென்றால் அது அவருடைய ஆரோக்கியத்தைப் பாதிப்பதோடு அல்லாமல் தேசத்தின் அரசியலுக்கும் தீங்கு விளையும் என்று நம்பிய ஸி. ஆர். அவ்வாறு நேராதிருக்க மிகவும் பாடுபட்டார். மகாத்மாவுடன் வார்தாவில் இதற்காக வாதாடினார். காந்திஜி சிறைக்கு வெளியே இருப்பதை அவசியமாக்குகிற மிக முக்கியமான பணிகளுக்கு ஒரு பட்டியல் தயாரிக்குமாறு அன்ஸாரியைக் கேட்டுக் கொண்டார். பட்டேலுக்கு ஸி.ஆர். எழுதினார்:

''பாபுவுடன் நீண்ட பேச்சு வார்த்தைகள் நடத்தினேன். அவரது யோசனைகள் மிகவும் சிரமமானவையாக எனக்குத் தோன்றுகின்றன. ஆனால் ஒன்று தெளிவாகிறது. அவர் சிறைக்குப் போய்விடக் கூடாது. அப்படிச் சென்றால் நிலைமை பயங்கரமாகிவிடும்.''

சிறைவாசத்தை வலியச் சென்று ஏற்பதில்லை என்று மகாத்மா ஒப்புதலளித்தார். ''அவர் சிறைக்குப் போகமாட்டார் என்பது அநேகமாக நிச்சயமானது போலத்தான்'' என்று நிம்மதியுற்ற மனத்துடன் ஸி. ஆர். தேவதாஸுக்கு எழுதினார். ஆனால் இன்னது செய்வார் என்று யாராலும் அநுமானிக்க முடியாத மகாத்மா, திடும்மென்று தாம் காங்கிரஸிலிருந்து ஓய்வு பெறஎண்ணியிருப்பதாகச் சொன்னார். ஸி. ஆர். இந்த யோசனையை எதிர்த்ததில் வியப்பில்லை. பட்டேலும் எதிர்த்தார். ஆனால் நீண்டகாலத்துக்கல்ல. காந்தியின் இந்த முடிவுக்கு முக்கிய காரணம், தாம் காங்கிரஸில் இருப்பதே அதில் உள்ள மற்றவர்கள் மனம் திறந்து தம் அபிப்பிராயங்களைக் கூற முடியாதபடி அமுக்கி விடுகிறது என்பதுதான். அந்த அமைப்பைச் சுதந்திரமாக இயங்க விட வேண்டும், அதற்கு ஓர் அதிர்ச்சியும் தர வேண்டும் என்பது அவர் நோக்கம்.

மகாத்மாவை காங்கிரஸிலிருந்து விலக வேண்டாம் என்று வற்புறுத்துவதில் வார்தா பேச்சு வார்த்தைகள் தோல்வியே கண்டன. ஆயினும் ஸி. ஆர். தொலைவிலிருந்தபடியே அன்புடன் கடிந்து கொண்டிருந்தார். அக்டோபரில் தென் ஆப்பிரிக்க தளபதி ஸ்மட்ஸ் காந்திக்கும் அயல் நாட்டுக் காரிய தரிசிக்கும் இடையில் ஒரு கௌரவமான ஒப்பந்தம் ஏற்படுத்த முயல்வார் என்பதாக ஆண்ட்ரூஸ் செய்தி கொணர்ந்தார். ''இந்தச் செய்தியை நோக்குமிடத்து மகாத்மா இப்போது ஓய்வு பெறுவது அசந்தர்ப்பமாக இருக்கும்'' என்று ஸி.ஆர். அவருக்குத் தந்தி அனுப்பினார். அவர் தந்தியில் மேலும் கூறினார்: ''நீங்கள் செய்ய நினைத்துள்ள காரியம் எல்லாரிடத்திலும் மாற்ற முடியாத அளவில் தோல்வி மனப்பான்மையை உண்டாக்கி விடும்''.

காங்கிரஸிலிருந்து காந்தி ஓய்வு பெற்று விட்டால் அந்த ஸ்தாபனத்தின் தேர்தல் திட்டம் துண்டு துண்டாகிப் பொடித்துப் போகும் என்பது ஸி. ஆரின் சிந்தனையோட்டமாக இருந்தது. மகாத்மாவுக்கு அவர் எழுதினார்:

''நீங்கள் இப்பொழுது காங்கிரஸிலிருந்து விலகியிருந்து அதே நேரத்தில் உங்களையோ அல்லது அதனையோ அல்லது இரு தரப்பினையுமோ அரசியல் ரீதியாக முக்கியத்துவம் உள்ளதாகவும் செய்ய முடியும் என்று எண்ணினீர்களானால் நீங்கள் நிச்சயம் ஏமாற்றத்துக்குள்ளாவீர்கள்!

(தொடரும்)

தமிழாக்கம்: இ. ராஜேந்திரன்

மனைவி: இப்படி விசிலடிச்சி கூப்பிடுறதை யார் கிட்டேயிருந்து பழகினீங்க?
கணவன்: குக்கரிடமிருந்து.

—எம். சாம்பமூர்த்தி



ஈறு உபாதைகளின் முதல் அறிகுறிகள்?



காரை (Plaque)
எப்போதும் உங்கள் பற்களையும் ஈறுகளையும் சுற்றி கண்ணுக்குப் புலப்படாத கிருமிகளின் மெல்லிய படிவங்கள் தோன்றிய வண்ண மிருக்கின்றன. இவற்றை அலட்சியம் செய்தால் இந்த படிவங்கள் காரையாக உருப்பெறுகின்றன.

பற்காரை
பற்களின் அடிபாகத்தில் இது படிந்து, ஈறுகளில் எரிச்சல் உண்டாக்கி அவற்றை வீங்கச் செய்கிறது. காலப்போக்கில் ஈறுகளிலும் எலும்புகளிலும் சரிவு ஏற்படுத்தி பற்களை விழச்செய்கிறது.

இரத்தம் கசியும் ஈறுகள்
பிரஷ் செய்யும் போது பலவீனமாகவும் மிருதுவாகவும் உள்ள ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். இதனால் வலி ஏற்படாவிடினும் இந்த ஈறுகளின் இரத்தக் கசிவு பெரும் உபாதைகளில் கொண்டு விடலாம்.

கவர்ச்சியான ஆரஞ்சு வண்ண பேக்கில் கிடைக்கிறது.


பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட இந்த டூத்பேஸ்டினால் பயனடையுங்கள்.

டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஸ்பெஷல் ஃபார்முலா
டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஃபார்முலாவின் திறமிக்க அஸ்ட்ரிஞ்ஜன்ட் செயல் உங்கள் ஈறுகளை வலுப்படுத்தி ஈறு உபாதைகளைத் தடுக்க உதவுகிறது. போர்ஹென்ஸ் கொண்டு பிரஷ் செய்வதால் உங்கள் வாய் தூய்மையாக, நன்னிலையில் மேலும் நலமுடன் திகழ்கிறது.

பல் டாக்டர்கள் கூறுகிறார்கள்
தவறாமல் பற்களை பிரஷ் செய்வதும் ஈறுகளைத் தேய்த்துக் கொடுப்பதும் ஈறு உபாதை, பற்சிதைவுகளைத் தடுக்க உதவும். ஆகவே, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் மற்றும் போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத் பிரஷ் கொண்டு பற்களைத் துலக்குங்கள், ஈறுகளைத் தேய்த்துக் கொடுங்கள்.



ஈறுகள் கெட்டால் உடல் நலம் கெடும்




இலவசம்! "உங்கள் பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். 25 பைசா தபால் தலையுடன் இம்முகவரிக்கு எழுதுக: போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, த. பை. எண் 11463, டிபார்ட்மென்ட் P 197-210, பம்பாய் 400020 எம்மொழியில் வேண்டுமென்பதைத் தெரிவிக்கவும்


போர்ஹென்ஸ்
பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட

210-F-303 TM

கங்கா பிரிட்ஜ், கான்பூர்.



ஓவர்சீஸ் கம்யூனிகேஷன் ஸர்வீசஸ் 76.25 மீ



கங்காவின் மேல் ஒரு பாலம்

ஒரு மிகப்பெரிய 18 மாடிக் கட்டடம்

டிஸ்கான்

உபயோகித்து இந்த இரண்டும் ஸ்டீலே 50% மிச்சப்படுத்திற்று!

டிஸ்கான் கோல்டு-ட்விஸ்டெட் ரிப்டு ரீயின்ஃபோர்ஸ்டு பார்ஸ், இரட்டிப்பு நன்மை அளிக்கின்றன. சாதாரண மைல்டு ஸ்டீல் பார்ஸை விடச் சிறந்த ரீயின்ஃபோர்ஸ்மென்ட்டையும் ஸ்டீலில் அதிகபட்ச மிச்சத்தையும்தான்.

டாடா ஸ்டீலினுடையதும், ஸ்ட்ரக்சரல் என்ஜினியரிங் ரிஸேர்ச் சென்டர் (SERC), மதுரையின் ஒத்துழைப்பாலும், உள்நாட்டுப் பொருள்களால் அபிவிருத்தியடைந்த இந்த பார்கள் டாடா ஸ்டீலினுடையதும் அவர்களது சப் லைசென்ஸிகளாலும் **டிஸ்கான் 42, டிஸ்கான் 60** என்ற இரண்டு தரங்களில் தயாரிக்கப் படுகின்றன. 6 mm லிருந்து 36 mm வரை டயாமீட்டரில் கிடைக்கின்றன. டிஸ்கான் பார்களின் விசேஷ ரிப்



அமைப்பும் பெரிய அளவில் தாங்கக் கூடிய மேற் பரப்பு சாதாரண மைல்டு ஸ்டீல் பார்களை விட நூற்றுக்கு நூறு இறுக்கிய சக்தியைத் தருகிறது. டிஸ்கான் பார்ஸ் மிக அதிகமாக இறுக்கப்பட்டு விசேஷ தாங்கும் சக்தியையும் கொண்டது.

இவை மொத்தும் பெரிய பெரிய கட்டடங்கள், பாலங்கள், அணைக்கட்டுகள், ரிசர்வாயர்ஸ், அடித்தளங்கள், நீர்ப்பாசனம் மற்றும் மின் சக்தி அமைப்புகள் போன்ற முரட்டுக்கட்டடங்களுக்குச் சிறந்த சிக்கனமிருக்க தேர்ந்தெடுப்பாரும்.

மற்ற விவரங்களுக்கு
தயவுசெய்து எழுதுங்கள் :
தி டைரக்டர் ஆஃப் மார்க்கெட்டிங்
தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல்
கம்பெனி லிமிடெட்,
43 சௌரிங்கி ரோடு,
கல்கத்தா—700 071

TN 9984-R

டாடா ஸ்டீல்

கருத்து பதில்கள்!





✖ ஆர். எம். பாலகிருஷ்ணன், ஆத்தூர்

கே. நீண்ட நாட்களாக இரு பத்திரிகைகளை மட்டும் தவறாமல் படிக்கிறேன். அவை என்ன என்று கூறமுடியுமா?

ப: முடியும். ஆனால் கூறமாட்டேன். உங்களுக்குத் தெரிந்த விஷயத்தை உங்களுக்கே கூறுவதில் என்ன பயன்?

✖ பி. எஸ். பாஸ்கரன், சென்னை-4

கே. மார்கழிக் குளிரில் பச்சைத் தண்ணீரில் குளிப்பது சுகமா அல்லது வெந்நீரில் குளிப்பது சுகமா?

ப: குளிக்காமல் இருப்பதே!

✖ க. இராமசாமி, அவிநாசி

கே. ஸ்ரீ ராமஜெயம் எழுதினால் யாருக்கு என்ன உபயோகம்?

ப: உங்களுக்கேதான். சிந்தனையை ஒரே எண்ணத்தில் நிறுத்துவது சுலபமல்ல. பத்து நிமிஷம் ஸ்ரீராமஜெயம் எழுதும் போது ஒரே ஒரு நிமிஷமாவது அந்த வார்த்தையைத் தவிர வேறு எதையும் எண்ணாமல் இருக்க முடியுமானால் அதுவே பெரிய சாதனை. பத்து நிமிஷமும் அதையே எண்ண முடிந்தால், சிந்தனையை அலைய விடாமல் கட்டுப்படுத்த முடிந்தால் நீங்கள் மாபெரும் ஞானி. ஸ்ரீராமஜெயம் கூட வேண்டாம். பத்து நிமிஷம் ரஜனி காந்தையே எண்ணிக் கொண்டிருக்க முடிகிறதா, பாருங்கள். சிந்தை எனும் வெறிக் குதிரையை அடக்கினால், நீங்கள் வெற்றிப் பாதையில் சுலபமாகச் சவாரி செய்து கொண்டு போகலாம்.

✖ நெல்லைக்குரலோன், பொட்டல் புதூர்

கே. புலியைப்பார்த்துப் பூனை என்று ஏமாந்து இருக்கிறீர்களா?

ப: இல்லை. ஆனால் பூனையைப் பார்த்துப் பெரிய புலி என்று ஏமாந்துள்ளேன். பலர் தங்களைப் பற்றி அளக்கிற அளப்புக்களையும் பிரதாபங்களையும் கேட்டு வியந்து 'பெரிய புலி' என்று மூக்கில் விரலை வைத்திருக்கிறேன். நம்மில் பாதிப்பேர் சொல்லால் புலிகள்; செயலால் பூனைகள் தான்.

✖ ரவிகுமார், நெய்வேலி

கே. துரதிர்ஷ்டம் என்பது என்ன?

ப: டில்லி கிரிக்கெட் டெஸ்டில் விஸ்வநாத் அனாவசியமாக 'அவுட்' ஆனாரே அதுதான். இவர் பௌலிங் பக்கம் நின்று கொண்டிருந்தார். கவாஸ்கர் பந்தை அடிக்க டௌலர் சிக்கந்தர் பக்த் பந்தைப் பிடிக்க முயல அது அவர் கையில் பட்டுச் சடாரென்று திசை திரும்பி விஸ்வநாத் இருந்த பக்கம் ஸ்டம்பின் மேல் மோதியது. அந்தச் சமயம் விஸ்வநாத் க்ரீஸை விட்டு வெளியே இருந்ததால் ரன் அவுட் ஆகிவிட்டார். இதுதான் துரதிர்ஷ்டம் என்பது! (இம்மாதிரியே சென்னை டெஸ்டில் ஆஸ்திரேலிய வீரர் போர்டர் 162 ரன் எடுத்திருந்த சமயம் ரன் அவுட் ஆனார்!)

✖ எஸ். தேவாதிராஜன், கும்பகோணம்

கே. பிராமண சமுதாயத்தை ஏளனம் செய்தே திரைப்படங்கள் எடுக்கிறார்களே ஏன்?

ப: காய்த்த மரம்தான் கல்லடி படும் என்ற பழமொழியைக் கேட்டதில்லையா? பிராமண சமுதாயத்துக்குக் காய்த்துப் போய்விட்டதால் ஏனைக் கல்லடிகள் அதற்கு ஊறு விளைவிக்காது. மேலும் இதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

✖ கேசவன், கழுகாணிபுரம்

கே. நீதிபதி அமரும் நாற்காலியில் உள்ள மூட்டைப் பூச்சியும், சினிமாதியேட்டர் மூட்டைப் பூச்சியும் சந்தித்தால் என்ன பேசிக் கொள்ளும்?

ப: ''நீதிபதி'' மூட்டைப் பூச்சி பிரலாபிக்கும்: உனக்கென்னடா, அதிர்ஷ்டசாலி. டெய்லி புதுப் புது ருசி!

✖ முருகேசபாண்டியன், கரம்பாடி

கே. யார் சார் இந்த அரசு?

ப: தமிழ்ப் பத்திரிகை உலகை ஆட்சி புரியும் அரசர் இவர்!

✖ கே. நரேஷ், தூத்துக்குடி

கே. பத்திரிகைகளுக்கு எழுதும் ஆர்வம் உண்டு. ஆனால் அது தபால் குவியலில் தொலைந்து விடுமோ என்ற பயம் உண்டு. என்னைப்பற்றிய கணிப்பு என்ன?

ப: நீங்கள் ஆர்வமுள்ள பயந்தாங்கொள்ளி!

✖ மாலினி, சென்னை-17


கே. முடிவே இல்லாதது எது?

ப: தினத்தந்தியில் வரும் 'கன்னித் தீவு' படக் கதை. 17 வருடங்களாக வருவதாகக் கேள்வி.

ரூ. 5 பரிசு பெறுபவர்:

க. ராமசாமி
9, வடக்குரத வீதி,
அவிநாசி-638654

ரஷ்யச் சிரிப்பு



Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of
Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan
Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேயம் காசு